

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 206 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 24 – வியாழக்கிழமை 07 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 206 : Thiruvalluvar Year - 2055 - Maasi 24 - Thursday 07 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## “உங்கள் நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன்!

# அதன் மற்றுமோர் அடையாளம்தான் ‘நீங்கள் நலமா’ திட்டம்!”




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (6.3.2024) முகாம் அலுவலகத்திலிருந்து, முதல்வரின் முகவரி துறையின் கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் புதுமை திட்டமான “நீங்கள் நலமா” என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 7–**

**உங்கள் நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன்; அதன் மற்றுமோர் அடையாளம்தான் “நீங்கள் நலமா?” திட்டம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நாள்தோறும் பார்த்துப் பார்த்து எத்தனையோ முத்திரைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். அப்படியொரு திட்டம்தான் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள ‘நீங்கள் நலமா?’ என்ற புதிய திட்டம்!

புதிய திட்டத்தின் இந்தத் தலைப்பே, மக்களின் மீதான எங்களது கனிவான சிந்தனையை, அன்பான அக்கறையைக் காட்டும். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நலமாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கம். மக்கள் நல்வாழ்வுக்காக வகுக்கப்படும் திட்டங்களின் பயன்கள் உங்களுக்கு வந்து சேர்வதை உறுதி செய்வதற்காக இந்த “நீங்கள் நலமா” என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

இதற்கு முன்பு தொடங்கி வைத்து மக்களின் வாழ்வினை மேம்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்களைப் பட்டியலிட வேண்டுமென்றால்,

★ மகளிர் விடியல் பயணம்

★ புதுமைப் பெண்

★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

★ கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

★ இல்லம் தேடிக் கல்வி

★ மக்களைத் தேடி மருத்துவம்

★ ஒலிம்பிக் தேடல்

★ நான் முதல்வன்

★ உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

★ முதல்வரின் முகவரி

★ கள ஆய்வில் முதலமைச்சர்

என இப்படி நான் அடுக்கிக்கொண்டே இருக்க முடியும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் கோடிக்கணக்கான மக்களை மகிழ்வித்து வரும் திட்டங்கள். இவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் அது ஒவ்வொரு குடும்பத்தையும் ஒவ்வொரு தனிமனிதரையும் மேம்படுத்தும் திட்டங்களாகும்.

**மக்களின் மகிழ்ச்சியே அரசுத் திட்டங்களின் வெற்றி!**

நமது திராவிட மாடல் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களால் பலன் அடையாதவரே இல்லை. நான் செல்லும் இடங்களில் எல்லாம் என்னைச் சந்திக்கும் மக்கள் முகங்களில் பார்க்கும் மகிழ்ச்சியில் இத்திட்டங்களின் வெற்றியைக் காண்கிறேன்.

பயன் பெற்ற மக்களின் புள்ளிவிவரம் எனப் பார்த்தால்,

★ “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்” மூலம் ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாகப் பெறுகிறார்கள்.

★ “விடியல் பயணத் திட்டம்” மூலம் மகளிர் 445 கோடி முறை பயணித்து மாதம் ரூ.888 வரை சேமித்துப் பயனடைகின்றனர்.

★ “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தால் ஒரு கோடிப் பேர் இதுவரை பயனடைந்து உள்ளனர்.

★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் நாள்தோறும் 16 லட்சம் மாணவர்கள் வயிறார காலைச் சிற்றுண்டி உண்கிறார்கள்.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரிலான “புதுமைப்பெண்” திட்டத்தின் பயனாக 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்று பட்டதாரிகளாக உருவாகப் போகிறார்கள்.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## பொய் பேசும் பிரதமர் மோடி !

**சில நாட்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்து பேசிய மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள், மாநில அரசுக்குத் தராமல் மக்களுக்கு நேரடியாக நிதி வழங்கி வருவதாக அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள். எந்த மக்களுக்குக் கொடுத்தார் என்பதைச் சொல்லி இருந்தால் அந்த மக்களுக்குக் கிடைத்ததா என்று கேட்கலாம். இரண்டு மாபெரும் இயற்கை பேரிடரை எட்டு மாவட்டத்து மக்கள் சந்தித்தார்கள். இதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கேட்டோம். அதற்கு 1 ரூபாயையாவது ஒதுக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்களைச் சொல்வது?**

## மாநகராட்சி – நகராட்சி – பேரூராட்சிகளில்

# ரூ.1996.50 கோடியில் 215 அடிப்படை வசதித் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மார்ச் 7 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புடன் பல்வேறு மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் ரூ.1,996.50 கோடி மதிப்பீட்டில் 215 அடிப்படை வசதி திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.**

இது குறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: –

நகர்ப்புர பகுதிகளில் முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதி செய்வது, அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது, கழிவுநீர், கசடு மேலாண்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறுபயன்பாடு, கழிவு நீர் நிலைகளை புனரமைப்பது மற்றும் பசுமை வெளிகள், பூங்காக்கள் உருவாக்குவது உள்ளிட்ட நோக்கங்களைக் கொண்டு ஒன்றிய, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பங்களிப்புகளுடன், அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 (அம்ரூத் 2.0) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்சார்பில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ், ரூ.23.59 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை நகராட்சியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 24x7 குடிநீர் வழங்கல் முன்னோடித் திட்டத்தினை (24x7 water supply system to the selected pilot water zones) செயல்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், பல்வேறு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மொத்தம் ரூ.16.68 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 34 பணிகளும், ரூ.4.70 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள், பூங்காக்களை உருவாக்குவதற்கான 15 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளன.

மேலும், பல்வேறு பேரூராட்சிகளில் மொத்தம் ரூ.25.37 கோடி மதிப்பீட்டில் நீர்நிலைகளை புனரமைக்கும் 93 பணிகளும், ரூ.13.03 கோடி மதிப்பீட்டில் பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்களை உருவாக்குவதற்கான 68 பணிகளும் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

மேலும், பொது மற்றும் தனியார் பங்களிப்பின் [Public Private Partnership Projects (PPP)] கீழ் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரி யத்தினால் சென்னை பெருநகரத்திற்குட்பட்ட மண்டலம் X மற்றும் மண்டலம் XIIIல் 24x7 குடிநீர் வழங்கல் திட்டத்தை செயல்படுத்த ரூ.760.00 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் கழிவுநீரை சுத்திகரித்து சிட்கோ (SIDCO) எஸ்டேட்டில் உள்ள தொழிற்சாலைகளுக்கு, நாளொன்றுக்கு 25 மில்லியன் லிட்டர் அளவுக்கு மறுபயன்பாட்டு நீரை வழங்கும் பொருட்டு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.245.00 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாநகராட்சியில் சில தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டுகளில் முன்னோடி திட்டமாக 24x7 குடிநீர் வழங்கல் திட்டத்தை செயல்படுத்த ரூ.150.00 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சேலம் மாநகராட்சியில் 24x7 குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திட ரூ.758.13 கோடி மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.1,913.13 கோடி உத்தேச மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்மூலம், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.1,996.50 கோடி மதிப்பீட்டில் 215 பணிகளை செயலாக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகரங்கள், நீர்நிலை களை மேம்படுத்தவும் அதன் மூலம் குடிநீர் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் கழிவுநீரை பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கவும் ஏதுவாக அமையும். மேலும், பசுமை வெளிகள் மற்றும் பூங்காக்கள், இந்நகர மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும் வழிவகுக்கும்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## 9 வயதுயை சிறுமி பாலியல் கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து

# புதுச்சேரி தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவிப்பு!

*சென்னை, மார்ச் 7-*

பெண்ணுரிமை, பெண் குழந்தைகள் நலம் என மேடை தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொக்கரித்து வரும் பா.ஜ.க. கட்சி ஆட்சியின் அவலத்தைப் பார்த்து உலகமே சிரிக்கிறது.

புதுச்சேரியில் 9 வயது சிறுமி பாலியல் கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு சாக்கடையில் தூக்கி வீசப்பட்டதை எதிர்த்து புதுச்சேரி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் புதுச்சேரி மாநிலத்தில் - பாஜகவின் மாநில முன்னாள் தலைவரும் - மகளிருமான டாக்டர் தமிழிசை துணை நிலை ஆளுநராக பொறுப்பு வகித்து வரும் புதுச்சேரி மாநிலத்தில் முத்தியால் பேட்டை பகுதியில் 9 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததுடன், அச்சிறுமியை கழுத்தை நெறித்து படுகொலை செய்து வேட்டியில் மூட்டையாக கட்டி சாக்கடை கால்வாயில் தூக்கி வீசியுள்ள இரக்கமற்ற- இதயமற்ற கொடுமை நடந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

**இதுதான் மோடி அரசின் சாதனையா....?**

இந்தியா முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் பெண்ணுரிமை, பெண்குழந்தைகள் நலம் என மேடை தோறும் பொய் மூட்டைகளை அவிழ்த்து கொக்கரித்து வரும் பா.ஜ.க. கட்சி ஆட்சி நடக்கும் மாநிலத்தில், அதுவும் மூச்சு முன்னூறு முறை “பா.ஜ.க.வில் பெண்ணுரிமை” கூவும் புதுச்சேரி ஆளுநர் டாக்டர் தமிழிசை ஆளுநராக உள்ள மாநிலத்தில், உலகத்தில் எங்கும் நடைபெறாத ஒரு அவலம்- அதுவும் பெண் சிறுமிக்கு கொடுமை நடந்துள்ளது.



**இதுதான் பா.ஜ.க. கூறும் பெண் குழந்தைகள் வளர்ச்சியா?**

2024 ஜனவரி 24 அன்று தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் “பெண் குழந்தைகள் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது” என்று தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டார். இதுதான் பா.ஜ.க.வினர் கூறும் பெண் குழந்தைகள் வளர்ச்சியா...? என கேட்கிறேன்.

அத்துடன், “உலகத்தையே பா.ஜ.க. ஆட்சிதான், இந்தியாவின் பக்கம் திரும்பி பார்க்க வைத்துள்ளது” என்று புளுகிக் கொண்டிருக்கும் பா.ஜ.க. கட்சியினரே, நீங்கள் சொல்வது உண்மைதான். ஒன்பது வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து, கொலை செய்யப்பட்டு சாக்கடையில் தூக்கி வீசப்பட்ட இந்நிகழ்வைப் பார்த்துதான் உலகமே, பாஜக ஆளும் புதுச்சேரி மாநிலத்தின் பக்கம் திரும்பி காரி உமிழ்ந்து கொண்டிருக்கிறது. புதுச்சேரி பா.ஜ.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த பாலியல் வன்கொடுமை உலகிற்கே படம்பிடித்துக் காட்டியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்திய பிரதமர் மோடி அவர்கள், இந்தியா முழுவதும் பெண் குழந்தையை காப்பாற்றவும், பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கவும் 2015-ல் பிரதமர் மோடி அவர்கள் துவக்கிய “பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ” திட்டத்தை துவக்கினார். ஆனால் இன்று பா.ஜ.க. ஆட்சியில் நடப்பதோ பாலியல் வன்கொடுமை - அதுவும் சின்னஞ்சிறு சிறுமியின் மனிதாபிமானமற்ற கொலை!

**பாரதியார் உலவிய மண்ணில் அவலம்!**

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்று முழக்கமிட்ட மகாகவி பாரதி உலவிய மண்ணில், ஒரு பெண் சிறுமிக்கு ஏற்பட்ட பாலியல் வன்கொடுமையை, காட்டுமிராண்டித்தனமான கொலையையும்- பெண்களை பாதுகாக்கத் தவறிய பா.ஜ.க. ஆட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடுங்கண்டனத்தை தெரிவிப்பதோடு, புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



‘எனக்கு வாய்த்த இன்னோர் அண்ணன்’ என்று தலைவர் கலைஞர் அவர்களால் அன்பு பாராட்டப் பெற்ற இனமானத் தமிழ்த் தென்றல் **பேராசிரியர்** அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 07-03-2024

# எல்லாம் தெரிந்த கால்டுவெல்லும் எதுவும் தெரியாத ஆர்.என்.ரவியும்!

“கால்டுவெல்லும் ஜி.யு.போப்பும் பள்ளிப் படிப்பே படிக்கவில்லை” என்று 200 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டுபிடித்திருக்கிறார் ஆர்.என். ரவி. அவர் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருப்பதாகவும், அவர் காலடியில் கால்டுவெல்லும் போப்பும் நின்று கொண்டிருப்பதாகவும் ஒரு நாளிதழ் கார்ட்டூன் போட்டுள்ளது.

**ஏழு மொழிகளைக் கற்றும் 15 மொழிகளில் வேர்ச்சொல் காட்டியும் சொல்லாய்வு செய்த திராவிட மொழி நூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதினார். “தமிழர் தொன்மையை உலகிற்கு அறிவித்தார் கால்டுவெல் பெருமகனார். தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்! செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்! நானோ அதனை மரமாக வளர்த்து வருகிறேன்” - என்பார் பாவாணர். இதெல்லாம் ஆரியக் கூட்டத்துக்கு எப்படித் தெரியும்?**

ஏன் இவர்களுக்கு கால்டுவெல் மீது கோபம்? எல்லா மொழிகளும் சமஸ்கிருதத்தில் இருந்து வந்தவை என்று ஆரியக் கும்பல் புரூடா விட்டுக் கொண்டிருந்தபோது, ‘இதில் இருந்து தனித்த அடையாளம் கொண்டது தமிழ். திராவிட மொழிக் குடும்பத்துக்கும் சமஸ்கிருதத் துக்கும் தொடர்பில்லை’ என்று நிறுவியவர் கால்டுவெல். தமிழ் தனித்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று சொன்னதால் கால்டுவெல் மீது இவர்களுக்கு கோபம். அவர் அதை எழுதாமல் போயிருந்தால் எல்லாமே சமஸ்கிருதத்தில் இருந்து வந்ததாக அவித்து தட்டி இருப்பார்கள்.

**திராவிட மொழிகள் ஒரு மொழியின் வட்டார வழக்குகள் அல்ல, திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து தனித்து நிற்பவை, ஆரியருக்கு முன் வாழ்ந்தோருடன் தொல் திராவிடர் கொண்டிருந்த அரசியல் சமூக உறவுகள், திராவிடர்களின் ஆரியத்துக்கு முந்தைய நாகரிகம், திராவிட இலக்கியங்களின் பழமை ஆகியவை பற்றி விரிவாக எழுதியவர் கால்டுவெல் என்பதால்தான் அவர்களுக்குத் தீராத கோபம்.**

**குமரி முனைக்கு தென்பகுதியில் தோன்றிய தமிழர்கள், இந்தியா முழுவதும் பரவினார்கள். இந்தத் தமிழரை வடமொழிக்காரர்கள் ‘திராவிடர்’ என்று அழைத்தனர் என்று கண்டு பிடித்தவர் கால்டுவெல். ஆரிய இலக்கணத்தில் இருந்தே தமிழ் இலக்கணம் உருவாக்கப்பட்டதாகச் சிலர் கதை விட்டார்கள். இதை மாற்றி தமிழுக்கு தனி இலக்கணம் உண்டு என்றும், ஆரிய இலக்கணம் வேறு, தமிழ் இலக்கணம் வேறு - என்றும் சொல்லி தலைக்கனத்தை உடைத்தவர் கால்டுவெல்.**

1814 ஆம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்தவர் கால்டுவெல். அங்குள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் படித்தவர். இலண்டன் மிஷனரியில் சேர்ந்தார். கிறித்துவம் பரப்புவதற்காகத் தான் 1838 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். 1841 முதல் நெல்லை மாவட்டம் இடையன்குடியில் தங்கி கிறித்துவப் பணியைச் செய்தார். இயல்பிலேயே மொழியியல் மீது ஆர்வம் கொண்டவராக இருந்ததால் தமிழ் கற்கத் தொடங்கினார். அது முதல் தமிழ்த் தொண்டை தொடங்கினார்.

A Comparative Grammar of the Dravidian or South Indian Family Languages என்ற நூலை 1856 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். ‘திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்று இதற்குப் பெயர். இவை மட்டுமல்ல; பல்வேறு புகழ்பெற்ற நூல்களை அவர் எழுதினார்.

★ A Political and General History of Tinnevelly, 1881- திருநெல்வேலி வரலாறு

★ The Tinnevelly Shanars: A Sketch of - Their Religion, and Their Moral Condition and Characteristics, as a Cast; with Special Reference to the Facilities and Hindrances to the Progress of Christianity Among Them, 1849 - திருநெல்வேலி நாடார்கள் பற்றிய குறிப்புகள்

★ The Inner Citadel of Religion - 1879 மதத்தின் உள்ளீடு

★The March of the Unsaved A religious tract. - 1896 - மதத்தின் வழியில்

★ Observations on the Kudumi 1867 குடுமிகள் பற்றி

★ The Relation of Christianity to Hinduism 1885. - கிறித்துவத்துக்கும் இந்து மதத்துக்கும் இடையேயான தொடர்பு - ஆகிய புத்தகங்களை ஆங்கிலத்தில் எழுதினார். தமிழிலும் பல்வேறு புத்தகங்களை அவர் எழுதி இருக்கிறார். நற்கருணை தியான மாலை, தாமரைத் தடாகம், ஞான ஸ்நானம், நற்கருணை, பரதகண்ட புராதனம் ஆகியவை அவர் எழுதிய தமிழ் நூல்கள். இதில் எதையாவது படித்திருப்பாரா ஆளுநர்? கால்டுவெல் பள்ளிப் படிப்பு படித்தால் என்ன? படிக்காமல் போனால் என்ன? அவர் புத்தகத்தை சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது.

**மூன்று முறை அவரது நாட்டுக்குப் போனார். அங்கேயே இருந்து விடாமல் தமிழ்நாடு திரும்பினார் கால்டுவெல். 77 ஆவது வயதில், 1894 ஆம் ஆண்டு கொடைக்கானல் மலையில் அவர் மறைந்தார். உடலை இடையன்குடியில் அடக்கம் செய்தார்கள். 53 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர் அவர். தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்பே இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரூ, ஐரிஷ், ஸ்காட்டிஷ், ஜெர்மன், போர்ச்சுக்கல், ஸ்பானியம் ஆகிய மொழிகளைக் கற்றவர் கால்டுவெல் என்கிறார் தமிழ் மொழியியல் அறிஞர் பா.ரா.சுப்பிரமணியம். இதெல்லாம் ஆளுநருக்குத் தெரியுமா?**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2024) முகாம் அலுவலகத்திலிருந்து, முதல்வரின் முகவரி துறையின் கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் புதுமை திட்டமான “நீங்கள் நலமா” என்ற திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் – முதலமைச்சரின் செயலாளர் – நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் அண்ணா தலைமையில் கழக ஆட்சி அமைத்த நாள்!

# மீண்டும் வரலாறு படைப்போம்! நாட்டைக் காப்போம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் உறுதி!

**சென்னை, மார்ச் 7-**

**‘பேரறிஞர் அண்ணா’ தலைமையில் ஆட்சி அமைத்த நாள் என்றும் ‘இந்நாளில் மீண்டும் வரலாறு படைப்போம்! நாட்டைக் காப்போம்’ என்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் உறுதி யுடன் குறிப்பிட்டுள்ளார்.**




இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**மார்ச் 6! இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சி தேர்தலில் வென்று ஆட்சியமைத்த நாள்!**

**பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளம்படை தெற்காசிய ஜனநாயக வரலாற்றில் ஓர் அமைதிப்புரட்சியை நிகழ்த்திக் காட்டிய நாள்!**

**அன்று தமிழ்நாட்டைக் காத்தோம்! இன்று மொத்த இந்தியாவின் கூட்டாட்சித் தன்மையையும் பன்முகத் தன்மையையும் மதச்சார்பின்மையையும் காக்க வேண்டிய பெரும் பொறுப்பை நம் தோள்களில் சுமக்கும் அளவுக்கு நம் வலிமை கூடியுள்ளது.**

**மீண்டும் வரலாறு படைப்போம்! நாட்டைக் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### நாமக்கல் மாவட்டத்திற்கு

# புதிதாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி உருவாக்கம்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

*சென்னை, மார்ச் 7-*

*நாமக்கல் மாவட்டம் 1997ஆம் ஆண்டு 2 வருவாய் கோட்டங்கள், 8 வட்டங்கள், 30 வருவாய் பிர்க்காக்களுடன் (Firka) உருவாக்கப்பட்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி, நாமக்கல் மாவட்டத்தின் மக்கள் தொகை எண்ணிக்கை 17,26,601 ஆகும். 169 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உள்ளிட்ட, பிற செயற்பதிவாளர்களின் கட்டுப் பாட்டில் இயங்கும் சங்கங்களையும் சேர்த்து மொத்தம் 816 சங்கங்கள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன.*

*இந்தியாவில், நாமக்கல் மாவட்டம், கோழிப்பண்ணை, லாரி பாடி பில்டிங், முட்டை உற்பத்தி, ஆமணக்கு எண்ணெய் பதப்படுத்தும் தொழில் ஆகிய பல முக்கிய தொழில்களுக்கு பெயர் பெற்றதாகும்.*

*சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சேலம் மாவட்டத்தில் 45 கிளைகள் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் 29 கிளைகள், என மொத்தம் 74 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தில் 98.70 கோடி ரூபாய் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் 55.15 கோடி ரூபாய் பங்குத்தொகையுடன் இவ்வங்கி செயல்பட்டு வருகிறது. மேலும், 202021 ஆம் ஆண்டில் 22.17 கோடி ரூபாய், 202122 ஆம் ஆண்டில் 20.37 கோடி ரூபாய் மற்றும் 202223 ஆம் ஆண்டில் 18.24 கோடி ரூபாய் என தொடர்ந்து இலாபம் ஈட்டியுள்ளது.*

*சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டு பகுதியில் உள்ள நாமக்கல் மாவட்டதிற்கென ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி உருவாக்கிட வேண்டும் என்பது இம்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஆகும்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலும், நாமக்கல் மாவட்ட விவசாயிகளின் நலன் கருதியும் மற்றும் பல்வேறு தொழில் துறையினர் பயன் பெறும் வகையிலும், பல்வேறு சிறப்புகளை கொண்ட நாமக்கல் மாவட்டத் திற்கென பிரத்தியேகமாக ஒரு புதிய மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியை உருவாக்கிட முதலமைச்சர் அவர்கள் ஆணை யிட்டதற்கிணங்க நேற்று (6.3. 2024) நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உருவாக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*



தாம்பரம் மாநகர திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையிலும் பகுதி கழக செயலாளர், மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் முன்னிலையிலும் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் பிரம்மாண்டமாக நடைபெற்றுது. இக்கூட்டத்தில் கழக பொருளாளர் நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் கழக மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி என்.சிவா கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் என்.மருதுகணேஷ், பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் க.அன்புசெல்வம், எஸ்.இந்திரன், ச.பிரதீப்சந்திரன் மற்றும் பி.கே.ஏ.சத்தியபிரபு, ஜெ.இன்சமாம், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட 10000த்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ‘ஏற்றத் தாழ்வு’ என்கிற இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற

# ‘திராவிட மாடல்’ தனித்துவமான முன்மாதிரியாகும்!

## ‘அவுட்லுக்’ ஆங்கில இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

புதுடெல்லி, மார்ச் 7–

**ஏற்றத்தாழ்வு என்கிற இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற ‘திராவிட மாடல்’ தனித்துவமான முன்மாதிரியாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘அவுட்லுக்’ ஆங்கில இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.**

**‘அவுட்லுக்’ (மார்ச் 2024) ஆங்கில இதழில் வெளியான முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது நேர்காணலின் தமிழாக்கம் வருமாறு:**

***கேள்வி:*** **2021–ஆம் ஆண்டு நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது சந்தித்த பெரிய சவால்கள் என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கோவிட் இரண்டாவது பேரலை என்கிற மிக நெருக்கடியான காலக்கட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றது. மக்களின் உயிரைக் காக்க வேண்டிய மிகச் சவாலான பணி எங்கள் முன் இருந்தது. ஆக்சிஜன் தட்டுப்பாடு உள்ளிட்ட அனைத்தையும் ஒருவார காலத்திற்குள் சமாளித்து, மீண்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டோம்.

ஆனாலும், முந்தைய ஆட்சியாளர்களின் மோசமான நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழல் முறைகேடுகளால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், அரசின் நிதி நிலைமையும் படுபாதாளத்திற்குப் போயிருந்தது.

மாநில உரிமைகளைப் பறிக்கின்ற ஒன்றிய அரசுக்கு அடிபணிந்தவர்களாக அ.தி.மு.க ஆட்சியாளர்கள் இருந்ததால், தமிழ்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பே சீரழிந்திருந்தது. இந்த நிலைமைகளை மாற்றி, தமிழ்நாட்டை மீண்டும் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்கிற எங்கள் இலட்சியமும் இலக்கும் சவால்களுடனேயேதான் தொடங்கின. அந்தச் சவால்களை எதிர்கொண்டு இன்று பல சாதனைகளுக்கு உரிமை கொண்டாடும் மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது.

### இந்தியாவின் மருத்துவத் தலைநகர் தமிழ்நாடு!

***செய்தியாளர்:*** **பல்வேறு புள்ளிவிவரங்கள், தரவரிசைப் பட்டியல்களின் அடிப்படையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது தமிழ்நாட்டின் நிலை என்ன? இந்த மூன்றாண்டுகளில் கண்கூடாக உங்கள் அரசு கொண்டு வந்துள்ள மாற்றங்கள் என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** கல்வி, மருத்துவம், அடிப்படைக் கட்டமைப்பு, பொருளாதாரம் இந்த நான்கும்தான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை அளவிடுவதற்கான அம்சங்கள்.

பள்ளிக்கல்வி முதல் உயர்கல்வி வரை தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. இல்லம் தேடிக் கல்வி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் ஆகியவற்றால் பள்ளிக்கல்வி பயில்வோரின் எண்ணிக்கையும், உயர்கல்விக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தற்போதைய பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆண் மாணவர்களுக்கான ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டமும் நல்ல பலனைத் தரும் என்று உறுதியாகச் சொல்லலாம். உயர்கல்விக்கான கட்டமைப்பில் தமிழ்நாடு எந்தளவுக்குச் சிறந்து விளங்குகிறது என்பதை அகில இந்திய அளவிலான தரவரிசைப் பட்டியலே நிரூபிக்கும். இந்தியாவின் முதல் நூறு உயர்கல்வி நிறுவனங்களில் அதிக இடங்களைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

மருத்துவக் கட்டமைப்பில் ‘இந்தியாவின் மருத்துவத் தலைநகர்’ என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. மக்களுக்கான மருத்துவச் சேவையில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் போன்ற திட்டங்கள் மனித உயிர்களின் மகத்துவத்தை உணர்த்தக்கூடியனவாக உள்ளன.

தொழில் வளர்ச்சியில் கடந்த 3 ஆண்டுகளில் பல கட்டங்கள் முன்னேறி இந்தியாவின் மூன்றாவது பெரிய மாநிலம் என்ற நிலைக்குத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 2023 நிதியாண்டில் முதலிடத்துக்குத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது. தொழில் முதலீடுகளுக்கு உகந்த மாநிலங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 14-ஆவது இடத்தில் இருந்த தமிழ்நாடு எங்கள் ஆட்சிக்காலத்தில் மூன்றாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. புதிய முதலீடுகள், புதிய தொழிலகங்கள், வேலைவாய்ப்புகள் என பெரிய முன்னேற்றம் அடைந்துள்ளோம். இந்தியாவில் மொத்தமாகப் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையில் தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் 40 விழுக்காடாக உள்ளது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற இலக்கை நோக்கிய பொருளாதார வளர்ச்சியை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்குமான சமச்சீரான வளர்ச்சியாகவும், பாலினச் சமத்துவம் கொண்ட வளர்ச்சியாகவும் கட்டமைத்து வருகிறோம்.

குனிந்து தேட வேண்டிய அளவில் இருந்த தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை மூன்றாண்டுகளில் நிமிர்ந்து பார்க்க வேண்டிய அளவுக்கு உயர்த்தியிருக்கிறது திராவிட மாடல் அரசு.

### திராவிட மாடல் தனித்துவமான முன்மாதிரியாகும்!

***செய்தியாளர்:*** **குஜராத் மாடலில் இருந்து திராவிட மாடல் எப்படி வேறுபட்டது என விளக்க முடியுமா? இந்த மாடல் உங்கள் வளர்ச்சிப் பாதையில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகிறது?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** திராவிட மாடல் என்பது வேறெந்த மாடலுடன் ஒப்பிட இயலாத தனித்துவமான முன்மாதிரியாகும். இதன் தொடக்கம் என்பது நூறாண்டுகளுக்கு முன்பே நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் அடித்தளமிடப்பட்டது. வகுப்புவாரி இடஒதுக்கீடு, அனைத்துச் சமுதாயத்தினருக்குமான கல்வி, வேலைவாய்ப்பு, பெண்களுக்கான வாக்குரிமை என சமூகநீதி வாயிலான சமத்துவ வளர்ச்சியை முன்னிறுத்தியது. 1967 முதல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலங்களில் எல்லாம் இந்த சமச்சீரான சமூகநீதி அடிப்படையிலான வளர்ச்சியையே பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் முன்னெடுத்தனர். அதைத்தான் திராவிட மாடல் என்ற பெயருடன் தற்போது தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ, ஒரு குறிப்பிட்ட பாலினத்திற்கோ மட்டுமே வாய்ப்புகள் என்றில்லாமல் கல்வி, அடிப்படைக் கட்டமைப்புகள், வேலைவாய்ப்பு, தொழில் முதலீடு ஆகியவற்றைப் பரவலான அளவில் செயல்படுத்தி, ஏற்றத்தாழ்வு என்கிற இடைவெளியைக் குறைக்கின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற மாடல்தான் திராவிட மாடல்.

மாநகரத்தில் உள்ளவர்களுக்கு கிடைப்பது போலவே கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கும் அவரவர் ஊர்களுக்குப் பக்கத்திலேயே உயர் கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ வசதி, தலைநகரத்திற்கு வந்து செல்லக்கூடிய கட்டமைப்புகள் அனைத்தும் கொண்டது திராவிட மாடல். ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்பதுதான் திராவிட மாடலுக்கு எளிமையான விளக்கம்!

### மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதே தி.மு.க.வின் நிலைப்பாடு!

***செய்தியாளர்:*** **மாநில சுயாட்சி குறித்த இராசமன்னார் குழு அளித்த அறிக்கையைச் சட்டப்பேரவையில் தி.மு.க அரசு நிறைவேற்றி 50 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 50 ஆண்டுகளில் நடந்துள்ள பெரும் அதிகாரக் குவியலை எப்படி நோக்குகிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** பன்முகத் தன்மை கொண்ட பல மொழிகள் பேசக்கூடிய - பலவித பண்பாடுகளைக் கொண்ட மக்கள் வாழக்கூடிய இந்தியாவின் ஒருமைப்பாடு என்பது கூட்டாட்சிக் கருத்தியலின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. மக்களை நேரடியாக சந்திக்கிறவர்களாகவும், மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றக் கூடிய இடத்தில் உள்ளவர்களாகவும் மாநில அரசாங்கத்தினர்தான் இருக்கிறார்கள். அதனால் மாநிலங்களுக்கே கூடுதல் அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதைத்தான் 1969-இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் வலியுறுத்தினார்.

அதனடிப்படையில் அமைக்கப்பட்ட நீதியரசர் ராஜமன்னார் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து, 1974-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி என்பதுதான் தி.மு.கவின் உறுதியான நிலைப்பாடு.

> நீதியரசர் ராஜமன்னார் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து, 1974–இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். மாநிலத்தில் சுயாட்சி – மத்தியில் கூட்டாட்சி என்பதுதான் தி.மு.கவின் உறுதியான நிலைப்பாடு. அதற்கு மாறான வகையிலே, மாநில அரசிடம் இருக்கக்கூடிய உரிமைகளையும் பறிக்கின்ற ஒன்றிய அரசு டெல்லியிலே அமைந்துள்ளது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி, சுகாதாரம் போன்ற மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் ஒன்றிய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் நீட் தேர்வு, உதய் மின் திட்டம், ஜி.எஸ்.டி. என மாநிலங்களின் அதிகாரத்தை முற்றிலுமாகப் பறிக்கும் செயல்பாடுகள் மிக அதிகமாக நிறைவேறியுள்ளன. இது ஜனநாயகத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிரான மோசமான நடவடிக்கையாக உள்ளது. அதனால்தான், தமிழ்நாடு, அதிலும் குறிப்பாக, தி.மு.க. மாநில உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன், மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வருகிறது.

அதற்கு மாறான வகையிலே, மாநில அரசிடம் இருக்கக்கூடிய உரிமைகளையும் பறிக்கின்ற ஒன்றிய அரசு டெல்லியிலே அமைந்துள்ளது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்பே கல்வி, சுகாதாரம் போன்ற மாநிலப் பட்டியலில் உள்ள அதிகாரங்கள் ஒன்றிய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட்ட நிலையில், கடந்த பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் நீட் தேர்வு, உதய் மின் திட்டம், ஜி.எஸ்.டி. என மாநிலங்களின் அதிகாரத்தை முற்றிலுமாகப் பறிக்கும் செயல்பாடுகள் மிக அதிகமாக நிறைவேறியுள்ளன.

இது ஜனநாயகத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் எதிரான மோசமான நடவடிக்கையாக உள்ளது. அதனால்தான், தமிழ்நாடு, அதிலும் குறிப்பாக, தி.மு.க. மாநில உரிமைகளைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன், மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி வருகிறது.




### விமர்சனங்கள் தி.மு.க.வுக்கு புதியதல்ல!

***செய்தியாளர்:*** **கல்வி, மருத்துவம், மகளிர் நலன் எனச் சமூகநலனுக்கான முதலீடுகளில் தி.மு.க. எப்போதுமே அக்கறையோடு இருந்து வந்துள்ளது. இவற்றை இலவசங்கள் என்று கூறி, சமூக வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்ட சிலர் முயலுகிறார்கள். இத்தகைய விமர்சனங்களை நீங்கள் எவ்வாறு கையாளுகிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இத்தகைய விமர்சனங்கள் தி.மு.க. வுக்குப் புதியதல்ல. அவை புளித்துப் போனவை.

கலைஞர் ஆட்சியில், சட்டமன்ற உறுப்பினராக இருந்த நான் வலியுறுத்தியதைத் தொடர்ந்து +2 மாணவர்கள் வரை பஸ் பாஸ் கொடுக்கப்பட்டது. அப்போது அதை இலவசம் என்று விமர்சித்தார்கள். ஆனால், அந்த பஸ் பாஸ் பெற்ற கிராமப்புற ஏழை மாணவர்கள் இன்று உயர் கல்வி முடித்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர்ந்த பணிகளில் இருக்கிறார்கள். அவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் செலுத்தும் வரி ஒன்றிய அரசின் கருவூலத்திற்குத்தான் செல்கிறது. அன்றைக்குக் கலைஞர் அரசு கொடுத்தது என்பது இலவசமல்ல; ஒரு தலைமுறையை வளரச் செய்வதற்கான சிறிய முதலீடு! அதன் பயனை இன்று உணர்கிறோம்!

முட்டையுடன் கூடிய சத்துணவுத் திட்டம், கலர் டி.வி., உழவர்களுக்கான மின்சாரம் என எல்லாத் திட்டங்களும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சமூகநலத் திட்டங்கள்தான். நகரப் பேருந்துகளில் பெண்களுக்கான கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம் 800 ரூபாய் வரை மிச்சப்படுத்தி, சேமிப்பாக மாற்றுவதுடன், தங்களின் வேலை, சுயதொழில், நேர்காணல் ஆகிய வற்றுக்காக வெளியில் செல்ல முடியும் என்ற தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

சமுதாயத்தில் பாதிக்கும் மேலான அளவில் பெண்களின் எண்ணிக்கை உள்ள நிலையில், இது ஒரு சமுதாய மாற்றத்திற்கான அமைதிப் புரட்சிக்கான திட்டமாக அமைந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மற்ற மாநிலங்களும் இதனைப் பின்பற்றுகிற நிலையில், சமுதாய நிலை பற்றிய தெளிவோ புரிதலோ இல்லாத குறுகிய பார்வை கொண்டவர்கள்தான் இத்தகைய திட்டங்களை இலவசம் என்று சொல்லி தங்கள் அறியாமையை வெளிப்படுத்துகிறார்கள்.

***செய்தியாளர்:*** **தவறான ஜி.எஸ்.டி நடைமுறைப்படுத்தலும், நிதிப் பகிர்வில் மாநில அரசுகளை மதிக்காத போக்கும் நிலவும் சூழலில் நீங்கள் எப்படி திட்டங்களைத் தீட்டி, இத்தகைய நிதி நெருக்கடியில் அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துகிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** 2023 டிசம்பர் மாதம் மிக்ஜாம் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களும், திருநெல்வேலி - தூத்துக்குடி போன்ற தென் மாவட்டங்களும் பேரிடரை எதிர்கொண்ட நிலையில், பிரதமர் மோடி அவர்களிடம் நான் நேரில் சந்தித்து வலியுறுத்தியும் பேரிடர் நிவாரண நிதியை இதுவரை வழங்கவில்லை.

மாநில அரசே தனது பங்களிப்பாகக் குடும்ப அட்டைதாரர்களுக்கு 6000 ரூபாய் வழங்கியது. ஒன்றிய அரசுக்குத் தமிழ்நாட்டின் பங்களிப்பாகச் செலுத்தப்படும் ஒவ்வொரு ரூபாய் வரிக்கும் 29 பைசா மட்டுமே ஒன்றிய அரசின் பகிர்வாகத் திரும்பக் கிடைக்கிறது. மிகக் கடினமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டாலும், மக்கள் நலனுக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் சுணக்கமின்றிச் செயல்படுகிறோம்.

மாநில அரசுக்குக் கிடைக்கக்கூடிய பத்திரப் பதிவுத் துறை வருவாய், வாகனப் பதிவு வருவாய், புதிய முதலீடுகள் உள்ளிட்டவற்றைக் கொண்டு திட்டங்களுக்கான முன்னுரிமை அடிப்படையில் ஒவ்வொன்றையும் கவனித்துச் செயல்படுத்துகிறோம். மூன்றாண்டு காலத்தில் நிமிர்த்தப்பட்ட பொருளாதார நிலையினால் தமிழ்நாடு இதனைச் சமாளிக்கிறது.

### பீகார் மாநிலத்தில் இந்தியா கூட்டணி வலுவாக உள்ளது!

***செய்தியாளர்:*** **நீங்களும் உங்கள் திராவிட முன்னேற்றக் கழகமும் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின் மையமாக இருக்கிறீர்கள். எத்தகைய சவால்கள் உங்கள் முன் உள்ளன? இந்தியா கூட்டணியில் இருந்து நிதீஷ்குமார் வெளியேறியது உங்கள் வெற்றி வாய்ப்பைப் பாதிக்குமா?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இந்தியா கூட்டணியின் தொடக்க கூட்டத்தி லேயே அந்தந்த மாநிலங்களில் வலிமையுள்ள கட்சிகளைக் கருத்திற்கொண்டு தொகுதிப் பங்கீட்டினை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். நிதீஷ்குமார் அவர்கள் சொந்தக் காரணங்களைக் கருதி வெளியேறினாலும் அவருடைய பீகார் மாநிலத்தில் இந்தியா கூட்டணி வலுவாக இருப்பதுடன், அங்கே தொகுதிப் பங்கீடும் சுமுகமான முறையில் நடந்து வருகிறது. அதுபோலவே வாய்ப்புள்ள இடங்களில் தேசியக் கட்சிகளும் மாநிலக் கட்சிகளும் தங்களுக்குரிய பங்களிப்புடன் செயல்படுகின்றன. தேர்தல் களம் என்று வருகிறபோது ஒரு சில சவால்கள் எல்லாத் தரப்புக்கும் இருக்கும். மக்கள் மனங்களை வெல்வதில் இந்தியா கூட்டணிக்கு எந்தச் சவாலும் இல்லை.

## மக்கள் மனங்களை வெல்வதில் ‘இந்தியா’ கூட்டணிக்கு எந்தச் சவாலும் இல்லை!

> **கேள்வி: தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**
>
> **முதல்வர் மு.க.ஸ்டாலின் :** மு.க.ஸ்டாலினைக் கட்சியின் தலைவர் பொறுப்பில் அமர வைத்த தொண்டர்களின் உழைப்பும், மக்களின் நம்பிக்கையும்தான் முதலமைச்சர் ஸ்டாலின் என்ற பொறுப்பை வழங்கியிருக்கிறது. வெற்றிச் சான்றிதழைப் பெற்றபிறகு, கலைஞரின் நினைவிடத்தில் நான், ”வாக்களித்தோர் மனநிறைவு கொள்ளும் வகையிலும், வாக்களிக்காதவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று நினைக்கக்கூடிய வகையிலும் அனைவருக்குமான ஆட்சியாக இருக்கும் என்று உறுதியளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றி வரும் முதலமைச்சர் ஸ்டாலினாகிய நான், கட்சித் தொண்டர்கள் எதிர்பார்ப்பதுபோல, தி.மு.க ஆட்சி தொடர்ந்து நீடிக்கும் வகையிலான கட்சித் தலைவர் ஸ்டாலினாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

### பா.ஜ.க. வை முழுமையாக அம்பலப் படுத்த வாய்ப்பு!

***செய்தியாளர்:*** **அமலாக்கத்துறை, வருமானவரித் துறை போன்ற விசாரணை அமைப்புகள் ஒன்றிய அரசின் அரசியல் கருவிகளாக மாறி வருவதையும் அது இந்தியா ஜனநாயகத்தைச் சிதைப்பதையும் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** சுதந்திரமான விசாரணை அமைப்புகளை ஒன்றிய பா.ஜ.க அரசு தன் கைப்பாவையாகப் பயன்படுத்துகிறது என்பதை எதிர்க்கட்சிகளான நாங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. மக்களே அதைச் சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

பா.ஜ.க. ஆட்சியல்லாத மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சியினர் மீதுதான் அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சி.பி.ஐ. ஆகியவை பாய்கின்றன. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள ஊழல் புகார்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஏற்கனவே ஊழல் புகாருக்கு ஆளான எதிர்க்கட்சி பிரமுகர் திடீரென பா.ஜ.க. பக்கம் சென்றுவிட்டால் உடனே அவரை புனிதராக்கி, அமைச்சர் பதவி கொடுக்கும் அளவிற்குக் கறை நீக்கக்கூடிய ‘அற்புத வாஷிங் மிஷின்’ பா.ஜ.க.விடம் இருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொண்டு விட்டார்கள்.

தேர்தல் நெருங்க நெருங்க பா.ஜக.. அல்லாத கட்சியினர் மீதான பாய்ச்சல்கள் இன்னும் கூடுதலாக இருக்கும். அதனை எதிர்கொள்வதற்கான வலிமை இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு உண்டு. பா.ஜ.க.வை முழுமையாக அம்பலப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அது அமையும்.

### ஆளுநர்களை வைத்து இணை அரசாங்கம் நடத்துவதை முறியடிப்போம்!

***செய்தியாளர்:*** **ஆளுநர் பதவியைப் பற்றி பல ஆண்டுகளாகத் திமுக விமர்சனத்தைக் கொண்டுள்ளது. 1967–இல் இருந்து தி.மு.க ஆளுங்கட்சியாகவோ வலிமையான எதிர்க்கட்சியாகவோ தொடர்ந்து இருந்து வருகிறது. ஆளுநர்கள் போடும் முட்டுக்கட்டைகளை மீறித் தமிழ்நாடு எப்படி தனது அரசியல் அபிலாஷைகளை நனவாக்குகிறது?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மீறிய அதிகாரம், நியமனப் பதவியான ஆளுநருக்குக் கிடையாது என்பதைத் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலிருந்தே ஆளுநர் பதவியை நீக்க வேண்டும் என்றும், ஆளுநர் பதவி அவசியம் என்றால் அது மாநில அரசின் பங்களிப்போடு, தேர்ந்தெடுக்கும் முறையில் அமைந்திட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்துள்ளோம். அண்மைக் காலமாக வெளிப்படையான அரசியல்வாதிகளைப் போல ஆளுநர்கள் செயல்படுவதைத் தமிழ்நாடு மட்டுமின்றி, கேரளம், தெலங்கானா, மேற்கு வங்கம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் காண்கிறோம். ஆளுநரின் அதிகார வரம்பு மீறல்களைச் சட்டமன்றத்தில் எதிர்கொண்டு முறியடித்தோம். நீதிமன்றத்திலும் சட்டவழியில் போராடிக் கொண்டிருக்கிறோம். அரசியல்சட்டத்தை மதிக்காமல், ஜனநாயகத்தின் மாண்புகளைக் கெடுக்கும் வகையில் ஆளுநர்களை வைத்து இணை அரசாங்கம் நடத்த முற்படும் ஒன்றிய பா.ஜ.க அரசின் சூழ்ச்சிகளை முறியடிப்போம்.**

### பிரதமராக யார் வரக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்!

***செய்தியாளர்:*** **2024 தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற உதவும் காரணிகளாக எவை இருக்கும்? தோற்கடிக்க முடியாத கட்சி எனப் பா.ஜ.க தங்களைப் பற்றி முன்னெடுத்து வரும் பரப்புரை 2004–இல் இந்தியா ஒளிர்கிறது என அவர்கள் கூறியதை நினைவு படுத்துகிறதே. மோடியை வெல்வது உண்மையில் சாத்தியமா?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** ஜனநாயக நாட்டில் யாரும் நிரந்தரமாக முடிசூட்டிக் கொள்ள முடியாது. 2004-இல் ‘இந்தியா ஒளிர்கிறது’ என்று பா.ஜ.க. மீண்டும் ஆட்சியைப் பிடிக்க நினைத்தது. ஆனால், தேர்தல் முடிவுகள் அதற்கு எதிர்மறையாக அமைந்தன. பத்தாண்டு கால பா.ஜ.க .ஆட்சியில் இந்தியாவில் பெரும் தொழிலதிபர்கள் தவிர வேறு எந்த ஒரு தரப்பினரும் நிம்மதியாக இல்லை. உழவர்கள், தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், மாணவர்கள், சிறுபான்மையினர், பட்டியலின மக்கள் எனப் பல தரப்பினரும் எதிர்கொள்கின்ற சிக்கல்களே இந்தியா கூட்டணிக்குச் சாதகமானதாக அமையும். யார் பிரதமராக வரவேண்டும் என்பதைவிட, மீண்டும் யார் வந்துவிடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். அது தேர்தல் முடிவுகளில் தெரியும்.

### கட்சித் தொண்டர்கள் எதிர்பார்க்கும் வகையில் செயல்படுகிறேன்!

***செய்தியாளர்:*** **தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும், தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** மு.க.ஸ்டாலினைக் கட்சியின் தலைவர் பொறுப்பில் அமர வைத்த தொண்டர்களின் உழைப்பும், மக்களின் நம்பிக்கையும்தான் முதலமைச்சர் ஸ்டாலின் என்ற பொறுப்பை வழங்கியிருக்கிறது. வெற்றிச் சான்றிதழைப் பெற்றபிறகு, கலைஞரின் நினைவிடத்தில் நான், “வாக்களித்தோர் மனநிறைவு கொள்ளும் வகையிலும், வாக்களிக்காதவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று நினைக்கக்கூடிய வகையிலும் அனைவருக்குமான ஆட்சியாக இருக்கும்” என்று உறுதியளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றி வரும் முதலமைச்சர் ஸ்டாலினாகிய நான், கட்சித் தொண்டர்கள் எதிர்பார்ப்பதுபோல, தி.மு.க ஆட்சி தொடர்ந்து நீடிக்கும் வகையிலான கட்சித் தலைவர் ஸ்டாலினாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

பா.ஜ.க மீது நீங்கள் தொடர்ந்து வைக்கும் குற்றச்சாட்டுகளாலும் அவர்களுக்கு எதிராகத் தேசிய அளவில் நீங்கள் கூட்டணியைக் கட்டமைப்பதாலும்தான் ஒன்றிய அரசு உங்களைக் குறிவைக்கிறது எனக் கருதுகிறீர்களா?

எதிர்ப்புகளோ தாக்குதல்களோ எனக்கோ தி.மு.க.வுக்கோ புதிதல்ல. எப்போதெல்லாம் ஜனநாயகத்திற்கு ஆபத்து நேர்கிறதோ அப்போது எதிர்ப்புக் குரல் கொடுக்கும் இயக்கங்களில் முதன்மையானது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆதரித்தாலும் - எதிர்த்தாலும் தன் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பவர் கலைஞர் கருணாநிதி என்று சொன்னவர் மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார். நான் கலைஞரின் மகன். ஆதரிக்க வேண்டிய நல்லவற்றை ஆதரிப்பதிலும் உறுதியாக இருப்பேன். எதிர்க்க வேண்டிய தீமைகளை எதிர்ப்பதிலும் உறுதியாக இருப்பேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்துள்ளார்.

# ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையில் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!... முதல் பக்கத் தொடர்ச்சி

★ 'நான் முதல்வன்' திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 லட்சம் இளைஞர்கள் தங்களது திறனை மேம்படுத்திப் பயனடைந்துள்ளனர்.

★ 'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தில் 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிக் குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

★ 62 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் புதிய குடிநீர் இணைப்பைப் பெற்றுள்ளன.

★ 2 லட்சம் உழவர்கள் புதிதாக இலவச மின் இணைப்பு பெற்றுள்ளார்கள்.

★ உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தில் 30 இலட்சம் முதியோரும் 5 இலட்சம் மாற்றுத்திறனாளிகளும் மாதந்தோறும் பயனடைகின்றனர்.

★ 'நம்மைக் காக்கும் 48' திட்டத்தால் 2 லட்சம் பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

★ 'முதல்வரின் முகவரி' திட்டத்தினால் 19 லட்சத்து 69 ஆயிரம் பேர் பயனடையும் வகையில் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

★ 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் மூலமாக, 3 லட்சத்து 40 ஆயிரம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது.

இப்படி, தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளது நமது திராவிட மாடல் அரசு.

எங்களைச் சிலர் குடும்ப ஆட்சி என்று சொல்கிறார்கள். ஆம் இது குடும்ப ஆட்சி தான்! தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தையும் கை தூக்கிவிடும் ஆட்சி இது!

ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்தில் ஏராளமான மனுக்கள் என்னைத் தேடித் தேடி வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட கோரிக்கைகளை நமது அரசு நிறைவேற்றிக் கொடுத்த காரணத்தால் - இப்போது நான் செல்லும் பயணங்களில் மக்களின் கைகளில் மனுக்களைக் காண முடியவில்லை; மாறாக, அவர்களது முகங்களில் மகிழ்ச்சியைக் காண்கிறேன்!

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட வலைத்தளத்தை நான் இன்று தொடங்கி வைத்து ஒரு சில பயனாளிகளிடம் உரையாடி அவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்தபோது உளம் மகிழ்ந்தேன். ஒவ்வொரு குடும்பத்தினரது குரலையும் கேட்டு அவர்களது குறைகளைப் போக்கும் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

அதேபோல அமைச்சர்கள், உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரும் உங்களிடம் கலந்துரையாடி நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் ஒவ்வொரு திட்டமும் எந்த நோக்கத்துக்காக அறிவிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்பது தான் எனக்கு முக்கியம்!

### ஒவ்வொருவருக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேர வேண்டும்!

ஏனென்றால் ஒவ்வொரு திட்டமும் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலானவை. கடுமையான நிதி நெருக்கடிச் சூழலில் நிறைவேற்றப்படுபவை. ஆகவே, ஒதுக்கப்படும் நிதி ஒவ்வொரு குடிமகனையும் சென்று சேர வேண்டும்; நலத்திட்டம் ஒரு ரூபாய் என்றாலும் அது உங்களிடம் வந்து சேர வேண்டும் என்று நினைத்து திட்டங்களைத் தீட்டுபவன் நான்.

அதேசமயம், ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையால் தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிதி உதவிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதை நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

சில நாட்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்து பேசிய மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள், மாநில அரசுக்குத் தராமல் மக்களுக்கு நேரடியாக நிதி வழங்கி வருவதாக அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள். எந்த மக்களுக்குக் கொடுத்தார் என்பதைச் சொல்லி இருந்தால் அந்த மக்களுக்குக் கிடைத்ததா என்று கேட்கலாம்.

### தமிழ்நாட்டுக்கு வந்து தொடர்ந்து பொய் பேசும் பிரதமர் மோடி !

இரண்டு மாபெரும் இயற்கை பேரிடரை எட்டு மாவட்டத்து மக்கள் சந்தித்தார்கள். இதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கேட்டோம். அதற்கு 1 ரூபாயையாவது ஒதுக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்களைச் சொல்வது?

ஒன்றிய அரசிடம் இருந்து நிதி வரவில்லை என்றாலும் இந்த எட்டு மாவட்டத்து மக்களுக்காக, மாநிலப் பேரிடர் நிதி மற்றும் அரசுத் துறைகளில் இருந்து 3406.77 கோடி ரூபாய் அளவுக்கு நிதி வழங்கியும், நிவாரணப் பணிகளைச் செய்தும் மக்கள் நலம் காத்து வரும் அரசு தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு.

உங்கள் ஒவ்வொருவர் நலமே எனது நலம்! திராவிட மாடல் அரசின் நலம்! தாய்த்திருத் தமிழ்நாட்டின் நலம்!

அந்த நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன் என்பதன் மற்றுமோர் அடையாளமாகத்தான் இந்த 'நீங்கள் நலமா' திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

உங்கள் அரசு என்றும் உங்கள் ஒவ்வொருவருக்காகவும் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருக்கும் என்று உறுதி அளிக்கின்றேன்.

## கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதால் மக்களிடமிருந்து மனுக்கள் வரவில்லை – மாறாக மகிழ்ச்சியைக் காண்கிறேன்!

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்றாரே, அதனைத்தான் இப்போது மக்களின் முகங்களில் காண்கிறேன்.

### மக்களிடம் உரையாடி உளம் மகிழ்ந்தேன்!

அந்த மகிழ்ச்சியை மேலும் உறுதி செய்ய இப்போது துவங்கப்பட்டுள்ளது தான், "நீங்கள் நலமா?" என்ற திட்டம். குறித்துக் கருத்துகளைப் பெற்று, அதனடிப்படையில் அரசின் சேவைகளை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் குறித்து உங்களிடமிருந்து பெறப்படும் கருத்துகள் இந்த வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். கோட்டையில் உட்கார்ந்து திட்டங்கள் தீட்டி அறிவிப்பதோடு எனது கடமை முடிந்து விட்டதாக நான் எப்போதும் நினைப்பது இல்லை.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## நாடு முழுவதும் மார்ச் 10ல் ரயில் மறியல் போராட்டம் - விவசாயிகள் அறிவிப்பு!

புதுடெல்லி, மார்ச் 7-

கோரிக்கைகள் நிறைவேறும் வரை முற்றுகை போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் அறிவித்து நேற்று மாலை போராட்டத்தை தொடங்கினர். இந்நிலையில் வருகிற மார்ச் 10ந் தேதி அன்று நாடு முழுவதும் ரயில் மறியலில் ஈடுபட போவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான டிராக்டர்களில் சென்ற விவசாயிகள் மீது துணை ராணுவம் மற்றும் போலீசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் பேரணியை தடுத்தனர். சம்பு பகுதியில் ரப்பர் குண்டு தாக்குதலில் இளம் விவசாயி ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் நேற்று மீண்டும் டெல்லி நோக்கிய பேரணியை விவசாயிகள் தொடங்கினர்.

நாடுமுழுவதும்உள்ள விவசாயிகள் பேருந்து, ரயில்களில் மூலமாக போராட்டக்களத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே பேரணியை தொடங்குவதற்கு முன்னர் பஞ்சாப் விவசாயிகள் பொற்கோயிலில் வழிபாடு நடத்தினர். தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 10ம் தேதி நாடு முழுவதும் நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை ரயில் மறியலில் ஈடுபட போவதாகவும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

---

## டிசம்பர் 2023ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# சேதமடைந்த வீடுகளைப் பழுது நீக்க ரூ.45.84 கோடி நிவாரணம்!

### அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மார்ச் 7-

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

கடந்த 2023, டிசம்பர் மாதம் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களும் அதிக கனமழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் இம்மாவட்டங்களில் வசித்து வந்த பெரும்பாலான ஏழை மக்களின் வீடுகள் பெரிதும் சேதமுற்றன.

அவ்வாறு மழைவெள்ளத்தினால் பகுதியாக சேதமடைந்த வீடுகளை பழுது பார்ப்பதற்கு ரூ.2.00 இலட்சம் வரையும் முழுமையாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாக கட்டுவதற்கு ரூ.4.00 இலட்சம் வரையும் நிவாரணமாக வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இவ்வறிவிப்பிற்கிணங்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பகுதியாக மற்றும் முழுமையாக சேதமடைந்த 955 வீடுகளுக்கு பழுது நீக்கம் செய்யவும் மற்றும் புதிய கட்டுமானத்திற்கும் ரூபாய் 24.22 கோடியும், பேரூராட்சி பகுதிகளில் உள்ள 577 சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.21.62 கோடியும் ஆகமொத்தம் ரூ.45.84 கோடி வழங்கி முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்னும் முன்னெடுப்பில் திண்ணை மற்றும் துண்டு பிரச்சாரம் வழங்கல் நத்தமேடு ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் தொழுவூர் சே.பிரேம் ஆனந்த் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு அரசின் சாதனைகளையும் ஒன்றிய பாஜக அரசு செய்து வரும் அநீதிகளையும் மக்களுக்கு எடுத்து சொல்லி வீடு வீடாகச் சென்று உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் என்ற ஸ்டிக்கரை ஒட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டார் இந்நிகழ்ச்சியில் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, ஞா.ரமேஷ், ராஜா, மகேஸ்வரி பால விநாயகம், குட்டி பக்தவச்சலம், ஆர்.திலீப்ராஜ், இமானுவேல், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் குமரேசன், வ.ஹரி, ஆல்பர்ட், ராஜேஷ், சரவணன், கெஜலட்சுமி, பாக்கம் கருணாகரன் ராமானுஜம், கசவா ஆர்.ராஜ், ஜெருஜோன்ஸ்பிரியதர்சனி ஸ்ரீதர், சதீஷ், சரத், பிரேம் குமார், இளங்கோவன், மோகன், மகேஷ், ஜெயச்சந்திரன், ஆறுமுகம், சீனிவாசன், அருள், பாலாஜி, முருகேசன் ஏழுமலை, நாராயணபாபு , பாபு, கார்த்திக், பாலசுந்தர் , சத்யா , ரமேஷ் , ஏகாம்பரம் , லோகு, அம்பேத் வினோத், பார்த்திபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! துறைமுகம் மேற்கு

# 54 (அ) வட்டத்தில் கால்நடை வளர்ப்பவர்கள் 4 நபருக்கு தலா 1 பசுவும் 171 நபருக்கு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்குகிறார்! பா.கதிரவன் தலைமை!

சென்னை, மார்ச். 7

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 54 (அ) வட்டக் கழகம் சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கால்நடை வளர்ப்பவர்கள் 4 நபர்களுக்கு தல ஒரு பசுவும், கால்நடை வளர்ப்பவர்கள் 171 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (7.3.2024 வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில், எண்.25, அண்ணா பிள்ளை 3 வது தெருவில் நடைபெறுகிறது.

54 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.கதிரவன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், பா.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், இசட்.ஆசாத், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, இரா. கலைச்செல்வி, எம்.விநாயகம், பி.விஜயகுமார், பா. ஜெகதீஷ், எல்.சம்பத்குமார், பா.பிரதீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.எம்.முருகவேல், எம். நாராயணன் (எ) பாபி, எஸ். ஜெகன்நாத், த.தமிழ் அரசு, ஏ.ஆனந்த், ஏ.திருப்பதி, எம். சுரேஷ், ஏர்போர்ட் சுரேஷ், நாகேந்திர பாபு, ச.திலகம், வி.அலமேலு, குணசுந்தரி, பி.கே.சந்திரசேகர், எஸ்.சிவலிங்கம், ஆர்.டி.தனுஜா பானு குமாரி, எஸ்.விநாயகம், கே.ஆர்.பாலாஜி, த. தமிழ்வாணன், டி.நாகராஜ் எஸ்.செல்வகுமார், அ.பாஸ்கர், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ். சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், மா.ஜெய்சங்கர், ஆர். ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், டி. சதீஷ்குமார், எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எஸ்.அஸ்லாம், எம்.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத் குமார், ஆ.நா. பார்த்திபன், க.கவியரசு, ராஜேஷ் ஜெயின், வே.பரிமளம், எல்.நவீன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு கால்நடை வளர்ப்பவர்கள் 4 நபர்களுக்கு பசு மாடு மற்றும் 171 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், துறைமுகம் தொகுதி பார்வையாளர் க.பிரபு, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப. ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், மற்றும் தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், வே.உமா காந்த், பரிதி இளம் சுருதி, கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், கூ.பீ.ஜெயின், சரிதா மகேஷ்குமார், சொ.வேலு, ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன், டி.எஸ்.பி. இராஜகோபால், எம். டி.ஆர்.நாகராஜ், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, வி.சுதாகர், எம்.இப்ராஹிம் கனி, எஸ். பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயகுமார், ரமேஷ் (எ) நீலகண்டன், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

54 (அ) வட்டக் கழக துணைச் செயலாளர் எஸ். பாஸ்கரன் (எ) குட்டி நன்றி கூறுகிறார்.

---



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் தெற்கு பகுதி, 75 வது வட்டத்தில் திரு.வி.க. நகர் சட்ட மன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி நிதியில் இருந்து (திட்ட மதிப்பீடு 26 இலட்சங்கள்) கட்டப்பட்ட திறந்தவெளி பூங்காவை சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திரு. வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பளார் டி.லோகேஷ். மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ரமணிலோகேஷ். இசட்ஆசாத், நா.துலுக் காணம், பி.சுகுமார், வனஜாசண்முகம். வி.க.வெங்கடேசன் உள்ளிட்ட மாநில, மாவட்ட பகுதி. வட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர், மகளிர் அணியினர், கழக முன்னோடிகள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா ஆகியோர் நேற்று (06.03.2024) திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் ட்ரோன் மூலம் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி புனிதவதி எத்திராஜன், திருமதி எல்.ரமணி, மாநகர அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், தலைமைப் பூச்சித்தடுப்பு அலுவலர் டாக்டர் செ. செல்வகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மோடி சுட்ட வடைகள்.. ( எல்லாமே ஊசிப்போச்சு ) 6

வாயில் வடை சுடுவது என்று சொல்வார்களே... அதற்கு 100 விழுக்காடு பொருத்தமானவர் ஒருவர் உண்டென்றால் அது மோடிதான். அவர் ரயில் நிலையத்தில் தேநீர் விற்றதாகச் சொன்னதே, அவர் வாயில் சுட்ட வடைதான் என்பதை தேசம் பின்னர் புரிந்து கொண்டது.

2014 ல் அவர் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டதில் தொடங்கி அவர் பிரதமராக இந்தியாவை ஆண்ட இந்த 10 ஆண்டுகளில் மோடி சுட்ட ஊசிப் போன வடைகளை மக்கள் மன்றத்தில் பந்தி வைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

‘குஜராத்தை வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றிவிட்டார் மோடி’ என்று விலை போன ஊடகங்களும், வலதுசாரி அரசியலை நிலைநிறுத்தவிரும்பிய அரசியல் தரகர்களும் தொடர்ந்து மக்கள் மன்றத்தில் ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக்கினர்.

**ஆனால் உண்மை அதுவா ? கடந்த சில நாட்களுக்கு முன் வெளியான செய்தி ஒன்றைப் பார்த்தோம். குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த 1995 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒரே ஒரு அரசு மருத்துவக் கல்லூரி கூட அம்மாநிலத்தில் கட்டப்படவில்லை.**

**2001-ல் இருந்து 2014 வரை மோடி அம்மாநிலத்தின் முதலமைச்சராக இருந்ததை நாம் இங்கே குறிப்பிட வேண்டும். தான் ஆட்சி செய்த குஜராத்தில் ஒரே ஒரு மருத்துக்கல்லூரியைக் கூட கொண்டு வராத மோடிதான் இந்தியா முழுவதும் தரமான மருத்துவத்தைத் தருவேன் என்று வாயில் வடை சுட்ட வல்லுநர்.**



குஜராத்தின் வறுமையை பிரதிபலிக்கும் புகைப்படம்

தான் பிரதமரானால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று மோடி சுட்ட வடையின் இன்றைய நிலை என்ன தெரியுமா ? பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளை விடவும் இந்தியாவில் வேலையின்மை விகிதம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

**உங்களுக்கு நினைவிருக்கிறதா ? அமெரிக்கர்கள் இந்தியாவில் வேலைக்காக் காத்திருக்கும் நிலை உருவாகும் என்று மோடியின் ஆதரவாளர்கள் 2014 ல் சொன்னபோது, மெய்சிலிர்த்துப் போனவர்கள் பலர். அவர்கள் எல்லாம் இன்று கூனிக் குறுகிப் போகும் படி சமீபத்தில் ஒரு நிகழ்வு நடைபெற்றது..**

**இஸ்ரேல் - பாலஸ்தீன போர் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், சமீபத்தில் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டுமானப் பணிக்காக இஸ்ரேலுக்கு வேலைக்குச் செல்ல நீண்ட வரிசையில் காத்திருந்த காட்சியை இந்தியா கண்டது.**

**அவர்களிடம் போர் நடைபெறும் சூழலில் அங்கே வேலைக்குச் செல்வதன் காரணம் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்ட போது, “பட்டினியால் இங்கே சாவதை விட அங்கே வேலைக்குச் செல்வதால் உயிர் போனாலும் பரவாயில்லை” என்பதாக அந்த இளைஞர்கள் சொன்ன பதில்களை சமூக வலைத்தளங்களில் கண்டபோது மோடி இந்தியாவை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் என்று நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது.**



இஸ்ரேலுக்கு வேலைக்கு செல்வதற்காக வரிசையில் காத்திருக்கும் வடஇந்தியர்கள்

மோடியின் ஆட்சியில் இந்தியாவில் வேலை கேட்டு அமெரிக்கர்கள் வரிசையில் நிற்பார்கள் என்று சொன்ன மோடி ஆதரவாளர்கள் சுட்ட வடை ஊசிப் போய் துர்நாற்றம் வீசுகிறது. மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால், அடிப்படைவாத அரசியலால் வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது மட்டுமல்ல, சிறு , குறு, நடுத்தர தொழில்களும் முற்றிலும் முடங்கிப் போயின.




தமிழ்க் கேள்வி
தி.செந்தில்வேல்
மூத்த
ஊடகவியலாளர்


**மேக் இன் இந்தியா திட்டம்** என்ற ஒரு வடையை மோடி சுட்டார். உலகின் பல்வேறு நாடுகளில் இருக்கும் நிறுவனங் களும், இந்தியாவில் தங்கள் உற்பத்தியைத் தொடங்குவார்கள் என்று சொன்னார். நிலைமையோ தலைகீழாக உள்ளது. இதுவரை உலகின் பல நாடுகளுக்கு ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்த திருப்பூர் உள்ளிட்ட நகரங்கள் மோடியின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் இருளில் மூழ்கும் நிலையும், மிகச்சிறிய நாடான வங்கதேசம் ஆயத்த ஆடைஏற்றுமதியில் முன்னணி நாடாகவும் உருவாகியுள்ளது.

**கருப்புப் பண மீட்பு வடை :**

நான் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தை மீட்பேன். அப்படி மீட்கப்படும் கருப்புப் பணத்தை இந்தியர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் ரூபாய் 15 லட்சம் கிடைக்கும் என்று ஒரு இமாலய வடையைச் சுட்டார் மோடி. அதைத் தன் தேர்தல் அறிக்கையிலும் சொன்னார்.

பா.ஜ.க-வின் 2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் அறிக்கையில், பக்கம் 5 ல் அவர்கள் கொடுத்த வாக்குறுதியில் கருப்புப் பணம் அனைத்தும் மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதே. ஆனால், இதுவரை இல்லாத அளவிற்கு மோடி ஆட்சிக்கு வந்த பின்தான் சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் நிதி பல்லாயிரம்கோடிஅதிகமாகக்குவிந்துள்ளது என்ற புள்ளி விவரங்கள் அனைத்து ஊடகங்களிலும் வெளியாகின.





பணமதிப்பிழப்பின்போது வங்கிகளின் வாசலில் காத்திருந்த மக்கள்

**விஜய் மல்லையா தொடங்கி, நீரவ் மோடி, லலித் மோடி, என்று இந்திய வங்கிகளில் பல்லாயிரம் கோடிமக்கள் வரிப்பணத்தை ஏப்பம் விட்டு ஏமாற்றியவர்கள் வெளிநாடுகளுக்கு மோடியின் ஆட்சியில் பாதுகாப்பாக தப்பிச் சென்றனர். அவர்களை இந்தியாவிற்கு அழைத்து வருவேன் வருவேன் என்று மோடி சுடும் வடைகளை இனியும் நம்புவதற்கு வட இந்தியர்கள் கூட தயாராக இல்லை.**

“கருப்புப் பணத்தை ஒழிக்கிறேன் பேர்வழி” என்ற பெயரில் சொல்லாமல் கொள்ளாமல் 500 ரூபாய் , 1000 ரூபாய் நோட்டுகளை இரவோடு இரவாக செல்லாது என்று மோடி அறிவித்தபோது மோடியின் அடிவருடிகள் புல்லரித்துப் போய் கரவொலி எழுப்பினார்கள்.

ஆனால், பொருளாதரத்தை நன்கு தெரிந்த அறிஞர்களோ மோடியின் இந்த நடவடிக்கையை பொருளாதார அறிவுக்கு ஒவ்வாத செயல் என்று கடுமையாக விமர்சித்ததோடு, இதனால் இந்தியப் பொருளாதாரம் பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லும் என்றனர். அவர்கள் சொன்னது போலவே ஆயிற்று.

செல்லாது என்று அறிவித்த 500, 1000 ரூபாய் நோட்டுகளில் பல லட்சம் கோடிகள் ரிசர்வ் வங்கிக்கு திரும்பாது, அவ்வாறு திரும்பாத பணமெல்லாம் கருப்புப் பணம். அவ்வாறு பல லட்சம் கோடி பணத்தை வைத்திருப்பவர்களுக்கு அது வெறும் வெற்றுக் காகிதம். இதன் மூலம் கருபப்பு பணம் ஒழிந்து விடும் என்றுசினிமாவைப் போல் திரைக்கதை எழுதி ரசித்த மோடி கூட்டம் 99 சதவிகித பணம் ரிசர்வ் வங்கிக்குத் திரும்பி வந்த செய்தி வந்த போது , அவர்களின் வடைக் கடையை மூடிவிட்டு ஓட்டம் எடுத்தனர்.



சிக்னல் கோளாறால் ஏற்பட்ட ஒடிசா ரயில் விபத்து (280-க்கும் மேற்பட்டோர் பலி)

ஆனால், மோடியின் இந்த முன்யோசனை இல்லாத செயலால் சாமானிய மக்கள் வங்கிகளின் வாசலிலும், ஏடிஎம் வாசல்களிலும் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தனர். பலர் மாண்டு போயினர். இந்தியாவின் இருண்ட காலம் என்றே அதைச் சொல்லலாம். நாட்டில் என்ன நடக்கிறது என்று புரியாமல் மக்கள் பெரும் குழப்பத்தில் தள்ளப்பட்டனர். ஆனால், இது எது குறித்தும் கவலை இல்லாத மோடி, 50 நாட்கள் அவகசாம் கேட்டார். ஆண்டுகள் பல ஓடிவிட்டன. மோடியின் கருப்புப் பண ஒழிப்பு வடையும் ஊசி துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது.

**புல்லட் ரயில், நதிகள் இணைப்பு, ஸ்மார்ட் சிட்டி, தூய்மை இந்தியா , டிஜிட்டல் இந்தியா, என்று மோடி சுடாத வடைகளே இல்லை எனலாம். “மோடி ஆட்சிக்கு வந்தால்இந்தியாவில் புல்லட் ரயில் ஓடும்” என்று சொன்னார்கள். ஆனால்,ரயில்களின் ஓடுபாதைகளையும், சிக்னல்களையும் கூட ஒழுங்காகப் பராமரிக்காததால் ரயில் விபத்துகளும் அதனால் உயிரிழப்புகளும் அதிகரித்ததே மிச்சம்.**

**‘தூய்மை இந்தியா’ என்றார்கள். கங்கை நதியைச் சுத்தப்படுத்தி மேம்படுத்த 20,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்றார்கள். நிலைமை என்ன தெரியுமா? கடந்த வாரம் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ‘கங்கையில் குளிக்கவே கூடாது’ என்று எச்சரிக்கும் அளவிற்கு கங்கை மாசுபட்டுள்ளது.**



மாசுபட்ட நிலையில் உள்ள கங்கை நதி

மோடி ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் அண்டை நாடுகள், பகை நாடுகள் எல்லாம் அஞ்சி நடுங்கும் என்றார்கள். சீனா இந்திய எல்லைக்குள் ஊடுருவி ஒரு கிராமத்தையே நிர்மாணித்துவிட்டது.

மோடி ஆட்சிக்கு வந்தால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்து 40 ரூபாயைத் தொடும் என்றனர். இன்று இந்தியரூபாயின்மதிப்புபெரும்வீழ்ச்சியடைந்து டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 82 ரூபாயைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது.

பட்டினித் தரவரிசைப் பட்டியலில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், ஆப்கன் போன்ற நாடுகளை விட மோசமாக உள்ளது. இப்படி மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவில் வளர்ந்திருப்பது பா.ஜ.க. வின் சொத்து மதிப்பும், மோடியின் கார்ப்பரேட் நண்பர்கள் சிலரின் சொத்து மதிப்புமே தவிர சாமானிய இந்தியர்கள் இல்லை என்பதே மறுக்க இயலாத உண்மை.

**இதோ தேர்தல் வந்து விட்டது. மோடி தன் வடைச் சட்டியைத் தூக்கிக் கொண்டு மக்களிடம் வருவார். ஆனால் ஏற்கனவே மோடியின் ஊசிப் போன வடைகளால் உடல் உபாதைகளுக்கு ஆளாகியிருக்கும் நாம் இம்முறை மோடியின் வடைகளை குப்பைத் தொட்டிகளுக்கு அனுப்புவோம்.**





இந்தியா கூட்டணி தலைவர்கள்

பாசிச பா.ஜ.க.-வின் ஆட்சியை வீட்டிற்கு அனுப்புவோம். சமச்சீரான, சமூக நீதியை உள்ளடக்கிய வளர்ச்சி இந்தியா முழுமைக்கும் கிடைக்க இந்தியா கூட்டணியை ஆதரிப்போம்.!

**(தொடரும்...)**

## திருநெல்வேலி மாவட்டம் பணகுடி புறவழிச்சாலையில் ஏற்பட்ட

# சாலை விபத்தில் காயமடைந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 7 -

திருநெல்வேலி மாவட்டம் பணகுடி புறவழிச்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடி பகுதி 2 கிராமம், பணகுடி தூய்மைப் பணியாளர் குடியிருப்பில் வசித்து வரும் திருமதி.வசந்தி (வயது 38) க/பெ.முத்துக்குட்டி என்பவர் ஈஸ்ட் விசன் சேரிடபிள் டிரஸ்ட் நிறுவனம் மூலம் பணகுடி பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்துவருபவர் கடந்த 29.02.2024 அன்று பிற்பகல் பணகுடி புறவழிச் சாலையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக நான்கு சக்கர வாகனம் மோதிய விபத்தில், இரண்டு கால்கள் மற்றும் முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டு சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நடக்க முடியாத நிலையில் உள்ளார் என்ற செய்தியை கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையும் அடைந்தேன். இவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.வசந்தி அவர்களின் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித் துள்ளார்.

## தலைமை: மு.இ.ஏழுமலை, முன்னிலை: நந்தனம் கி.மதி எம்.சி.

# 123வது தி.மு.க. வட்டத்தில் நலஉதவி!

*சென்னை, மார்ச் 7-*

*கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின், பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123 வட்ட கழக நிர்வாகிகளின் சார்பில், மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., முன்னிலையில், வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு நேற்று (6.3.2024 வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட, பாகம் 62 கால்வாய்கரை சாலை, மற்றும் பாகம் 43, 44 பீமன்ன முதல் தெரு, பீமன்ன இரண்டாவது தெரு, பகுதிகளில் உள்ளடங்கிய பகுதிகளில் பொதுமக்களுக்கு, நலத்திட்ட, உதவிகளை வழங்கினார்.*

*இவ்விழாவில் வட்ட கழகத்திற்கு உட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்ட கழக, BLA2 பாக முகவர்கள், BLC பாக உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*

# மோடி வடித்த முதலைக் கண்ணீர்!

நான், அலுவலகத்தை விட்டு இறங்கும் போது, அந்தச் சாலை முழுவதும் தண்ணீர். கால் முழு மையாக நனைந்து விட்டது. அப்புறம் ஏறின பிறகு தான் என்ன வென்று கேட்டால்? மழையும் பெய்யவில்லை வேறு எந்தக் குழாயும் உடையவில்லை, அது 'முதலைக் கண்ணீர்' என்று சொன்னார்கள்.

ஒரு மனிதர் - ஒரு நாற்பது பேர் வரை இறந்து போய் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் எனக்குத் தெரிந்து அமைச்சர்கள் களத்தில் நின்றார்கள். அதிகாரிகள் களத்தில் நின்றார்கள். ஒரு வேளை சோற்றுக்கு வாய்ப்பில்லாத ஒரு மனிதன் கூட, வெள்ளத்தின் காரணமாக சாப்பாடு இல்லாதவர்களுக்கு கொண்டு போய் சோறு கொடுத்ததைப் பார்த்திருக்கிறோம். அந்தக் காலத்தைப் பற்றி ஒரு வார்த்தையும் பேசாத ஒரு மனிதர். தேசிய பேரிடர் கூட்டணியினுடைய தலைவராக இருக்கக் கூடிய மோடி, இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கம் ஒன்றுமே செய்யவில்லை என்று பேசுகிறார் என்றால் , அவர் வடித்த கண்ணீர் தான் இது வரைக்கும் வந்திருக்கிறது. அது 'முதலைக் கண்ணீர்'. அது ஒரு நயா பைசாவுக்கும் பிரயோசனப் படாது.

'பா.ஜ.க. இதயத்தில் தமிழ்நாடு இருக்கிறது' என்று சொல்லி இருக்கிறார். தமிழ்நாட்டோட இதயத்தில் பா.ஜ.க. இருக்கிறதா? அதைத்தான் நான் கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில் உத்தரப்பிரதேசத்தில் ஒரு டிராக்டரில் சென்றவர்கள் அந்த டிராக்டர் கவிழ்ந்து, 22 பேர் இறந்து போனார்கள் என்று சொன்ன உடனே உடனடியாக நிவாரணம் அறிவிக்கிறார். குஜராத் வெள்ளத்திற்கு நிவாரணம் அறிவிக்கிறார். ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒரு நயா பைசாவும் கொடுக்காத இவர் எங்களுக்காக 'கண்ணீர் வடித்தார்' என்றால் அது 'முதலைக் கண்ணீரை'த் தவிர வேறு ஒன்றுமில்லை.

சென்னை மெட்ரோ, விமான நிலையம் மாதிரியான பெரிய திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பில் நகர்ப்புற மேம்பாடுத் திட்டங்களை சென்னைக்கு கொடுத்து இருப்பதாக மோடி பேசி இருக்கிறார். மெட்ரோ ரயில் இரண்டாவது பேஸ்க்கு அவர் பணம் கொடுக்கவில்லை. தமிழ்நாடு அரசாங்கம் தான் இப்போது வரை பணம்கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

ஒரு பொய்யைப் பேசுவதற்காக ஒரு மனிதர் அங்கே இருந்து இங்கே வருகிறார், நமது செலவில். அதாவது உங்கள் செலவிலும் என் செலவிலும் இங்கே வந்து, அந்தப் பொய்யைச் சொல்லிவிட்டுப் போகிறார். விமான நிலையம் விரிவாக்கத்திற்கு நிறைய காசு அவர் கொடுப்பார். அவர் அதனை அதானிக்குத் தான் விற்கப்போகிறார். 6 விமான நிலையங்களை ஏற்கனவே அவர் அதானிக்குத் தான் விற்றார். இதனையும் கொடுப்பதற்காக தன்னுடைய நண்பருக்காக கொடுப்பதற்காக - அதனைச் செய்திருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை.

நான் சிம்பிளாகக் கேட்கிறேன், நான் பசியோடு இருந்த போது; என் வீடு மழையில் இடிந்தபோது; என் வீடு மழையில் முழுவதுமாக மூழ்கிப்போன போது;, என்னுடைய ஆடு. மாடுகள் அழிந்து போன போது, ஒரு வார்த்தை; பேசுவதற்கு அவர் நாக்குவரவில்லை, எனவே அவர் பேசுவதை எதையுமே கேட்பதற்கு நான் தயாராக இல்லை. அவர் பரம்பரை ஆட்சி என்று சொன்னார் என்றால் அதற்கு சரியான சாம்பிள் இராமர் தான். அதற்குமேல் எதனையும் நான் சொல்ல விரும்பவில்லை.

தேர்தல் பத்திரத்தைப் போன்றதொரு முறைகேடு இருக்க முடியுமா? இவர் ஊழலைப் பற்றிப் பேசுகிறார். இன்றைக்கு இங்கே இருக்கக் கூடிய நிறுவனங்களை எல்லாம் கெடுத்து விட்டார்கள் என்று பேசி இருக்கிறார். தேர்தல் பத்திரத்தில் எத்தனை ஆண்டுகள் ஆகின்றது , எத்தனை ஆயிரம் கொடுத்து இருக்கிறார்கள். மொத்தம் எத்தனை தேர்தல் பத்திரங்கள். இன்றைக்கு எஸ்.பி.ஐ. வங்கியின் ஸ்டேட்மெண்ட் எடுத்துக் கொண்டால் ஜூன்30 ஆம் தேதி வரை எனக்கு டைம் வேண்டும். பா.ஜ.க.வினுடைய கொள்ளைக் கூட்டாளியாக ஸ்டேட் பேங்க் நிறுவாகம் இருக்கிறது.

அது தான் நிலைமை என்றால் உச்ச நீதிமன்றம் என்றைக்கு கேட்டதோ, அன்றைக்கே எங்களுக்கு இவ்வளவு நாள் ஆகும் என்று சொல்லி இருக்க வேண்டும். இன்றைக்கு வந்து சொல்கிறார்கள் எங்களுக்கு இவ்வளவு நாள் ஆகும் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு தினசரி அன்றாடம் வேலை பார்க்கின்ற ஒரு மனிதரை கொண்டு போய் விட்டால் கூட ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணி சொல்லி விடுவார்கள்.

அப்புறம் போதைப் பொருள் மொத்த விற்பனை வியாபாரியே அவர் தான். எப்படி? மத வெறி போதைப் பொருள் விற்பனை வியாபாரி. இந்தியா முழுவதும் அதைத்தான் அவர் செய்து கொண்டு இருக்கிறார். எந்தப் போதையால் நாடு அழியும் என்றால், மிகப் பெரிய போதை, மதவெறியை ஏற்றுவது தான். அதை அவர்தான் செய்து கொண்டிருக்கிறார். அதனுடைய பிதாமகன் அவர்தான்.

அவர் இன்றைக்கு நிறைய பேசினார். அவர், ஆன் லைனில் போட்டால் பிராடு வராதாம். அதனால் அவர்களுக்கெல்லாம் வருத்தமாகப் போய் விட்டதாம். அவர்களுடைய டபுள் என்ஜின் சர்க்கார் இருக்கக் கூடிய குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், அசாம்.

அசாம் தமிழ்நாட்டை விட சிறிய மாநிலம். ஆன் லைனில், வருடத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் போடுவோம் என்ற திட்டத்தின் மூலம் 8 இலட்சத்து 35 ஆயிரம் போலி கணக்குகளில் வந்தது. மோடி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அசாம் முதலமைச்சர் விசாரணைக்கு உள்ளாக்கப்படவேண்டும். இவர்கள் இதனை எல்லாம் செய்ய மாட்டார்கள்.

அதாவது குஜராத்தில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு, உத்தரப்பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு, மத்தியப் பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 51 ஆயிரம் பேருக்கு அசாமில் 8 இலட்சத்து 35 ஆயிரம் பேருக்கு மொத்தம் இந்தியா முழுவதும் 42 இரட்சம் பேருக்கு, நான் ஆன்லைனில் செய்தால் யோக்கியமாக செய்வேன் என்று சொல்லிவிட்டு, மூவாயிரம் கோடியை என்னுடைய வரிப்பணத்தை தன்னுடைய கூட்டாளிகளுக்கு தெரிந்தே டபிள் என்ஜின் சர்க்கார் என்று வைத்துக் கொண்டு கொடுத்தவர் அவர்.



**கனகராஜ்**
மூத்த தலைவர்
மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி

ஒரே ஒரு பேங்க் அக்கவுண்டில், ஏழரை இலட்சம் பேர்களுக்கு ஆயுஸ்மான் பாரத் நோயாளிகளுக்குக் கொடுத்த பணத்தை திருடியது யார்? இதனை நான் சொல்லவில்லை சி.ஐ.ஜி. கேட்கிறது. இன்றைக்கு வரைஅந்தக் குற்றவாளிகளை எங்கே கொண்டு வந்து வைத்து இருக்கிறீர்கள் ?

அவர் சொல்கிறார் 'நாடு தான் எனது குடும்பம்' அப்படி என்றால் குடும்பச் சொத்து இவருடைய சொத்து, இவருடைய சொத்து, இவருடைய நண்பருடைய சொத்து, அவர் 16 வயதினிலே கதையை இப்போது புதியதாக சொல்லி இருக்கிறார்.

16 வயதில் இருந்து, இவர் சொன்ன கதையையெல்லாம் மூன்றாம் கிளாசில் முதலை பிடித்த கதை பொய் என்று சொல்லி விட்டார்கள். அடுத்து ரெயில்வே ஸ்டேஷனில் டீ வித்த கதையை சொல்லிட்டாங்க, உங்கள் வயதை தாண்டி அதற்குப் பின்னால் தான் ரயில்வே ஸ்டேசனே அந்த ஊரில் வந்தது என்று சொல்லி விட்டார்கள். இவர் படித்ததாக கூறிய என்டர் பொலிட்டிக்கல் சைன்ஸ் தவறு என்று சொல்லிவிட்டார்கள்.

இவைகளை யெல்லாம் தாண்டி இவர் 16 வயதினிலே என்ற கதையைப் படிக்க ஆரம்பித்து இருக்கிறார். இந்தக் கதையெல்லாம் உண்மையில் என்ன வென்றால், அவர் தைரியமாக பேசினால்கூடஎல்லாக்குற்றச்சாட்டுகளுக்கும் பதில் சொல்லக் கூடிய நிலையில் அவர் இருக்கிறார்.

அவர் சொல்லி இருக்கிறார். உங்களுக்கு உறுதி தருகிறேன். தவறு செய்தவர்கள் நான் கட்டாயம் தண்டிப்பேன் என்று சொல்லி இருக்கிறார். 2024 இல் இந்தியாக் கூட்டணி வெல்லும் போது அதில் மிகப்பெரிய, மிக ஏராளமான கொலைக ளுக்கும் அல்லது நிறுவனங்களை சீரழித்ததற்கும், கொள்ளைகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய நபராக, முதல் நபராக நரேந்திர மோடி தான்இருப்பார். அது தான் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமை.

அவர் சொல்கிறார், நாங்கள் 'தெர்மல் பவர் பிளான்'எல்லாம் கொண்டு வந்துட்டோம்' என்று கூறுகிறார்.

இரண்டு இலட்சம் கோடி ரூபாய்க்கு வாங்கி நான்கு இலட்சம் கோடி ரூபாய்க்கு குஜராத்தில் இருக்கக் கூடிய நிறுவனத்திற்கு விற்று அந்த இரண்டு இலட்சம் கோடி ரூபாய் எங்கே போனது? என்று கேட்காமல் பொத்தி பொத்தி பாதுகாக்கிறார் இல்லையா? அவற்றிற்கெல்லாம் அவர் தான் பதில் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு அவர்பேசியதை நான் பிரதமர் பேசியதாக பார்க்கவில்லை. ஒரு பாலிடீசன் என்கிற முறையில்பேசி இருக்கிறார். அரசு நிகழ்ச்சி என்றாலும் பேசமாட்டார். இரண்டு எம்.பி. இருந்தார்கள், கனிமொழி இருந்தாங்க, அமைச்சர்கள் எ.வ.வேலு, கீதா ஜீவன் இருந்தாங்க, அவர்கள் பெயரைக் கூட சொல்லவில்லை. அங்கே பொய் பொய்யா பேசினார். அவர் பொய் மட்டும் தான் பேசுவார்.

தூத்துக்குடியில் துறைமுக விரி வாக்கம் 2013 இல் நிதி அமைச்சராக ப.சிதம்பரம் இருந்த போது அறிவித்தது.

2014 இல் கூட்டணியில் இப்போது இருக்கின்ற ஜி.கே. வாசன் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது டி.பி.ஆர்.வெளியிட்டார் ஜனவரியில்.

2014 ல் அருண் ஜெட்லி அதற்கு பணமும் ஒதுக்கினார். அதற்குப் பிறகு பத்து வருடமாக அந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டவர் நரேந்திர மோடி. ஆனால் பத்து வருடமாக கிடப்பில் போட்டாங்க அவங்க, இதனை நங்கள் தான் செய்தோம் என்று சொல்கிறார். அந்தப் பொய்யை என்ன சொல்வது?

இங்கே பேசிய மணி சார் சொன்னது முக்கியமான விஷயம். இளம் தலைமுறையை பாதிக்கின்ற விஷயம். இந்தச் செய்தி பிப்ரவரி 28 ஆம் தேதிய செய்தியின் கிளிப்பிங். இந்த செய்தி தீக்கதிரிலும் வரவில்லை, முரசொலியிலும் வந்ததில்லை. இது 'எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிகையில் வந்திருக்கு. 3300 கிலோ, 3.3 டன் நர்கோட்டிங்ஸ் குஜராத்தில் பிடிக்கிறாங்க. அதில் ஐந்து வெளிநாட்டு நபர்களை அதில் பிடிக்கிறாங்க, அதன் மதிப்பு இரண்டாயிரம் கோடி ரூபாய் பெருமானம். இது பிப்ரவரி 28 ஆம் தேதிய செய்தி.

இந்தக் கோபம், நரேந்திர மோடிக்கு இந்திய நாட்டின் இளைஞர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், அன்றைக்கு இதே குதி குதித்து இருக்க வேண்டும் இல்லையா, குஜராத்தில் போய் இதை பேசி இருக்க வேண்டும் இல்லையா.

ஒரு பிரதமர் என்கிற முறையில், இந்த நாட்டில் போதைப் பொருட்களை நான் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்ல வேண்டும். இந்தியாவில் இது வரை அதிகமாக எங்கேயாவது போதைப் பொருட்கள் பிடிபட்டு இருக்கிறது என்று சொன்னால் அவரே சொன்னார் 5 சதவிகிதம் தான் பிடிபடுகிறது, அந்த 5 சதவிகிதத்திலே இந்தியாவில் நம்பர் ஒன் மாநிலம் எது என்றால் குஜராத்.

எனவே போதைப் பொருள் வியாபாரிகளை வைத்து இருப்பவர்கள் அவர்கள் தான். அது ஈசியா இருக்கு என்று நினைக்கிறாங்க. ஏன் என்றால் இது சென்னைக்கு வர மாட்டேன் என்கிறது , ஏன் கொச்சிக்கு வர மாட்டேன் என்கிறது, ஏன் ஜவஹர்லால் நேரு போர்ட்டுக்கு வரவில்ல. ஏன் குஜராத்தில் மட்டும் வருகிறது என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமா இல்லையா.

3.3டன்கொஞ்சம்கூடநியாயமில்லாமல், எப்படி பேசுகிறார்கள் என்று பாருங்கள். இது மிகவும் பழைய செய்தியாக இருந்தாலும் பரவாயில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால் மணி சார் சொன்னதில் பர்ஷனலாக அட்டாக் செய்யக்கூடாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் பொதுவாக மக்கள் மத்தியில் என்ன இருக்கு என்றால் குடும்பம் இல்லை என்றால் தவறு செய்ய மாட்டார்கள். என்ற எண்ணம் இருக்கு.

செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு குடும்பம் இல்லைதான், ஆனால் அவர்கள் அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் சிறைக்கு சென்றாரா இல்லையா? இவரே வெஸ்ட் பெங்காலுக்கு போகும் போது மம்தா பானர்ஜி அவர்கள் ஊழல் செய்யவில்லை ஏன் என்றால் அவர்களுக்கு குடும்பமே இல்லை என்று சொல்வாரா இவர்?

இந்த மாதிரியான லாஜிக்கலா அதனை நாங்கள் கன்வென்ஷன் செய்றோர்கள். அது தவறு. அதாவது மோடியின் குடும்பமே, அதானிக்கு பல கோடி சொத்து சேர்த்த, சேர்த்தது சம்பந்தமாக ஏற்கனவே பல விஷயங்கள் வந்து இருக்கு. அவரை தனி நபர் என்று சொல்லாதீங்க. அதனால் அவர் காசு வாங்க மாட்டார் பணம் வாங்க மாட்டார் என்று யாரும் சொல்லாதீங்க.

இப்போது தேர்தல் பத்திரம் சம்பந்தமான விஷயங்கள் வருகின்றது. அடிப்படையான கேள்வி என்ன வென்றால், தி.மு.க. ஊழல் கட்சி, காங்கிரஸ் ஊழல் கட்சி, இந்தியாவில் இருக்கின்ற எல்லா கட்சிகளும் ஊழல், நீங்கள் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர், தி.மு.க. வெளியிட்டா நான் வெளியிடுகிறேன் என்று நீங்கள் ஏன் பேசுகிறீர்கள். நீங்கள் வெளியிடுங்கள்.

2014 பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் 12 இடங்களில் வெளிப்படைத் தன்மை என்கிற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். 2019 இல் 10 இடத்தில் வெளிப்படைத்தன்மை என்கின்ற வார்த்தையை உபயோகித்து இருப்பார்கள். இப்படி யாருமே சொல்லவில்லை.

இப்படி எழுதி வைத்துக் கொண்டு தேர்தல் பத்திரத்தில் திருட்டுத் தனம். பி.எம். கேர்ஸில் திருட்டுத் தனம். பாரினில் இருந்து ஒரு அரசியல் கட்சி பணம் வாங்கக் கூடாது என்பதில் திருட்டுத் தனம். இதை யெல்லாவற்றையும் மறைப்பதற்கு ஒரு சட்டத்தை மாற்றுவது.

அதனால் தான் நான் சொல்கிறேன். நீங்கள் ஒரு விரலை நீட்டுகின்ற போது நான்கு மடங்கு உங்களை நோக்கி விரல்கள் நீட்டுகிறது என்கின்ற உணர்வை நினைக்காத ஒருமனிதராக அவர் நடந்து கொள்கிறார்.

இவர்களோடு போட்டோ எடுத்ததே தவறு என்றால், அந்த 20 கோடி ரூபாய் கொடு என்று சொல்லி என்னிடம் ஆபாச வீடியோ இருக்கு என்கிற வரை தலைவரா நியமித்தவரை என்ன சொல்லலாம்.

ஒரு சிம்பிள் லாஜிக், இவரும் நானும் போட்டோ எடுத்துட்டோம். நான் ஒரு தவறு செய்துவிட்டேன், எனவே இவர் குற்றவாளி என்று சொல்கிறீர்கள். சரி ஏற்றுக் கொள்கிறோம். ஆனா அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இந்தக் குற்றவாளியையே மாவட்டத் தலைவராக ஆக்கிவிடுகிறார்கள். அதில் ஒட்டு மொத்தமாக குற்றம் சாட்டப் பட்டவர்களில் நான்கு பேர் பா.ஜ.க.வை சேர்ந்தவர்கள்.

இதில் என்னவென்றால், தர்மபுர ஆதினம் சாதாரண ஆள் இல்லை செங்கோலை எடுத்துக் கொண்டு போய் நிர்வகிக்கக் கூடிய பெரிய ஆள். அப்படிப் பட்டவரிடேமே பா.ஜ.க.வினர்போய் ஆபாச வீடியோ வெளியிடுவேன் என்று சொல்கிறார்கள் என்றால் பா.ஜ.க. வினரின் யோக்கியம்சம் என்ன?

இது வரை அவர்கள் எடுத்த நடவடிக்கை என்ன? உங்களிடம் அதற்குப் பதில் இல்லை. எனவே பா.ஜ.க.வினர் யோக்கியர்களாக வேஷம் போடுவது என்பது தவறு. உங்கள் தலைமை அலுவலகத்தில் வேலை பார்த்த ஜோதிக் குமார் வீட்டில் ஈ.டி.சோதனை செய்ததே அது தவறாக சோதனை செய்து விட்டது என்று கண்டனம் செய்தார்களா, இல்லையே! அவர்கள் தவறாக செய்து விட்டார்கள் என்று சொன்னார்களா? இல்லையே!

**(நியூஸ் 18 தொலைக்காட்சி 'சொல்லதிகாரம்' விவாத நிகழ்ச்சி)**



நீலகிரி மாவட்டம், உதகை சாதிமஹால் பகுதியில் பொதுபணித்துறை சார்பில் ரூ.11.86 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அரசு அலுவலர் குடியிருப்பு (50 எண்கள்) கட்டடத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் .கா.ராமச்சந்திரன் , நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்து, 6 அரசு அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார். உடன் பொதுபணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) .கௌசிக், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.



மார்ச் 1 மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழா சூரியச்சுடர் 37 பாதை அமைத்தது திராவிடம் பயணம் முதல்வரின் வழித்தடம் என்ற தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா. ஜெகதீஷ் தலைமையில் ஆட்டோ ஓட்டுநர்கள் 21 நபர்களுக்கு புதிய ஆட்டோவும் 600 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையல் தொகையுடன் சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகளை இந்து சமய அறநிலை துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வழங்கினர். இதில் மேயர் பிரியா, பகுதி கழக செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், 5–வது மண்டலக்குழு தலைவர் ப.ஸ்ரீராமுலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.லோகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். ஆர்.ரவிச்சந்திரன், மா.ஜெய்சங்கர், பா கதிரவன் நன்றி கூறினர்.

## சிறுமியின் மரணத்திற்கு தார்மீக பொறுப்பேற்று

# புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலக வேண்டும் !

### புதுச்சேரி இரா. சிவா வலியுறுத்தல்!

*புதுச்சேரி, மார்ச் 7 -*

*புதுச்சேரி மாநில எதிர்கட்சித் தலைவர் இரா.சிவா விடுத்துள்ள அறிக்கையில் கூறி யிருப்பதாவது:*

*புதுச்சேரி முத்தியால்பேட்டை சோலை நகரை சேர்ந்த தம்பதியினரின் ஒன்பது வயதான சிறுமி அதே பகுதியில் கடந்த 2-ஆம் தேதி மதியம் 1.00 மணியளவில் காணாமல் போனார். இது தொடர்பாக முத்தியால்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து ஐந்து தனிப்படைகள் அமைத்து தேடி வந்த நிலையில் நேற்று சிறுமி தனது வீட்டின் அருகே உள்ள வாய்க்காலில் இறந்த நிலையில் கண்டெடுக்கப் பட்டது அதிர்ச்சி அளிக்கிறது.*

*சிறுமியின் சடலம் மூட்டையாக கட்டி வாய்க்காலில் வீசியது யார்? மூன்று நாட்களாக ஊரையே சல்லடை போட்டு தேடிய சிறுமியின் சடலம் அருகே இருந்த வாய்க்காலுக்கு வந்தது எப்படி? அந்த வாய்க்காலை பல நூறு தடவை பார்த்தவர்கள் திடீரென இரவோடு இரவாக சிறுமியின் சடலம் வந்தது எப்படி என கேள்வி எழுப்புகிறார்கள். ஐந்து தனிப்படை போலீசாரின் தேடுதல் வேட்டை நீர்த்து போனது எப்படி? தேடுதல் வளையத்தை கிடுக்கி பிடிக்காமல் காவல்துறை அலட்சயமாக இருந்தது ஏன்? பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆதரவாக வந்த மக்களின் போராட்டத்தை ஒடுக்க துணை இராணுவத்தை நிறுத்தியது ஏன்?*

*அருகில் இருந்த கேமராக்களை ஆராய்ந்து பார்த்ததில் சிறுமி அந்தப் பகுதியை விட்டு வெளியேறவில்லை என்று காவல்துறை முடிவு செய்தும், வீடு வீடாக தேடியும் ஏன் காவல்துறையினால் கண்டுபிடிக்க முடியவில்லை? வீட்டில் சிறுமியை கொன்று, சடலத்தை பதுக்கி வைத்து மூட்டை கட்டி போட்டார்களா? இதில் காவல்துறை யாரையாவது காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடுகிறார்களா? காவல்துறையின் அலட்சிய தேடுதலே சிறுமியின் மரணத்திற்கு காரணம். வீதியெங்கும் போடப்பட்ட சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களால் எந்த பலனும் இல்லையா? சிறுமி சடலமாக கிடந்த வாய்க்காலுக்கு அருகே கஞ்சா புழக்கம் அதிகமாக இருந்திருக்கிறது. இது எல்லாம் தெரிந்தும் காவல் துறை விசாரணையை தீவிரப்படுத்தி கோல்டன் ஹவர் என்று சொல்லக்கூடிய 24 மணி நேரத்திற்குள் சிறுமியை மீட்காதது புதுச்சேரியில் சட்டம் ஒழுங்கு கட்டுப்பாட்டில் இல்லை என்பதையே குறிக்கிறது. கடந்த வாரத்தில் நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த குழந்தையை காரைக்காலில் நல்லபடியாக கண்டுபிடித்ததை போலவே இக்குழந்தையையும் மீட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை பொய்த்து போனது ஏன்?*

*புதுச்சேரியின் குழந்தைகள் நல ஆணையத்தின் தில்லு முல்லுகளும் கட்டப்பஞ்சாயத்துகளும் வெளிச்சத்துக்கு வந்ததால் விசாரணை அறிக்கையின் மூலம் அம்பலப்பட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளார்கள். சிவசாமி தலைமையிலான இந்த குழு மீது 600 பக்கம் விசாரணை அறிக்கை சமர்ப்பித்தும் நடவடிக்கை எடுக்காதது ஏன்? ராஜினாமா செய்து ஓடியவர்கள் மீது இன்று வரை நடவடிக்கை இல்லாதது ஏன்? குழந்தைகள் நல ஆணையத்திற்கு புதிய நிர்வாகிகளை உடனே நியமனம் செய்ய வேண்டும். முடங்கி கிடக்கும் மகளிர் ஆணையத்திலும் செயல்படும் நிர்வாகிகளை உடனே நியமிக்க வேண்டும்.*

*புதுச்சேரியில் தலைவிரித்தாடும் கஞ்சாவும், போதை ஸ்டாம்ப், மது போன்றவைகளால் உள்ளூர் மக்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதனால் பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்பற்ற சூழலை உணர்கிறார்கள்.*

*சிறுமி இறந்தது குறித்து புதுச்சேரி அரசு வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும். மீண்டும் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க பொது மக்களுக்கு விழிப்புணர்வும், கண்காணிப்புகளை தீவிரப்படுத்தவும் வேண்டும். பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து காவல் துறை விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். சிறுமியை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு உரிய நீதியை காலம் தாழ்த்தாமல் உடனே வழங்க வேண்டும். குற்றவாளிகள் மீது பாரபட்சமின்றி உச்சபட்ச தண்டனையை வழங்க வேண்டும். குழந்தையை பறிகொடுத்து வாடும்*



*குடும்பத்திற்கு ரூபாய் 20 லட்சம் நிவாரணம் வழங்குவது என்பது கண்துடைப்பாக இருக்க கூடாது. அந்த குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். உரிமை கேட்டு போராடியவர்கள் மீது தடியடி நடத்திய காவல்துறையை வன்மையாக கண்டிக்கிறேன். உண்மையான குற்றவாளிகள் யார் என்று பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இந்த குற்றவாளிகளுக்காக நீதி மன்றத்தில் கழக வழக்கறிஞர்கள் யாரும் வழக்காட கூடாது என அறிவுறுத்தியுள்ளேன். உள்துறையை கையில் வைத்துக் கொண்டு மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களை கொச்சைப்படுத்தும் வகையில் அரசியல் செய்யும் புதுச்சேரி பாஜகவையும் என் ஆர்.காங்கிரஸையும் வன்மையாக கண்டிக்கிறேன். போலி செய்திகளையும் அவதூறுகளையும் பரப்பும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.*

*தான் ஒரு துணை நிலை ஆளுநர் என்பதை மறந்து, தமிழிசை சௌந்தரராஜன் முழு பாஜக காரியகர்த்தா போல செயல்படுவதை தவிர்த்து பொறுப்புடன் செயல்பட வேண்டும். நாளை மாலை 4.00 மணிக்கு இண்டியா கூட்டணி சார்பாக அண்ணா சிலையில் இருந்து புறப்பட்டு காமராசர் சாலை வழியாக நேரு வீதி வழியாக சென்று தர்ணா போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கிறேன்.*

*கஞ்சா போதைப்பொருளை ஒழிக்க கோரியும், இறந்த சிறுமியின் மரணத்திற்கு நீதி வேண்டியும், இச்சம்பவத்திற்கு தார்மீக பொறுப்பேற்று புதுச்சேரியின் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலக வேண்டியும் நாளை மறுநாள் 8.3.2024 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை இண்டியா கூட்டணி சார்பில் முழு பந்த் அனுசரிக்கப் படுகிறது. இதனால், தேர்வெழுதும் +2 மாணவர்கள் பாதிக்காத வகையில், பள்ளி கல்லூரி பேருந்துகள், மருத்துவமனை, பால், மருந்தகம் போன்றவைகளுக்கு விலக்கு அளித்து, பொதுமக்கள் பாதிக்காத வகையில் அனைவரின் பேராதரவோடும் உணர்வோடும் இப்போராட்டம் நடைபெறும். இவ்வாறு ஆர்.சிவா தமது அறிக்கையில கூறயுள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கோ. இளங்கோவன்

**மார்ச் 7 (2015)**



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.**

**உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.**

**1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.3.2024) முகாம் அலுவலகத்தில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வஹாப், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகன் ஏ. முஸம்மில் அஹமது எம். பாத்திமா பர்ஸானா ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## நீலகிரி மாவட்டத்தில்,

# ரூ.8.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள்!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார்!

உதகை, மார்ச் 7-

நீலகிரி மாவட்டம், குன்னூர், உபாசி கூட்டரங்கத்தில், ரூ.8.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்ட கரும்பாலம் மற்றும் மகாலிங்கா 2 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (06.03.2024) துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப் பெண், நான் முதல்வன், விடியல் பயணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு தேயிலையும், சுற்றுலாவும் தான் முக்கிய பங்காற்றுகிறது. இதனை நன்கு உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, அரசு தேயிலை தொழிற்சாலைகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில் புணரமைக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், கடந்த சட்டப்பேரவை நிதிநிலை அறிக்கையில் தேயிலை கிலோ 1க்கு ரூ.2 மானியமாக வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். இதன் காரணமாக தேயிலை உற்பத்தியாளர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில், தனியார் தேயிலை தொழிற்சாலைகள் அதிகளவில் உள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர தேயிலை உற்பத்தியாளர்களுக்கு அதிக இலாபம் ஈட்டும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதுதான் இண்ட்கோசர்வ். எனவே, தேயிலை உற்பத்தியாளர்கள் தரமான தேயிலைகளை தொடர்ந்து தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி விற்பனை அதிகரிக்க செய்து, லாபத்துடன் தொடர்ந்து நடத்திட உறுதுணையாக நீங்கள் இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு!**

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, நீலகிரி மாவட்டத்தில் இன்று ரூ.5.6 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட கரும்பாலம் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையும், ரூ.3.62 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்ட மகாலிங்கா கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இளைஞர்களுக்கு தொழில் சார்ந்த கல்வியை பயிற்றுவிக்க ஏதுவாக சாலிஸ்பெரி தேயிலை தொழிற்சாலைக்கு ரூ.6.40 இலட்சம் மதிப்பில் பேக்கிங் இயந்திரமும், இண்ட்கோ தேயிலை தொழிற்சாலைகள் பயன்படுத்தும் வகையில் ரூ.2.27 கோடி மதிப்பில் 8 லாரிகளும், மினி லாரிகளும் இன்று வழங்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் தேயிலைத் தூள் தயாரிப்பில் விறகுகளின் பயன்பாட்டை தவிர்க்கவும், மின்சார பயன்பாட்டை குறைத்துக் கொள்ளும் வகையில் பிற தொழிற்சாலைகளுக்கு முன்னோடியாக கைக்காட்டி தேயிலை தொழிற்சாலையில் ரூ.2.26 கோடி மதிப்பில் 250 கிலோ வாட் மின் சக்தி கொண்ட சோலார் பேனல்கள் அமைக்கப்பட்டு இன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட சிறு தேயிலை தோட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க 16 தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதில், 15 தொழிற்சாலைகள் 1962 முதல் 1990கள் வரை உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள். சராசரியாக இந்த தொழிற்சாலைகள் தொடங்கி 25 முதல் 60 ஆண்டுகள் ஆகின்றன. இண்ட்கோசர்வ் நிறுவனமும், மாறி வரும் வியாபார சூழ்நிலைக்கேற்ப தனியார் நிறுவனங்களுடன் போட்டி போடும் வகையில் அதன் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்தும் பணியை அரசு துவங்கியது. அதன் அடிப்படையில், நபார்டு நிதி உதவியை கொண்டு முதல் கட்டமாக ரூ.18.54 கோடி மதிப்பில் மஞ்சூர், குந்தா, கைக்காட்டி, சாலிஸ்பெரி, பந்தலூர் ஆகிய தேயிலைத் தொழிற்சாலைகளில் நவீன இயந்திரங்களை பொறுத்தியும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்டமாக ரூ.50.6 கோடி மதிப்பில் 10 தொழிற்சாலைகளை நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் கரும்பாலம், மகாலிங்கா தொழிற்சாலைகள் பணிகள் முடிக்கப்பட்டு, இன்று துவங்கி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 தொழிற்சாலைகளில் ரூ.41.38 கோடி மதிப்பில் நவீனப்படுத்தும் பணிகள் முடியும் நிலையில் உள்ளது. விரைவில் இந்த தொழிற்சாலைகள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

தேயிலை தரத்தினை உயர்த்தவும், விற்பனையை அதிகரிக்கவும், கடந்த ஆண்டு இண்ட்கோசர்வில் ரூ.3.90 கோடி மதிப்பில் அதிநவீன கலப்பு மற்றும் Packaging unit செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

**சமச்சீர் தொழில் வளர்ச்சி!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதில் இருந்து 1 லட்சத்து 35 ஆயிரம் டன் பசுந்தேயிலையை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து 35,324 டன் தேயிலை தயாரித்து ரூ.322 கோடியே 3 லட்சம் அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

இதுவரை தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வழங்கிய 27 ஆயிரம் குறு, சிறு விவசாயிகளுக்கு தொழிற்சாலைகள் மூலம் ரூ.199 கோடியே 25 லட்சமும், இண்ட்கோசர்வ் மூலமாக ரூ.12 கோடியே 86 லட்சமும், அரசு மானியமாக ரூ.5 கோடியும் ஆக மொத்தம் ரூ.217 கோடியே 11 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடப்பாண்டு நிதி நிலை அறிக்கையில் தாயுள்ளதோடு, பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் கூடுதல் ஆதார விலையாக வழங்க ரூ.9 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள். இதன் மூலம் 27 ஆயிரம் குறு, சிறு தேயிலை விவசாயிகள் பயன் அடைவார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் சமச்சீர் தொழில் வளர்ச்சியில் தனி கவனம் செலுத்தி வருகிறார். ஆட்சி பொறுப்பேற்ற 2 ஆண்டு காலத்தில் 5 சுய தொழில் திட்டங்களின் கீழ் ரூ.1,265 கோடியே 12 லட்சம் மானியத்துடன் ரூ.3,613 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 36,974 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். இதில் 14,884 பெண்கள், 5,820 பட்டியல் இனத்தவர், 1,840 சிறுபான்மையினர், 540 மாற்றுத் திறனாளிகள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடனுதவி!**

நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த 2½ ஆண்டு காலத்தில் ரூ.11.22 கோடி மானியத்துடன் ரூ.44 கோடியே 2 லட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 579 படித்த இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். MSME தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக அரசு 10 வகையான மானிய திட்டங்களை வழங்கி வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 60 MSME நிறுவனங்களுக்கு ரூ.2.73 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேயிலை விவசாயிகளின் சிரமம் அறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் நிலையில், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வழங்கும் விவசாயிகள் தரமான தேயிலை வழங்க வேண்டும். போட்டிகள் நிறைந்த இந்த தேயிலை தொழிலில் குறைந்த விலையில் தரமான டீ தூள்களை தயாரித்து வழங்கினால் மட்டுமே, மக்களின் ஆதரவினை பெற முடியும். அதன் மூலம் விற்பனை அதிகரிக்க முடியும். நமது தொழிற்சாலைகளை லாபத்துடன் தொடர்ந்து நடத்திடவும் முடியும். ஆகவே தேயிலை விவசாயிகள் அரசின் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள், சுற்றுலாத்துறை அமைச்சர் முன்னிலையில், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதி உதவியுடன் பெறப்பட்ட 13 வாகனங்களை இண்ட்கோ தொழிற்சாலைகளுக்கு வழங்கும்பொருட்டு வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்து, இண்;ட்கோசர்வ் பற்றிய கார்ப்பரேட் வீடியோவினை வெளியிட்டார்கள்.

மேலும், அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் ஸ்ட்ரைவ் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட தொழில் பழகுநர்களுக்கு கையேடுகளை வழங்கி, சாலிஸ்பரி தொழிற்சாலைக்கு பேக்கிங் இயந்திரத்தினை வழங்கினார்.

முன்னதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசன், அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், கேத்தி பேரூராட்சி, அல்லஞ்சி பகுதியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.24.57 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 180 குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு துறைச் சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், இண்ட்கோசர்வ் கூடுதல் தலைமை செயலர் / செயலாட்சியர் திருமதி.சுப்ரியா சாஹு, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அரசு செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திருமதி. கிரேஸ் லால்ரீன்டிக்கி பச்சாவ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் நிர்மல்ராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / சிறப்பு பகுதி மேம்பாட்டுத்திட்ட இயக்குநர் கௌசிக், இண்ட்கோசர்வ் பொது மேலாளர் சங்கரநாராயணன், நபார்டு உதவி பொது மேலாளர் திருமலராவ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் / இணை இயக்குநர் (தேயிலை) சண்முகசிவா, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய செயற்பொறியாளர் சரவணகுமார், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், குன்னூர் நகரமன்றத் தலைவர் (பொ) வசீம் ராஜா, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இராமசாமி, கேத்தி பேரூராட்சித்தலைவர் திருமதி.ஹேமமாலினி, அரசு அலுவலர்கள், சிறு தேயிலை விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## சென்னை வடக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - தேர்தல் முடிவு:

## தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.டி.சேகர் அவர்கள், மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவர் தான் வகித்து வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, மார்ச் 6 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு தா.இளங்கோ (எ) தா.இளைய அருணா அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**சென்னை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக,** திரு. **தா.இளங்கோ (எ) தா.இளைய அருணா,**

எண். 1, வீராசாமி வீதி, இராயபுரம், சென்னை 600 013 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**அண்ணா அறிவாலயம்**
**சென்னை - 18**
**நாள் : 6 - 3 - 2024**

**துரைமுருகன்**
**பொதுச் செயலாளர்**
**தி.மு.க.**

---



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில், சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் நடைபெற்றது. மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், தா.மோகன்குமார், எஸ்.பாட்சா, வே.முருகன் ஆகியோர் முன்னிலையில் பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி ,மு.பாக்கியலட்சுமி ஆகியோரது வரவேற்புரையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் .துரைமுருகன் அவர்களும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேலும் கூட்டத்தில் மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமை கழக நிர்வாகிகள் வேளச்சேரி மணிமாறன், பாலவாக்கம் சோமு, எஸ்.குணசேகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், மா.அன்பரசன், துரை கபிலன், எஸ்.பிரகாஷ், மணிகண்டன், நாடிமுத்து, கோ.பாஸ்கர், ஆர்.கிருஷ்ணகுமார், களக்காடி எல்லப்பன், ஆர்.ரமேஷ், எஸ்.ஆர். செந்தில், நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், சை.மு.சேகர், எம்.நாகா இளைஞர் அணி கொடி பாலா, மாவட்ட பிரதிநிதிகள் டி.வி. நரசிம்மன், ஜி.செல்வராஜ், எஸ்.ராதாகிருஷ்ணன், இரா.சுதாபிரியன், எஸ்.ஜே.சலாம், கோட்டூர் ந.பாபு, ஜி.யோவான், ஏ.மஜீத், க.ஒப்பிலாமணி, கோ.தனசேகரன், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் இளைஞர் அணி நிர்வாகிகள் ஏராளமான கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் வழக்கறிஞர் க.உமா பதி நன்றி கூறினார்.

## 85 வட்ட தி.மு.க. சார்பில் த.கண்ணபிரான் தலைமையில்

# மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா -புகழரங்கம்!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மார்ச் 7-

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் மனிதநேயத் திருவிழா இன்று (07.03.2024 - வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் அம்பத்தூர் டெலிபோன் டெலிபோன் எக்சேஞ் எச்.பி.எம். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி கழக செயலாளருமான ஜோசப்சாமுவேல் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, தெற்கு பகுதி கழக செயலாளர் மாமன்ற துணை தலைவர் டி.எஸ்.பி.இராஜகோபால், கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், ஜி.சாந்தகுமாரி, ரமேஷ் (எ) நீலகண்டன், எல்.பி.எப்.மோகன், ஏ.பி.பூர்ணிமா, ஜி.வி.நாகவள்ளி, து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, பாலமுருகன் மற்றும் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் மா.பச்சையப்பன், க.முரளிபாபு, அ.செல்வம், க.கதீஜா, மா.இரமேஷ், மாமன்ற உறுப்பினர்கள் க.பொற்கொடி எம்.சி., எஸ்.உமா எம்.சி., உஷா நாகராஜ் எம்.சி., எம்.இ.சேகர் எம்.சி., முன்னிலையிலும்,

வழக்கறிஞர் இந்திரஜித், பூபாலன், க.ஜெயபால் மற்றும் 85 வது வட்ட கழக நிர்வாகிகள் வரவேற்பில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

இதில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், கரு.பழனியப்பன், கவிஞர். யுகபாரதி மற்றும் கவிஞர்.எழிலரசி ஆகியோர் புகழுரையாற்றுகிறார்கள்.

எனவே இக்கூட்டத்திற்கு அம்பத்தூர் வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள், தொகுதி பாக நிலை ஒருங்கினைப்பாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள், பல்வேறு அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 86 வது வட்ட கழக செயலாளர் எம்.கமல் எம்.சி., மாவட்ட பிரதிநிதி எஸ்.பி.அரிகிருஷ்ணன், 85 வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி ஆகியோர் நன்றியுரை கூறுகிறார்கள்.

---




மார்ச் - 07



இனமான பேராசிரியர்

அவர்களின்

4 ஆம் ஆண்டு நினைவுநாளில்

அவர்களின் புகழை போற்றுவோம்

நினைவுகளுடன்

இராணிப்பேட்டை ஆர்.காந்தி

மாவட்ட கழக செயலாளர் ◆ கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க


MUTHUVEL
KARUNANIDHI
STALIN
ARASU ARTS
07.03.2024 – மாலை
ரூ. 240 கோடி மதிப்பீட்டில்
மக்கள் நலத் திட்டப்பணி
கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில்
நிறைவுற்ற பணிகளைத் திறந்து வைத்து,
புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்ட வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை வரவேற்று மகிழும்...
– கொளத்தூர் தொகுதி தி.மு.க.





மார்ச்-1

# மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா

சூரியச் சுடர் - 51

**ஒருவருக்கொருவர் அருள் செய்வோம்! உடன்பிறப்புகள் துணை நிற்போம்!!**

நாள் : 07.03.2024 வியாழக்கிழமை காலை 8.00 மணி
இடம் : சி.எஸ்.ஐ செயின்ட்பால் சர்ச், சூளை

சூரியச் சுடர் - 52

**வாழ்வோடு இணைந்தது கால்நடை! வரலாற்றில் நாம் முதல்வர் படை!!**

நாள் : 07.033.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணி
இடம் : பெருமாள்கோயில் தோட்டம், சௌகார்பேட்டை

தலைமை

**ஜெ.பால்மோகன்**
மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு துணை தலைவர்

**பா.கதிரவன்**
54 அ வட்ட கழக செயலாளர்

முன்னிலை

திரு. **பி.கே.சேகர்பாபு**
மாண்புமிகு அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை
மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் - சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

மேயர் **பிரியாராஜன்** திரு. **தயாநிதிமாறன்** எம்.பி
**இ.பரந்தாமன்** எம்.எல்.ஏ **ஓ.ஏ.நாகலிங்கம் க.பிரபு**

V.சுதாகர் சொ.வேலு எம்.சி
கோ.ஏகப்பன் புனிதவதிஎத்திராசன் எம்.சி
ப.ஶ்ரீராமுலு எம்.சி கே.எஸ்.எம்.நாதன்
ராஜேஸ்வரிஶ்ரீதர் எம்.சி அ.நிர்மலாதேவி
பரிதிஇளம்சுருதி எம்.சி எம்.பெரோஸ்கான்
எல்.சுந்தர்ராஜன் எம்.சி

எஸ்.முரளி எஸ்.இராஜசேகர்
ஜி.எம்.தேவன் இசட்.ஆசாத் எம்.சி
எம்.விஜயகுமார் ராஜேஷ்ஜெயின் எம்.சி
NPM.சேக்அப்துல்லா எம்.வினாயகம்
பி.விஜயகுமார் பா.ஜெகதீஷ்
எம்.இப்ராஹிம்கனி ஆர்.கலைச்செல்வி
எல்.சம்பத்குமார் பா.பிரதீப்குமார்

271 பாதிரியார்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்

திரு. **மனோ தங்கராஜ்**
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்

கால்நடை வளர்ப்பவர்கள் 4 நபர்களுக்கு தலா ஒரு பசு வழங்குதல், 171 கால்நடை வளர்ப்பவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்

திரு. **கே.ஆர்.பெரியகருப்பன்**
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

நன்றியுரை

**ஆர்.பாபு(எ)சந்திரசேகர்**
58 அ வட்ட கழக செயலாளர்

**எஸ்.பாஸ்கரன்(எ)குட்டி**
54 அ வட்ட துணை செயலாளர்

Star Signs
044 - 43 55 48 47

## எழும்பூர் தெற்கு பகுதி, துறைமுகம் மேற்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க



## மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா

சூரியச் சுடர் - 54

**ஒன்றியம் காக்கும் உரிமை வீரர் இந்தியாவின் பெரும் வெற்றியாளர்**

நாள் : 07.03.2024 வியாழக்கிழமை
மாலை 6.00 மணி
இடம் : H.P.M.பாரடைஸ் கல்யாண மண்டபம், அம்பத்தூர் தொழிற்பேட்டை.

தலைமை

**த.கண்ணபிரான்** 85வது வட்ட கழக செயலாளர்

முன்னிலை

திரு. **டி.ஆர்.பாலு** எம்.பி
கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்ற குழுத் தலைவர்

திரு. **பி.கே.சேகர்பாபு**
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
மாண்புமிகு அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை

**ஜோசப்சாமுவேல்** எம்.எல்.ஏ
பி.கே.மூர்த்தி எம்.சி டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி
எம்.டி.ஆர்.நாகராஜ் வி.ரமேஷ்(எ)நீலகண்டன் எம்.சி
டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி எல்.பி.எப்.மோகன்
டாக்டர்.பூர்ணிமா எம்.சி ஜி.வி.நாகவள்ளி எம்.சி து.ஆயிரம்
கு.கிருஷ்ணமூர்த்தி ஜெ.பாலமுருகன்

புகழுரைப்போர்

ஏர்வாடி. **எஸ்.இராதாகிருஷ்ணன்**
**கரு.பழனியப்பன்**
கவிஞர். **யுகபாரதி**
கவிஞர். **எழிலரசி**

மேயர் **பிரியாராஜன் பி.டி.சி.செல்வராஜ்**

நன்றியுரை

**எம்.கமல்** எம்.சி 86வது வட்ட கழக செயலாளர்





Star Signs
044 - 43 55 48 47

## 85வது வட்டம் - அம்பத்தூர் வடக்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க

# தி.மு.க.வை எந்தக் கொம்பனாலும் அழிக்க முடியாது!

தி.மு.க. ஓர் அரசியல் சிவப்புப் பாஸ்பரம் ! நீரில் மூழ்கி அமைதி காக்கும், அதனை வெளியே எடுத்து விடாதே! வெளியே எடுத்தால் எடுப்பவனுக்கே ஆபத்து! தி.மு.க ஓர் அரசியல் அணு மின்சாரம்; தொடாதே! அதனைத் தீண்டினால் அபாயம்! தி.மு.க அமைதி காக்கும் அரசியல் வெடி மருந்துக் கிடங்கு ;அதன் மீது வீணாகக் தீக்குச்சியை உரசிப் போடாதே! தி.மு.க.வை மோடிக்கூட்டம் மட்டுமல்ல; எந்தக் கொம்பனாலும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாது!

ஓராண்டுக் காலமாகப் சொகுசுப் பேருந்துப் பயணத்தில் சவாரி செய்து உளறல் மொழிகளைப் பல தமிழக வீதிகளில் கொட்டி வந்த அண்டப் புளுகரும், ஆகாசப் புளுகருமான அண்ணாமலைகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்க தமிழ்நாட்டுக்கு வருகை தந்தார் பிரதமர் மோடி. பல்லடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவருக்குத் திடீர் அரசியல் ஞானோதயம் வந்ததுள்ளது, "தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோர் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தனர்" என்று புகழாரம் சூட்டியுள்ளதோடு, காங்கிரஸ், தி.மு.க. தமிழகத்தின் வளர்ச்சிக்குப் பாடு படவில்லை; தி.மு.க.வினால் அரசியலுக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது; நான் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதால், எதிர்க்கட்சிகள் என் மீது கோபத்தில் இருக்கின்றன!. இப்படிப் பேசி இருக்கிறார் மோடி. முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி மற்றும் பா.ஜ.க. முன்னணித் தலைவர்கள் எல்லோரும் ஜெயலலிதா மற்றும் அவரது ஆட்சியைப் பற்றிப் பேசிய பேச்சுகளை மறந்து விட்டாரா? அதைப்போல வாஜ்பாய் அத்வானி போன்றவர்களை ஜெயலலிதா அவமானப்படுத்திப் பேசியதையும் மறந்து விட்டாரா மோடி? அவற்றையெல்லாம் தனக்கு வசதியாக அரசியல் அரங்கிற்குச் சொல்லாமல் தவிர்த்தது ஏன்?

யாருடைய வளர்ச்சிக்காகப் பாடுபட்டார் மோடி? பத்தாண்டு பா.ஜ.க ஆட்சியில் நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்காகப் பாடுபட்டாரா? தான் ஓர் ஏழைத்தாயின் மகன் என்று கூறி, 10 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கோட்டு, சூட்டுகளைப் போட்டுக் கொண்டு 2015 ஆம் ஆண்டு இந்தியக் குடியரசுத் தின அணிவகுப்பில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஒபாமாவுடன், விஸ்வரூபக் காட்சி தந்தவர்தானே இந்த ஏழைத் தாய் மகன் மோடி? இந்திய மக்களின் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் வரிப்பணத்தில் 90 முறைக்கு மேல் சொகுசு விமானத்தில் பயணம் செய்து வெளிநாடுகள் சுற்றி வந்தவர்தானே இந்த வளர்ச்சி நாயகன் மோடி? அம்பானி, அதானி, நீரவ் மோடி போன்ற பெரு முதலாளிகளுக்காக இந்திய மக்களின் வங்கிப் பணமான ரூபாய் 25 இலட்சம் கோடிக்கு மேல் அள்ளிக் கொடுத்துச் சூறையாடியவர் தானே இந்தச் சூராதி சூரர் மோடி!

"மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியிலிருந்து தி.மு.க குடும்பம் கொள்ளையடித்த பணம் மீட்கப்பட்டுத் தமிழக மக்களுக்காகச் செலவிடப்படும். இது மோடியின் உத்தரவாதம்" என்று (04.03.2023); அன்று சென்னை ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெற்ற பா.ஜ. கட்சிப் பொதுக் கூட்டத்தில், இந்தியாவின் கோயபல்ஸ் மோடி பேசியிருக்கிறார்.

இந்திய இரயில் நிலையங்கள், துறைமுகங்கள், எல்.ஐ.சி போன்ற பொதுத்துறை நிறுவனங்களையெல்லாம் கார்ப்பரேட் முதலாளிகளுக்குத் தாரை வார்த்த வளர்ச்சி முறை பற்றித் கூற வேண்டியது தானே மோடி? ஏன் பேசவில்லை?

பல்லடத்திற்கும், நெல்லைக்கும் சென்று வாய் ஜாலம் காட்டிப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, எம்.ஜி.ஆர். பற்றியும் ஜெயலலிதா பற்றியும் புகழ்மாலைகள் சூட்டிச்சென்றுள்ளார். அதே நேரத்தில் அ.தி.மு.க. கட்சியைப் பற்றியோ எடப்பாடி பழனிச்சாமிகள் போன்றவர்களைப் பற்றியோ எந்தவித விமர்சனம் செய்யாமல் சென்று இருக்கிறார் இந்த உத்தமபுத்திரர்! காரணம் என்ன? அவருடைய கொத்தடிமைகளாக 5 ஆண்டு காலம் இருந்து பணி புரிந்தார்கள் அல்லவா? கரப்சன், கலெக்சன், கமிஷன் போன்றவற்றில் கொடி கட்டிப் பறந்த எடப்பாடிகள், மோடி நடத்தி வரும் இந்துத்வா மத வெறி ஆட்சியில் அவர் செய்து வரும் சட்டவிரோத, மக்கள் விரோதச் செயல்கள் அனைத்துக்கும் சலாம் போட்டு உறுதுணையாகக் கைகட்டி, மெய்பொத்திக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தவர்கள் அல்லவா அவர்கள்? எடப்பாடி பழனிச்சாமிகளையும், அ.தி.மு.க.வையும் மோடி விமர்சிக்காததற்குக் காரணம் என்ன? தன்னுடன் மறைமுக உறவு இன்னும் அ.தி.மு.க வைத்திருக்கிறது என்பதைத் தவிர்க்கதானே? இன்னும் கூட்டணிக் கடையை விரித்துத் திறந்து வைத்திருக்கிறார் மோடி! அல்லது பா.ஜ.க கூட்டணிக்குள் அதைக் கொண்டு வருவதற்கு என்பது தானே வெட்ட வெளிச்சமான செய்தி!

2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மதுரையில் பேசிய அமித்ஷா தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையில் நடைபெறும் ஊழல் ஆட்சியை அகற்ற வேண்டும் என்றும், ஏப்ரல் 13, 2016 சட்டமன்றத் தேர்தலில் ஊழல் (Jayalalitha Government most Corrupt : Amit Sha) நடத்திக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவின் ஆட்சியை வீழ்த்த வாருங்கள் என்றும் அமித்ஷா பேசியதை மறந்து ஜெயலலிதா சிறப்பான ஆட்சி கொடுத்தார் என்று மோடி பேசுவது ஏன்?

"எம்.ஜி.ஆர். ஜெயலலிதா தமிழ்நாட்டில் சிறப்பாக ஆட்சியை நடத்தினர்" என்று பல்லடம் மற்றும் நெல்லை கூட்டங்களில் அவர்கள் மீது கரிசனம் ஏற்பட்டது போல் மோடி உளறியுள்ளார். எம்.ஜி.ஆர். பற்றி அவரது கட்சியில் இருந்த ஜெயலலிதாவும், அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரமும் என்ன சொன்னார்கள் என்று பார்க்கலாமா? எம்.ஜி.ஆர். ஆட்சி பற்றி அவரது அமைச்சரவையில் இடம் பெற்று இருந்த எஸ்.டி. சோமசுந்தரம் 1984 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். மீது வலுவான குற்றச்சாட்டுகளைச் சொன்னார். எம்.ஜி.ஆரை மீறிக் கொள்கை பரப்புச் செயலாளராகவும், இராஜ்ய சபை எம்.பி.யாகவும் இருந்த ஜெயலலிதாவின் தலையீடுகள் ஆட்சியிலும் கட்சியிலும் அதிகமாக இருந்தன. இந்த நிலையில் ஆத்திரப்பட்ட எஸ்.டி. எஸ். எம்.ஜி.ஆரிடமே நேரில் வருத்தப்பட்டு ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் பற்றிக் குறை கூறினார். டெல்லியிலும் தமிழ்நாட்டிலும் அவரது தலையீடுகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் எம்.ஜி.ஆர். கண்டுகொள்ளவில்லை. இதனால் மேலும் பிரச்சினைகள் ஆரம்பிக்க அமைச்சர் எஸ்.டி.எஸ். வசமிருந்த கலால் துறை பறிக்கப்பட்டது.

"சினிமாவில் வந்த எம்.ஜி.ஆரும், நடைமுறையில் உள்ள எம்.ஜி.ஆரும் ஒரே மாதிரியான குணங்கள் கொண்டவர்கள் அல்ல என்று மக்கள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அவர் இலஞ்சம் வாங்குகிறார்; தவறு செய்கிறார் என்று மக்கள் நம்புகிறார்கள்; அவர் சோதனைக்கு ஆட்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன்; அவர் இலஞ்சம் வாங்கவில்லை என்று சொல்லித் தப்பிக்க முடியாது;. தகுந்த ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. எம்.ஜி.ஆர். அமைச்சரவையிலுள்ள அமைச்சர்கள் மீது பல இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு அனுப்பியது, ஆனால் அந்தப் பட்டியலை அமைச்சரவைக் கூட்டத்தில் கூட எம்.ஜி.ஆர். வைக்கவில்லை. "... இப்படி அ.தி.மு.க. கட்சியில் இருந்து கொண்டு எஸ்.டி.எஸ் அவர்கள் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிப் பேசினார். அக் காரணத்தால் அவர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டதோடு கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டார். பிறகு அவருடைய ஆதரவாளரோடு செப்டம்பர் 5,1984 அன்று புதிய கட்சி தொடங்கினார்.

சரி; ஜெயலலிதாவினுடைய ஆட்சியின் சிறப்பு என்ன? மாதம் ஒரு ரூபாய் சம்பளம் வாங்குவேன் என்று சொல்லி அவர் முதலமைச்சராக இருந்த 5 ஆண்டுகளில் சட்டத்தை மீறி வருமானத்திற்கு புறம்பாக ரூபாய் 66 கோடி ரூபாய்க்கு மேல் சொத்து சேர்த்த வழக்கு நடைபெற்றதே, நீதிபதி மைக்கேல் டி குன்ஹா தீர்ப்பால், முதலமைச்சராக இருந்த நிலையிலேயே நான்காண்டுகள் சிறைத் தண்டனை பெற்று, கர்நாடக பரப்பன அக்ரஹாரச் சிறைக்குச் சென்ற அவரின் ஆட்சிச் சிறப்புகளைக் கூறுகிறாரா மோடி? அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அடிமாட்டு விலைக்கு ஒரு முதலமைச்சரே வாங்கி, அதனால், கீழமை நீதிமன்றம் இரண்டு ஆண்டுகள் தண்டனை கொடுத்து பிறகு உச்ச நீதிமன்றத்தில், பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று நாடகமாடி மன்னிப்பு கேட்டாரே! அந்த ஜெயலலிதாவினுடைய ஆட்சி மக்கள் நலனில் அக்கறை காட்டிய சிறப்பான ஆட்சியா? இதுபோல பல ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்ட ஆட்சிதான் ஜெயலலிதா நடத்திய ஆட்சி என்பதை மறந்து மோடி பல்லடம், நெல்லைக் கூட்டங்களில் பேசி விட்டுச் சென்றிருக்கிறார்!

ஒன்றியத்தில் பிரதமராக இருந்த வாஜ்பாய் ஆட்சியைப் பற்றிக் கடுமையான குற்றச்சாட்டுகள் கூறி, 2001 ஆம் ஆண்டு சென்னை மெரினா கடற்கரையில் ஜெயலலிதா பாட்டுப் பாடி வாக்கு கேட்டதை மறந்து விட்டாரா? 2016 ஆம் ஆண்டு 'மோடியா? லேடியா?' என்று பார்த்து விடலாம். நான் ஒரு முறை தவறு செய்து விட்டேன் என்பது உண்மை. இனி, எந்தக் காரணத்திலும், எப்போதும் பா.ஜ.க.வுடன் ஒட்டோ உறவோ இல்லை என்று ஜெயலலிதா பேசினாரே! அதை எல்லாம் மறைத்து மோடி பல்லடத்திலும் நெல்லையிலும் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிவுரை வழங்குகிறாரா?

தமிழ்நாட்டில் இருந்து தலித் ஒருவர் எல்.முருகன் என்பவர் ஒன்றிய மந்திரியாக ஆக்கப்பட்டுள்ளார் என்ற புதிய செய்தியைப் பிரதமர் மோடி கோமாளித்தனமாகப் பேசி இருக்கிறார். ஏற்கெனவே மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி ஆட்சியிலும், மன்மோகன் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியிலும் தி.மு.க அமைச்சர்கள் பங்கேற்று பணியாற்றி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆ. இராஜாவும் பங்கேற்றுப் பணியாற்றி வந்திருக்கிறார் என்பதைக் கூற மோடி மறந்தது ஏன்? மலைவாழ் மக்கள் ஜாதியைச் சேர்ந்த இந்தியக் குடியரசு தலைவர் திரௌபதி முர்முவை புதிய பாராளுமன்றக் கட்டிடம் திறப்பு விழாவிற்கு அனுமதிக்கவில்லை. கட்டி முடிக்கப்படாத இராமர் கோவில் திறப்பு விழாவுக்கும் அழைக்கப்படவில்லை. தேர்தலுக்காக நடத்திய நாடகத்தில் இவர் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களை பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது?அப்போது தாழ்த்தப்பட்ட சமுதாயம் பற்றிய அவருடைய எண்ணம்,செயல்பாடு எங்கே போனது?

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலுக்காக மட்டும் தொடங்கப்பட்ட இயக்கமல்ல; காலங்காலமாக அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதி கிடைக்கவும், கல்வி, வேலைவாய்ப்பு பெறவும், அரசியலில் ஆக்கமும்; ஊக்கமும் பெறவும் தான் தொடங்கப்பட்ட இயக்கம்! தந்தை பெரியார் கூறிய மானமும், அறிவும் பெறவும்; பேரறிஞர் அண்ணா, கலைஞரால் நிலை நாட்டப்பட்ட மக்களுக்கான நலம் பயக்கும் சட்ட, திட்டங்களைத் தந்து முழக்கமிடும் கழகம்! இந்தியாவுக்கான திராவிட மாடல் ஆட்சியைத் தளபதி ஸ்டாலின் அவர்கள் தன் தோளில் தூக்கிச் சுமந்து வீர நடைபோட்டு வருகிறார். இதனை மோடிகள் தெரிந்து கொள்ள வேண்டும். "தி.மு.கழகத்தை முற்றிலுமாக அகற்றப்படும்; எங்கும் தேடினாலும் இனிக் கிடைக்காத நிலை ஏற்படும்" என்று எக்காளமிட்டுள்ளார் மோடி. இமயமலையை ஈக்களால் பெயர்க்க முடியுமா? நெருப்பைக் கரையான்களால் தின்ன முடியுமா? அது போலத் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்தக் கொம்பனாலும் ஆட்டவோ, அசைக்கவோ, அழிக்கவோ, ஒழிக்கவோ முடியாது!

கவிஞர்
தமிழ்தாசன்
தி.மு.க.
தீர்மானக் குழுத் தலைவர்



"பிரதமர் பதவியை தாழ்த்தும் வகையில் மோடி பேசி உள்ளார். தி.மு.க.வை அழிப்பேன் என்று கூறிப் பலர் அழிந்து போனதுதான் தமிழ்நாட்டின் வரலாறு. தோல்விப் பயத்தில் பிரதமர் அவதூறு பரப்புகிறார். ஆளுங்கட்சியாகச் செயல்படத் தெரியாத பா.ஜ.க., இனி நல்ல எதிர்க்கட்சியாக விளங்க எனது வாழ்த்துகள்" .... என்று தி.மு.க தலைவரும், முதல்வருமான தளபதி ஸ்டாலின்தான் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்!

"தமிழ்நாட்டில் இனி தி.மு.க இருக்காது.. தி.மு.க முற்றிலுமாக அகற்றப்படும் .. எங்குத் தேடினாலும் இனி கிடைக்காத நிலை ஏற்படும்..." என்று ஆணவ வெறியோடு கொக்கரித்துச் சென்றிருக்கிறார் இந்திய சர்வாதிகாரி ஹிட்லர் மோடி!

அவசர நிலை கண்டு அஞ்சாத இயக்கம் தி.மு.க.! பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டு பயப்படாத இயக்கம் தி.மு.க.! நெருக்கடி நிலையில் நெருப்பாற்றை நீந்தி வந்து நெஞ்சை உயர்த்தி, நிமிர்ந்து நிற்கிற இயக்கம்தான் தி.மு.க.! கட்டை விரலை நறுக்குவேன் என்றார் பெருந்தலைவர் காமராஜர். மூட்டைப் பூச்சிகளைப் போல் நசுக்குவேன் என்று சொன்னார் மூதறிஞர் இராஜாஜி. தி.மு.க.விற்கு கல்லறை கட்டுவேன் என்றார் எம்.ஜி.ஆர்! கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகள் இல்லை என்று எக்காளமிட்டார் ஜெயலலிதா! இவை அனைத்தையும் வென்று, மென்று, தின்று செரிமானம் செய்து செம்மாந்து நிற்கிற இலட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்ட இயக்கம் தான் தி.மு.க.! திராவிட முன்னேற்றக் கழகம் மழைக்காலத்தில் பூத்த காளான் அல்ல; அது காலத்தால் அழிக்க முடியாத கற்கோட்டை: தி.மு.க. ஒன்றும் இடரும் மணல் வீடு அல்ல; என்றும் இடம்பெயராத இமயமலை! தி.மு.க.வை அழிப்பதற்கு மோடியல்ல; மோடியைப் போல ஆயிரம், ஆயிரம் சர்வாதிகாரிகள் எவர் வந்தாலும், எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது என்பதற்கு அரசியல் வரலாறு சாட்சி! அண்ணாவும், கலைஞரும்; பெரியார் என்னும் பகுத்தறிவு, சுயமரியாதை, அறவழிப் பாறைகளால் கட்டி எழுப்பிய மாபெரும் இயக்கம்தான் தி.மு. கழகம்! அதற்கான சாட்சிகளாகக் கடந்த கால வாஜ்பாய்களும், அத்வானிகளும், முரளி மனோகர் ஜோஷிகளும் இருந்து பார்த்தார்கள் என்பதை இன்றைய அரசியல் திடீர் மழைக் காளானாக வந்த மோடிகள் அறிந்து கொள்ள வேண்டும்! இப்பொழுது சர்வாதிகாரத்தை வீழ்த்தி, ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தளபதி மு.க.ஸ்டாலின் எழுப்பிய மதச்சார்பற்ற "இந்தியா கூட்டணி"யாகும். மோடி போன்ற கூக்குரல் எழுப்பும் கோமாளித்தனக் கூத்துகளுக்கு எல்லாம் அஞ்சி விடாது திராவிட முன்னேற்றக் கழகம்!



நீலகிரி மாவட்டம், கேத்தி பேரூராட்சி, அல்லஞ்சி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.24.57 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமான பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# ஓட்டேரி நல்லா கால்வாயில் ட்ரோன் மூலம் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்! ஆர்.பிரியா பேட்டி!

சென்னை, மார்ச் 7 -

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா ஆகியோர் நேற்று (6.03.2024) திரு.வி.க. நகர் மண்ட லத்திற்குட்பட்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் ட்ரோன் மூலம் கொசுக்கொல்லி மருந்து தெளிக்கும் பணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் புனிதவதி எத்திராஜன், எல்.ரமணி, மாநகர அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், தலைமைப் பூச்சித் தடுப்பு அலுவலர் டாக்டர் செ. செல்வகுமார், மண்டல அலுவலர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேயர் ஆர்.பிரியா செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது :

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்திற்கு பிறகு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகள், நீர்நிலைகள், கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்களில் தொடர்ந்து கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் அடிப்படையில் தற்போது கொசுப் புகை மருந்து அடித்தல், கொசுக்கொல்லி மருந்து தெளித்தல் பணிகள் வீடுவீடாக சென்று தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓட்டேரி நல்லா கால்வாயில் ட்ரோன் மூலம் கொசு மருந்து தெளித்தல் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கொசு ஒழிப்பு பணிக்கென 410 மருந்து தெளிப்பான்கள், 109 பவர் ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் 287 ஸ்ப்ரேயர்கள், 219 கையினால் இயங்கும் புகைப்பரப்பும் இயந்தி ரங்கள், 8 சிறிய புகைப்பரப்பும் இயந்திரங்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட 68 புகைப்பர ப்பும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு வட்டாரத்திற்கு இரண்டு என 6 ட்ரோன் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆண்டும் 6 ட்ரோன் இயந்திரங்கள் மூலம் கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளில் கொசு மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மலேரியா பணியாளர்கள் மூலம் வீடு வீடாகச் சென்று கொசுப்புழு வளரிடங்களான, மேல்நிலை/கீழ்நிலைத் தொட்டி, கிணறு, தேவை யற்ற பொருள்கள் (டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குடங்கள் போன்றவைகள்) ஆகிய வற்றை கண்டறிந்து கொசுப் புழுக்கள் இருப்பின் அதனை அழித்திடும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பொதுமக்களும் தங்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாகப் பராமரித்திட தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பிளீச்சிங் பவுடர் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரை 31 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப் பட்டிருந்த நிலையில், இந்த ஆண்டு டெங்கு பாதிப்பு குறைந்து இது வரை 18 நபர்களுக்கு மட்டுமே பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## க.கோவிந்தராஜ் தலைமை ! இரா.செந்தில்குமார் - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# 51வது வட்ட தி.மு.க. சார்பில் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## தமிழ் க.அமுதரசன் சிறப்புரை ! ஆர்.டி.சேகர் கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் இரா.மூர்த்தி - என்.நவீன் பங்கேற்பு !

சென்னை, மார்ச் 7-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் தெருமுனைக் கூட்டம் இன்று (07.03.2024 வியாழக்கிழமை) மாலை 6 மணியளவில் ஜெ.பி.கோயில் தெரு, சஞ்சீவிராயன் கோவில் தெரு, சந்திப்பில் நடைபெறுகிறது.

இதில் வட்ட செயலாளர் க.ஆறு (எ) கோவிந்தராஜ் தலைமையில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், எஸ்.குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், எல்.சீனிவாசன், காட்டன். ஜி.சதிஷ்குமார், ஆர்.வி. கணேஷ், என்.கிருஷ்ணன், பி.கண்ணன், என்.பாரி, ஐசிஎப்.பழனிவேல், எஸ். சுரேஷ், க.கலைச்செல்வன், வி.குமார், அத்தோ.பி.முனுசாமி, எம்.என்.வெங்கட், கெ.லட்சுமணன், வி.வி.தங்கராஜ், க.சேகரன், எம்.எம். சந்துரு, இரா.முருகன், க. சுரேஷ், த.ரவி, எம்.இ. சாகுல்அமீது, பி.எஸ்.நாராயணன், கே.ஆறுமுகம், கெ. சசி, டி.கவியரசு, கே.குபேரன், வி.சரவணன், டி.நந்தகுமார், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, கழக மாணவரணி துணை செயலாளர் தமிழ் க.அமுதரசன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இராயபுரம் தொகுதி பொறுப்பாளர் என்.நவீன், ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், தா. இளையஅருணா, எஸ்.ஆர். கமலக்கண்ணன், க. நாகம்மை, மு.கோபி, ந. சண்முகம், வே.சிவகுமார், பி.ராஜேந்திரன், வட்ட செயலாளர்கள் : இரா. பாலன், எம்.எல்.ரவி, எஸ். புகழேந்தி, கொரியர் பி.முருகன், எல்.பாலலட்சுமி, ஜெ.கௌரீஷ்வரன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

51வது வட்ட பொருளாளர் ஜி.உமாபதி நன்றி கூறுகிறார்.

## சென்னை வடகிழக்கு மாவட்ட

# மீனவர் அணி அறிமுக - ஆலோசனைக் கூட்டம்!

## தலைமை: ஆர்.நவகுமார்! முன்னிலை: கே.தேசிங்கு! கே.பி.சங்கர் வாழ்த்து!

சென்னை, மார்ச் 7-

சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்கு புதிதாய் அறிவிக்கப்பட்ட மீனவர் அணியினரின் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணி அளவில் சென்னை திருவொற்றியூரில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்தில் சென்னை வடகிழக்கு மீனவர் அணி மாவட்டத் தலைவர் ஆர்.நவகுமார் தலைமையில், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங்கு முன்னிலையில், மாவட்ட துணைத் தலைவர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

புதியதாக அறிவிக்கப்பட்ட சென்னை வடகிழக்கு மாவட்ட மீனவரணி நிர்வாகிகள் அனைவரும் மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கரை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இயற்கையை ஒன்றி வாழக்கூடிய சூழலில் இயற்கையை எதிர்த்து வாழக்கூடிய இனம் மீனவர் இனம். மீனவன் என்றால் முரடன் என்பதை தாண்டி மீனவன் என்றால் ஒற்றுமையின் அடையாளம் என்பதை நிரூபித்த நம் மாவட்ட மீனவரணி அமைப்பாளர் கே. தேசிங்கு, மாவட்ட தலைவர் ஆர்.நவக்குமாருக்கும் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பாராட்டுகளுடன் வாழ்த்துக்கள் என்று வாழ்த்தினார்.

கழக சென்னை வடகிழக்கு மாவட்ட மீனவரணி நிர்வாகிகள் மாவட்டத் தலைவர் ஆர்.நவாக்குமார், துணைத் தலைவர் டி. சேகர், மாவட்ட அமைப்பாளர் கே.தேசிங்கு, து. அல்லி முத்து தலவை எஸ். ரஞ்சித் கே.சம்பத், என். கோதண்டன், ஜி.முரளி, தே.சக்கரவர்த்தி, டி.தமிழ் செல்வன், ஆ.து.மணி, சி. செல்வம், எம்.ரமேஷ், ஆர். குமரன், இரா.பிரகாஷ், எம்.எல்.வேலன், டி.மகேந்திரன், த. தேசப்பன், எம். பிரேம்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மத்திய பகுதி 20வது வட்டத்தில் முதல்வர் அவர்களின் 71வது பிறந்தநாள் விழா மணலி பெரியதோப்பு சந்தானகிருஷ்ணன் சாலையில் உள்ள வ.உ.சி. மஹால் சின்னமாத்தூர் பிள்ளையார் கோயில் அருகில் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டல குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கி துவக்கி வைத்தார். இதில் 20வது வட்டகழக செயலாளர் எம். செல்வம், துர்கா கோதண்டம், சாலை கணேசன், ஜி.ராமமூர்த்தி, பி.தாமோதரன், சி.மங்கைலட்சுமி, எம்.பவானி, டி.குலசேகரன், கே.தயாளன், எஸ்.தரணிபாபு, ஆர்.சுந்தர், கே.ராமு, ஏ.வி.முருகன், எஸ்.கதிர், வி.ஜி.டி.விக்னேஷ், ஆர்.டி.ரமேஷ்குமார், நாகலிங்கம், கேபிள் கணேசன், பாஸ்கர் சுகுமார், மகேந்திரன், வெற்றிவேல், எஸ்.கோபி, சுரேஷ், சி.எம்.பாபு, தினகரன், எம்.எஸ்.ரவி, விவேகானந்தன், ஜி. அஜித், எஸ்.சுமித்திரா, ஜாபர், நடராஜ் மற்றும் இளைஞரணி, மகளிரணி, கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132 வது வட்டம், சென்னை நடுநிலைப் பள்ளியில் த.ராஜசேகரன் சுந்தர் பிலிப் ஆகியோர் தலைமையில் பள்ளி மாணவர்களுக்கு உணவு மற்றும் நோட்டு புத்தகங்கள் எழுது பொருட்களை சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்ட மன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் மு.சத்தியா, கே.எஸ்.வெல்டிங் ராஜா, கா.சந்துரு, சி.சங்கர், மூ.பாண்டியன், எம். ராமச்சந்திரன், மு.பாலகுரு, எஸ்.கே.நசீர், பி.வேலு, எஸ்.ரஜினி, கே.ஜெலேந்திரன், என்.ராமநாதன், ஏ.நோபல், எம். ரவி, பிரசாத், து.ஆனந்தராஜ் எஸ்.கிருஷ்ணமூர்த்தி, என்.சாந்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.03.2024) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.256.50 கோடி மதிப்பீட்டில் தீவிர சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடம், செவிலியர் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்டிடம், செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடம், அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் கூடுதல் தளங்கள் கட்டிடம் மற்றும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையின் புதிய அடுக்குமாடி உயர்தர சிகிச்சை கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் ஆயத்தரசு ராஜசேகரன், அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி, மருத்துவத்துறை பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் உடனிருந்தனர்.

### கந்தகோட்டம், முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த

# திருமதி சாமுண்டீஸ்வரி அம்மாள் அறக்கட்டளை சார்பில் புதிய மருத்துவ மையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 7-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (06.03.2024) சென்னை, மண்ணடி, தம்புசெட்டி தெருவில், கந்தகோட்டம் முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த திருமதி சாமுண்டீஸ்வரி அம்மாள் அறக்கட்டளை சார்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய மருத்துவ மையத்தினை திறந்து வைத்து, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அங்கு சிகிச்சை அளிக்கப்படுவதை பார்வையிட்டார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருகின்ற திருக்கோயில்களில் மருத்துவ மையங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் 2021 ஆம் ஆண்டில் பழநி, திருச்செந்தூர் உட்பட 10 திருக்கோயில்களிலும், 2022 ஆம் ஆண்டில் 5 திருக்கோயில்களிலும் மருத்துவ மையங்கள் தொடங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக 2023 2024 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி சென்னை, தம்பு செட்டி தெருவில் கந்தகோட்டம் முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த திருமதி சாமுண்டீஸ்வரி அம்மாள் அறக்கட்டளை மற்றும் கோவை மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயில் சார்பில் என 2 மருத்துவ மையங்கள் இன்று திறக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு மருத்துவப் பணியும் இறைப் பணி தான் என்பதற்கேற்ப இதுவரை 17 மருத்துவ மையங்கள் திறக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வந்திருக்கின்றன. இதுவரை இம்மருத்துவ மையங்களில் அவசர சிகிச்சை மற்றும் முதலுதவி அளித்த வகையில் 4.5 லட்சம் நபர்கள் பயன்பெற்றுள்ளனர். கந்தக்கோட்டம் திருக்கோயில் சார்பில் தொடங்கப்பட்டுள்ள இம்மருத்துவ மைய இடமானது திருமதி சாமுண்டீஸ்வரி அம்மாள் அவர்கள் திருக்கோயிலுக்கு உயிலாக எழுதி தந்த 2,652 சதுரடி இடத்தில் கடந்த 03.03.1980 அன்று மருத்துவமனை அமைக்கப்பட்டு ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர், இந்த இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இன்றைக்கு கோயில்களை பாதுகாப்போம் கோயில் சொத்துக்களை பாதுகாப்போம் என்று சொல்லுகின்ற பாரதிய ஜனதா கட்சி சார்ந்தவர் தான் இந்த இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்து, 14 அறைகளை வழக்கறிஞர்களுக்கு வாடகைக்கு விட்டிருந்தார். சட்டப்படி நீதி மன்றத்தை நாடி இந்த இடத்தை மீட்டுள்ளோம்.

**கோவில் நிலம் ஆக்கிரமித்தவர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்!**

திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில் அம்மணி அம்மாள் கோபுரத்தை கட்டித்தந்த அம்மணி அம்மாள் வசித்த மண்டபத்தை பல ஆண்டுகளாக ஆக்கிரமித்து அனுபவித்து வந்த நிலையில் சட்டப் போராட்டம் நடத்தி அந்த இடத்தை மீட்டு அம்மணி அம்மாளுக்கு ஏற்கனவே இருந்த மண்டபத்தை புனரமைத்தும், பக்தர்களின் வசதிக்காக வாகனங்கள் நிறுத்துவதற்கும் ஏற்பாடு செய்துள்ளோம். இந்த இடத்தையும் ஆக்கிரமித்திருந்தவர் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவர் தான். திருக்கோயில் நிலங்களை எங்கெங்கெல்லாம் பாரதிய ஜனதா கட்சியினர் அபகரித்திருந்தார்களோ அந்த நிலங்களையெல்லாம் மீட்டோம் என்ற வரலாறு எங்களிடம் இருக்கின்றது. ஆகவே இந்த ஆட்சியைப் பொருத்தளவில் தவறு செய்தவர் யாராக இருந்தாலும் எந்த பதவியில் இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க இந்த ஆட்சி தயங்காது. அதேபோல நில ஆக்கிரமிப்பில் அலுவலர்கள் துணை போனதாக கண்டறியப்பட்டால் அவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், இதுவரையில் 1,462 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மாநில அளவிலான வல்லுநர் குழுவால் சுமார் 8,500 திருக்கோயில்களுக்கு திருப்பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.5,950 கோடி மதிப்பிலான 6,800 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், 1,62,107 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் ரோவர் கருவியின் மூலம் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. பட்டா மற்றும் கணினி சிட்டாக்களில் தவறுதலான பதிவுகள் கண்டறியப்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர்களிடம் மேல் மறையீட்டு செய்யப்பட்டு 8,638 ஏக்கர் நிலங்கள் திருத்தம் செய்யப்பட்டு திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் 15 திருக்கோயில்களில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் ரூ.1,367 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆட்சி ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்குள்ளாக சுமார் 18,400 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பக்தர்களின் நலனுக்காக இது போன்ற அறப்பணிகள் தொடரும்.

மூத்த குடிமக்கள் 1,000 நபர்களை 5 கட்டமாக அறுபடை வீடுகளுக்கு அழைத்து செல்லும் ஆன்மிகப் பயணத்திற்கு மிகப் பெரிய வரவேற்பு இருக்கின்றது. இத்திட்டமானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தையில் உருவான திட்டமாகும். இத்திட்டத்திற்காக அரசு ரூ.1.58 கோடி நிதி வழங்கியுள்ளது. முதல் கட்டத்தில் 207 மூத்த குடிமக்களும், அழைத்துச் செல்லப்பட்டனர். இரண்டாம் கட்ட பயணம் இன்று பழனியில் 200 மூத்த குடிமக்களுடன் தொடங்கியுள்ளது.

அதேபோல மகா சிவராத்திரி பெருவிழா வருகின்ற மார்ச் 8 ஆம் தேதி 7 திருக்கோயில்கள் சார்பில் ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் வெகுவிமரிசையாக நடைபெற உள்ளது. மகா சிவராத்திரி விழாவானது முதன்முதலில் 2022 ஆம் ஆண்டு மயிலாப்பூரில் தொடங்கப்பட்டு, கடந்தாண்டு 5 திருக்கோயில்கள் சார்பில் கொண்டாடப்பட்டது. இந்தாண்டு கூடுதலாக மதுரை மற்றும் திருவானைக்காவல் ஆகிய 2 திருக்கோயில்களில் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்பட உள்ளது. இதேபோல் அனைத்து விழாக்களையும் பக்தர்கள் சிறப்போடும் மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி ஆன்மீகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர் முதலமைச்சர் அவர்கள் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, உதவி ஆணையர் (பொறுப்பு) திருமதி சி. நித்யா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள், திருக்கோயில் செயல் அலுவலர் ஆ.குமரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

**ஜோலார்பேட்டை கிழக்கு, மேற்கு மத்திய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்**

### திருத்தம்

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்;

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **சின்னமூக்கனூர் ஊராட்சி ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியக் கழகத்தின்** கீழ் இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 06.03.2024

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.




கண்டோன்மெண்ட் நகரக் கழகம் சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் பாபு தலைமையில் நடைபெற்றது. இதில் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இதில் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்க வருடம் முழுவதும் மரம் நடும் நிகழ்ச்சி முகலிவாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்தன் தலைமையில் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் 12 வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன், வடக்குப் பகுதிச் செயலாளர் பி. குணாளன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், கே. ஆர். ஜெகதீஸ்வரன், அ. வேலவன், மாமன்ற உறுப்பினர் ஜெ பூங்கொடி, சுற்றுச்சூழல் மாவட்ட நிர்வாகிகள் பா. பிரசாத், உமாசங்கர், , டேனியல் சந்துரு, ராஜன் பெருமாள், சி. வாசிம் ராஜா, முகலி ம. மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**க.சு.தமிழ்உதயன் தலைமை! கே.சசிகுமார் முன்னிலை! மீஞ்சூர் பேரூரில் இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் துண்டுப் பிரசுரம்! ருக்மணி மோகன்ராஜ் வழங்கினார்!**

மீஞ்சூர், மார்ச் 7-

மீஞ்சூர் பேரூர் கழகம் சார்பில் 3.3.2024 அன்று காலை மீஞ்சூர் பேரூராட்சி 12 வது வார்டு பச்சையம்மன் நகர் பகுதியில் பாண்டியன் தெரு, சிமெண்ட் சாலை பணியை துவக்கி வைத்தும் திராவிட மாடல் நாயகர் முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க தி தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. மாநில தலைவர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பிரிதிநிதி கே.சசிகுமார் ஏற்பாட்டில் இல்லம் தோரும் கழக அரசின் சாதனை துண்டு பிரசுரங்களை மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ்உதயன் தலைமையில் மீஞ்சூர் பேரூராட்சி தலைவர் திருமதி ருக்மணி மோகன்ராஜ், ப.அலெக்சாண்டர், தி மீ.வீ. கோதண்டம், நா.மோகன்ராஜ், பேரூர் துணை செயலாளர் வ. மோகன், மீஞ்சூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர் க.பாஸ்கர் ஆகியோர் முண்ணிலையில் வீடு வீடாக சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டு பிரசுரங்களை வழங்கினர்.




# சென்னை தெற்கில் கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் -இன்றைய நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

சென்னை, மார்ச் 7 -

சென்னை தெற்கு மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71-வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள் இன்று (7.3.2024) பின்வருமாறு நடைபெறுகிறது எனற மாவட்டச் செயலாளர் -அமைச்சர் மா.சுப்பிர மணியன் அறிவித்துள்ளார்.

2. கருத்தரங்கம் இடம்: வி.பி.ஜனராஜன், திருமணமண்டபம், சோழிங்கநல்லூர்,தலைப்பு : நாடுவாழ, நீடுவாழ்க, சொற்பொழிவாளர்கள்: கம்பம்செல்வேந்திரன், பேரா.சுப.வீரபாண்டியன், கோவி.செழியன், கவிஞர்ஆண்டாள்பிரியதர்ஷினி,ஏற்பாடு : எஸ்.அரவிந்த் ரமேஷ், சட்டமன்றஉறுப்பினர் - நெறியாளுகை : கவிஞர்இளையகம்பன்.

3. கே.பி.கோயில் தெரு, நிகழ்ச்சி : தெருமுனைக்கூட்டம் : சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சதலைமை : வீடியோஎழில், வ.துணைச் செயலாளர்.

4.169 அவட்டம், அப்பாவுநகர், சைதாப்பேட்டை, நிகழ்ச்சி : பொதுக்கூட்டம்,சிறப்புரை: கந்திலிகரிகாலன், தலைமை : ஆ.வரதன் வட்ட துணைச் செயலாளர்.

மேற்கண்ட அனைத்து நிகழ்க்கிளிலும் மாவட்டத்திற்குட்பட்ட முன்னணித் தலைவர்கள், நிர்வாகிகள், செயல் வீரர்கள் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டுள்ளார்



சென்னை வடகிழக்கு மாவட்டத்திற்கு புதிதாய் அறிவிக்கப்பட்ட மீனவர் அணியினரின் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10 மணி அளவில் சென்னை திருவொற்றியூரில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்தில் சென்னை வடகிழக்கு மீனவர் அணி மாவட்டத் தலைவர் ஆர்.நவகுமார் தலைமையில், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங்கு முன்னிலையில், மாவட்ட துணைத் தலைவர் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. புதியதாக அறிவிக்கப்பட்ட சென்னை வடகிழக்கு மாவட்ட மீனவரணி நிர்வாகிகள் அனைவரும் மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கரை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.


**தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள்**
**மற்றும்**
**தொழிலாளர்கள் நலவாரியம்**
**உறுப்பினர் பதிவு மற்றும் நலத்திட்ட**
**விண்ணப்பங்கள் www.tnctvwb.in**
**இணையதளம் துவங்கி வைத்தல்**



நாள் : 7.3.2024, நேரம் : காலை 10.30 மணி
இடம் : தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை,
கூட்ட அரங்கம், 2வது தளம், நாமக்கல் கவிஞர் மாளிகை,
தலைமைச் செயலகம்

இணையதளத்தை துவங்கி வைத்து சிறப்புரை

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்** அவர்கள்
மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல்
மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்

அன்புடன்
**தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள்**
**மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்**



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் கழகப் பொருளாளர் நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு எம்.பி அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பல்லாவரம் பகுதிக்கு உட்பட்ட 9 வது வார்டு 13, 16,17,27 ஆகிய வார்டுகளில் 6 இடங்களில் உயர் கோபுர மின்விளக்குகளை அமைத்துத் தந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட கழகத் துணைச் செயலாளருமான இகருணாநிதி. பல்லாவரம் மண்டல தலைவரும் பகுதி கழகச் செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை. பகுதி கழகச் செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட். மாமன்ற உறுப்பினர்கள் லதா சிவகுமார், ரேணுகா தேவி பரமசிவம், எஸ்.நெடுஞ்செழியன், மகேஸ்வரி கார்த்திகேயன், வட்டக் கழக செயலாளர். பகுதி கழக நிர்வாகிகள். நலவாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (06.03.2024) சென்னை, மண்ணடி, தம்புசெட்டி தெருவில், கந்த கோட்டம் முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த திருமதி சாமுண்டீஸ்வரி அம்மாள் அறக்கட்டளை சார்பில் புதிய மருத்துவ மையத்தினை திறந்து வைத்து, சிகிச்சை அளிப்பதை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை. உதவி ஆணையர் (பொறுப்பு) திருமதி.சி.நித்யா, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள், திருக்கோயில் செயல் அலுவலர் ஆ.குமரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி வந்தாலும் நோட்டாவை கூட வெல்ல முடியாது என்பதால்

# பிரதமர் மோடி விரக்தியில் ஆவேசமாகப் பேசுகிறார்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டன அறிக்கை!

*சென்னை, மார்ச் 7 -*

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி சுற்றி வந்தாலும் நோட்டாவை பா.ஜ.கவால் வெற்றி கொள்ள முடியாது என்பதால் பிரதமர் மோடி விரக்தியடைந்துள்ளார். அதன் வெளிப்பாடு தான் அவரது ஆவேச பேச்சுஎன விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு”

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி சுற்றி வந்தாலும், எத்தனை வியூகங்கள் வகுத்தாலும், எத்தனை தில்லாலங்கடி வேலைகளைக் கையாண்டாலும் தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியால் நோட்டாவை வெற்றி கொள்ள முடியாது என்பதை புரிந்து கொண்ட பிரதமர் மோடி, விரக்தியின் உச்சிக்கு சென்றுள்ளார். அதன் வெளிப்பாடு தான் சென்னையில் நடைபெற்ற கூட்டத்திலும் அதற்கு முன்பு பெருந்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் திராவிட முன்னேற்ற கழகத்தையும் தமிழ்நாட்டு அரசையும் நான்காம் தர நடைமுறையில் பிரதமர் மோடி விமர்சித்துள்ளார். இரண்டு கூட்டங்களிலும் அவர் வைத்த விமர்சனம், ஒன்றிய அரசின் திட்டங் களுக்கு திமுக அரசு ஒத்துழைக்கவில்லை. ஒன்றிய அரசின் திட்டங் களுக்கு திமுக அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டுகிறது என்பது தான் பிரதானமாக இருந்தது.



முதலமைச்சர் உட்பட பல்வேறு தலைவர்கள், எந்தெந்தத் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு தரவில்லை என்ற பட்டியலை தாருங்கள் என்று கேட்ட பின்பும் அதற்கு பதிலளிக்காமல் அதே பிரச்சனையை மீண்டும் நேற்று சென்னையில் எழுப்பி உள்ளார். பிரதமரால் அதற்கான விளக்கத்தை அளிக்க முடியாது. காரணம் ஒன்றிய அரசு தமிழ் நாட்டுக்காக எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை. அறிவித்தத் திட்டங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. அது எய்மஸ் மருத்துவக் கல்லூரியாக இருக்கலாம், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகளாக இருக்கலாம், நீட் தேர்வில் விலக்கு அளிப்பதாக இருக்கலாம், இப்படி எண்ணற்ற பிரச்சினைகளில் ஒன்றிய அரசு தான் மாநில அரசுக்கு நிதியை ஒதுக்கவில்லை. திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பைத் தரவில்லை.

அண்மையில் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கொடும் இயற்கை சீற்றங்களால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை, மக்களை மீட்டெடுக்க குறைந்தபட்சம் 37 ஆயிரம் கோடி தேவைப்படும். அதை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இன்று வரை சல்லி காசு கூட வழங்கவில்லை என்று நேற்று மயிலாடுதுறையில் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். இப்படிப்பட்ட ஆணித்தரமான கேள்விகளுக்கு பதில் அளிக்க வக்கற்ற பாரதிய ஜனதா கட்சியினர் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என போகிற போக்கில் புழுதியை வாரி தூற்றுகிற பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள முதலமைச்சர்களை மதிப்பீடு செய்த ஒரு நிறுவனம் முதல் இடத்தில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இருப்பதாக அறிவித்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழ்நாடு அரசின் முற்போக்கு திட்டங்கள் தான். தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் கல்வி உயர்விற்கும் தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகள், அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் இன்றைக்கு இந்தியா முழுவதும் பின்பற்றக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது.

குறிப்பாக பெண்களை சமநிலைப்படுத்தி உயர்த்துவதற்காக இலவச பேருந்து திட்டம், மாதந்தோறும் மகளிர் உரிமைத்தொகைகானத் திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உதவி தொகை, அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் ஊக்கத்தொகை, பள்ளிகளில் காலை உணவு திட்டம். இப்படிப்பட்ட அரிய திட்டங்களால் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்கள் பொருளாதார ரீதியாக அடுத்த நிலைக்கு செல்லவும் கல்வி பெற்றவர்களாக தமிழ்நாட்டு இளைஞர்கள் மாறிடவும் வழிவகை பிறக்கிறது. எனவே தான் இத்திட்டங்களை எல்லாம் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் இன்றைக்கு பின்பற்றக் கூடிய நிலையை அடைந்திருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு அரசின் மீதும், முதலமைச்சர் மீதும் பிரதமர் மோடி வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதால் தான் இப்போது போதைப்பொருள் குறித்து சென்னை கூட்டத்தில் விமர்சித்திருக்கிறார். இந்தியாவிலேயே அதிக அளவில் போதைப் பொருள் நடமாட்டம் உள்ள மாநிலமாக குஜராத் உள்ளதாகவும், குறிப்பாக அதானி துறைமுகம் தான் இதற்கான திறவுகோலாக இருப்பதாகவும் பல்வேறு கருத்துக்கள் நிலவுகிற நிலையில் தமிழ்நாட்டில் போதைப் பொருள் கடத்தல் அதிகம் நிலவுகிறது என்றும் அதனை தடுப்பேன் என்றும் பேசுவது நகைப்பிற்குரியதாகும். தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு மாதத்தில் இப்படிப்பட்ட போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 470க்கும் மேற்பட்டவர்களை அரசு கைது செய்துள்ளது. சுட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ள முதல்வரை, தமிழ்நாட்டு அரசை கொச்சைப்படுத்தி, களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக உயர்ந்த பதவியில் உள்ள ஒரு பிரதமர், ஆதாரமற்ற வகையில் நாக்கில் நரம்பில்லாமல், நான்காம் தர பேச்சாளரைப் போன்று மேடைகளில் பேசுவது அவருடைய பொறுப்பிற்கு அழகல்ல. இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்த ஆண்டு 7 திருக்கோயில்களில் மகாசிவராத்திரி பெருவிழா

# மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் நாளை மகாசிவராத்திரி பெருவிழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்!

*சென்னை, மார்ச் 7-*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மகாசிவராத்திரி பெருவிழா இந்தாண்டு 7 திருக்கோயில்கள் சார்பில் மார்ச்8 அன்று ஆன்மிக சொற்பொழிவுகள் இசை நிகழ்ச்சிகளுடன் வெகுவிமரிசையாக கொண்டாடப்படவுள்ளது. மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கொண்டாடப்படும் மகாசிவராத்திரி பெருவிழாவினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் விழாக்களை பக்தர்களின் பங்கேற்போடு சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்துதல் போன்ற பல்வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்ற அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத்துறை மானியக்கோரிக்கை அறிவிப்பின்படி, 2022 ஆம் ஆண்டு முதன்முதலில் மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழாவானது பக்தர்கள் பங்கேற்புடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2023 ஆண்டில் கூடுதலாக, திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர், பிரகதீசுவரர் திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், பேரூர், பட்டீசுவரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்கள் சேர்க்கப்பட்டு, 5 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி பெருவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், “மகாசிவராத்திரி விழா கடந்தாண்டு 5 சிவத்திருத்தலங்கள் சார்பாக பெருவிழாவாக ஆன்மிக கலை நிகழ்ச்சிகளுடன் பிரம்மாண்டமாக நடத்தப்பட்டதை போல், இவ்வாண்டு கூடுதலாக 2 சிவத்திருத்தலங்கள் சார்பாக மகாசிவராத்திரி பெருவிழா வெகுவிமரிசையாக நடத்தப்படும்“ என அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்தாண்டு கூடுதலாக மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களையும் சேர்த்து 7 திருக்கோயில்கள் சார்பில் வருகின்ற மார்ச் 8 அன்று மகாசிவராத்திரி பெருவிழா ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் மகாசிவராத்திரி பெருவிழாவை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மார்ச் 8 அன்று தொடங்கி வைக்கின்றார்.

இவ்விழாவில் ஆன்மிகப் பெரியோர்கள், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் இறையன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

# திருவண்ணாமலை மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால் படத்திறப்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து புகழஞ்சலி! கு.பிச்சாண்டி தலைமை!

*திருவண்ணாமலை, மார்ச் 7-*

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட திமுக அவைத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த த.வேணுகோபால் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலந்து கொண்டு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார்.

இன்று (07.03.2024 - வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை ஒன்றியம், காட்டாம்பூண்டி ஊராட்சியில் திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட தி.மு.க. அவைத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள்உறுப்பினருமான மறைந்த த.வேணுகோபால் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்றஉறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி மற்றும் தெற்கு மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணிசெயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., பேரவை செயலாளர் செயலாளர் க.சௌந்தர ராசன், செய்தித் தொடர்பு இணை செயலாளர் சிவ.ஜெயராஜ், மாவட்டஊராட்சிக் குழுத் தலைவர் பார்வதி சீனுவாசன், துணைத் தலைவர் பாரதி ராமஜெயம், நகர செயலாளர் ப.கார்த்தி வேல் மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிகழ்வில் கலந்து கொண்டு பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார்.

நிகழ்வில் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, மாநில விவசாய தொழிலாளர் அணிதுணை செயலாளர் வ.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே. வி.ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன், மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள்க.லோகநாதன், ஜெயராணிரவி,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ. ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச். சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி (எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ. டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து. வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்ட எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், கோ.எதிரொலி மணியன், மா.ஏழுமலை, என்.கே.ஏ. பாபு, இ.எஸ்.டி. கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி. அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், இ. பிச்சை கண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், க.சீனு வாசன், மாலினி வினோத்தி வாகரன், இராணிவேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன்,

ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ். சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர். வி.சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த. மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் கே.வி.சேகரன், அ. சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே. டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ். மோகன், து.மாமது, ஏ. ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி. தயாநிதி, ஏ.எம்.காசி, எம். கிருஷ்ணமூர்த்தி, வெள்ளை கணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள்சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே. கோவர்தனன், வேணி ஏழுமலை

நகரமன்றத் தலைவர்கள் நிர்மலா வேல்மாறன், ஆ. மோகனவேல், எச்.ஜலால், ஒன்றியக்குழுத் தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளாகலைரசன், பூ.அய்யாகண்ணு, தயந்திஏழுமலை, சாந்தி பெருமாள், ராணிஅர்ச்சுனன், கனிமொழிசுந்தர், பச்சையம்மாள் சீனுவாசன், திலகவதி ராஜ்குமார், இந்திரா இளங்கோவன், காமாட்சிஇளங்கோவன், என்.பி.பாபு, த.ராஜீ, பேரூராட்சித் தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோகுமார்,

வடக்கு மாவட்ட ராணி சண்முகம், கே.டி.ஆர். பழனி, சுதாமுருகன், மகாலட்சுமி கோவர்த்தனன், ராதா ஜெகவீரப் பாண்டியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.



மீஞ்சூர் பேரூரில் “இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்” திண்ணைப் பிரச்சாரம் மற்றும் துண்டுப் பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சியில் பேரூர் செயலாளர் க.சுதமிழ்உதயன் தலைமையில் மின் கழக தொ.மு.ச. மாநிலத் தலைவர் – மாவட்டப் பிரதிநிதி கே.சசிகுமார் முன்னிலையில் பேரூராட்சி மன்றத் தலைவர் ருக்மணி மோகன்ராஜ் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# வடலூரில் “எல்லோருக்கும் எல்லாம்” நிதிநிலை அறிக்கை மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கவிஞர் சல்மா, ச.அ.பெருநற்கிள்ளி சிறப்புரையாற்றினர்

*கடலூர், மார்ச் 7-*

கடலூர் கிழக்கு மாவட்டம், வடலூர் நகர கழகம் சார்பில், “எல்லோருக்கும் எல்லாம்” திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம், வடலூர் பேருந்து நிலையம் அருகில், 04.03. 2024, திங்கள் கிழமை, மாலை 6 மணியளவில், நகர செயலாளர் த.தமிழ் செல்வன் தலைமையில் நடைப்பெற்றது. நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

ஆர்.சுப்புராயலு, பி.விஜயராகவன். எம்.கோவிந்தராஜ், எஸ்.ஷாகுல் ஹமீது. எஸ்.பழனி, ஆர்.பத்மாவதி ராஜபூபதி, எம்.ஆர்.சந்துரு, எஸ்.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செலயலாருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தலைமை கழக பேச்சாளர் கவிஞர் சல்மா, தலைமை கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் வி. சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, கி.தண்டபாணி, கே.பி.ஆர்.பாலமுருகன், எஸ்.பி.கண்ணன், கே.வி. பி.சங்கர், கோகிலா குமார், ஆர்.ராமர், ஆர்.இராமமூர்த்தி, ஜி. சுப்பிரமணியன், எஸ்.ஆர்.கோபு, தாணூர் சிவக்கொழுந்து, ஆர்.சிங்காரவேல், எஸ்.கஜேந்திரன், வி.செல்வபாரதி, ஆர்.சேகர், விடுதலைசு.சேகர், வெ.கௌதமன், டி.பிரகாஷ், ஆர். கோபாலகிருஷ்ணன், ஏ.விஜயசந்திரன், எம்.ஆர்.ஜோதி, கோ.ஆறுமுகம், டி. முத்துகுமாரன், ஆர்.கௌரி, பி. குமாரி. உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட பிரதிநிதி டி.பழனி நன்றியுரையாற்றினார்.



கழகத் தலைவர் தங்க தளபதி திராவிட மாடல் நாயகன் முதல்வர் அவர்களின் 71 வது பிறந்தநாளை முன்னிட்டு வேளச்சேரி கிழக்கு பகுதி 179 வது வார்டில் மாவட்ட கழக பிரதிநிதி தி.பாலாஜி ஏற்பாட்டில் வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் மற்றும் 179 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி கயல்விழி ஜெயகுமார் முன்னிலையில் திருவான்மியூர் பேருந்து நிலையம் அருகில் 1000 பேருக்கு அறுசுவை விருந்து வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆதி திராவிடர் நலக் குழு அமைப்பாளர் அடையார் சி.சுரேஷ், மாவட்ட பிரதிநிதி கலைவாணன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.கே.சந்திரேஷ் மற்றும் வட்ட கழக அவைத் தலைவர் காலப்பன் சேகர், துணை செயலாளர் து. சந்தான கிருஷ்ணன், திலகவதி, வானதி, பகுதி பிரதிநிதி டி.பாலு, வழக்கறிஞர் கண்ணன், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆதித்யன், அருண் குமார், குமரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்முதலம் பேடு ஊராட்சி கவரப்பேட்டையில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் மானியத்திலிருந்து (SCPAR) ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஊராட்சி நிதியும் இணைந்து அமைக்கப்பட்ட எரிவாயு தகன மேடையினை அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். மாவட்ட ஊராட்சி மற்றும் திட்ட குழு தலைவர் கே.வி.ஜி. உமா மகேஸ்வரி வேணு, பொதுக்குழு உறுப்பினர்கள் பா.செ. குணசேகர், அவைத்தலைவர் பகலவன் செயற்குழு உறுப்பினர் ஜே.மூர்த்தி, வெங்கடாஜலபதி, நகர மன்ற தலைவர் பரிமளம், பொன்னேரி நகர செயலாளர் ரவிக்குமார், சுற்றுச்சூழல் அமைப்பாளர் பாஸ்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாரதாம்பாள், முத்துசாமி, சித்ரா முனுசாமி, ராமஜெயம், அருண் ராம், ஒன்றிய கவுன்சிலர்கள் ஜெயந்தி, கெஜா, பிரசாந்த், தகவல் தொழில்நுட்ப இணைச் செயலாளர், சி.எச். சேகர், எம்.எல்.ரவி ஆகியோர் உள்ளனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கிட்டாம்பாளையத்தில் உள்ள அறிஞர் அண்ணா தொழிற்பேட்டையில் நேற்று 6.3.2024 குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக் தொழில்துறை ஆணையர் நிர்மல்ராஜ் மேலாண் இயக்குநர் திருமதி.மதுமதி தொழில் துறை கூடுதல் ஆணையர் செல்வி. கிரேஸ் லால்கிரின்டி பச்சாவு ஆகியோர் உள்ளனர்.

# ரூ.256.50 கோடி மதிப்பீட்டில் மருத்துவக் கட்டிடங்களுக்கு அடிக்கல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று சிறப்புரை!

சென்னை, மார்ச் 7-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (06.03.2024) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.256.50 கோடி மதிப்பீட்டில் தீவிர சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடம், செவிலியர் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்டிடம், செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடம், அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் கூடுதல் தளங்கள் கட்டிடம் மற்றும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையின் புதிய அடுக்கு மாடி உயர்தர சிகிச்சை கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் புனரமைக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் எலும்பு முறிவு அறுவை அரங்கங்கள் திறந்து வைத்து, உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் அவசர ஊர்தி வாகனங்களை வழங்கி விழா பேசினார்.

அவர் தெரிவித்ததாவது :-

சென்னை ஸ்டான்லி மருத்துவமனை வரலாற்றில் இன்று மிக முக்கியமான நாள். 1740 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மருத்துவமனை என்பது வடசென்னை பகுதி மக்களின் மருத்துவ சேவையை மிகச் சிறப்பான வகையில் நிறைவேற்றி வருகிறது. இம்மருத்துவமனையில் நேற்று மட்டும் 160க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளது. இம்மருத்துவமனை வளாகத்தில் 65க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை அரங்குகள் உள்ளன. அதிகமான அறுவை அரங்குகள் மற்றும் அதிகமாக அறுவை சிகிச்சைகள் நடைபெறும் மருத்துவமனையாக இம் மருத்துவமனை உள்ளது. வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட அவசர சிகிச்சை மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைக்கான 4 அரங்கங்கள் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் எலும்பு முறிவு (Ortho) தொடர்பான சிகிச்சைகள் மிகச் சிறப்பாக செய்யப்பட்டு தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான மருத்துவமனை என்னும் பெயரினை பெற்றுள்ளது. மேலும் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சையும் இம்மருத்துவமனையில் மிகச் சிறப்பான வகையில் செய்யப்பட்டு வருகிறது. கை ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சையும் மிகச் சிறப்பான அளவில் செய்யப்படுவதில் இம்மருத்துவமனை சிறந்து விளங்குகிறது. மேலும் இம்மருத்துவமனையில் குடல் அழற்சி ஏற்படுவதற்கு பழைய சாதம் மிக அற்புதமான தீர்வாக உள்ளது என்கின்ற தகவலையும் இம்மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் கண்டறிந்து தெளிவுபடுத்தியுள்ளனர். நானும் வாரத்திற்கு இரண்டு முறை பழைய சாதத்தினை இம்மருத்துவமனையின் நினைவில் கொண்டு உட்கொண்டு வருகிறேன்.

மேலும் வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.1.30 கோடி மற்றும் CSR நிதி ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் இம்மருத்துவமனைக்கு உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஆம்புலன்ஸ் வசதியும் இம்மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் CSR நிதி பங்களிப்புடன் முடிவுற்ற பணிகள் தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் வெள்ளி விழா கட்டடத்தினை புதுப்பித்து தருவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. CSR நிதியின் கீழ் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு 2 மின்தூக்கி வசதிகள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவக் கட்டிடங்களுக்கு அடிக்கல்:

ரூ.13 கோடி மதிப்பீட்டில் சென்னையில் கட்டப்படவுள்ள செவிலியர் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான தங்கும் விடுதி கட்டிடம் 12 மாதங்களுக்குள்ளாகவும், இதே மருத்துவமனையில் கட்டப்படும் 2885 சதுர அடி பரப்பளவில் ரூ.112 கோடி மதிப்பீட்டில் தரைத்தளத்துடன் கூடிய அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் 18 மாதங்களுக்குள்ளாகவும் கட்டி முடிக்கப்படும். இந்த அரசினைப் பொறுத்த வரை பணிநியமனங்கள் இருந்தாலும், பணிமாறுதல்கள் இருந்தாலும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று இம் மருத்துவமனைக்கு நவீன சலவையகம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமையவிருக்கிறது. அதுவும் 12 மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். ஒட்டுமொத்தமாக 18 மாதங்களுக்குள்ளாக ரூ.159 கோடி மதிப்பீட்டில் பிரம்மாண்ட மருத்துவக்கட்டடங்கள் ஸ்டான்லி மருத்துவமனையில் அமையவிருக்கிறது. அதேபோல் சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில் 16818 சதுர அடி பரப்பளவில் அறுவை அரங்கம், இரத்த சேமிப்பு கிடங்க, ரேடியாலஜி அறை, மயக்க மருந்தியல் அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கூடிய கட்டிடம் ரூ.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கிறது. மேலும் சென்னை அரசு பல்மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1,34,764 சதுர அடி பரப்பளவில் ஏற்கெனவே உள்ள கட்டிடங்களுக்கு மேல் புதிதாக 4 தளங்கள் அதில் செயற்கை பல் கட்டுந் துறை, சுறுநோய் சிகிச்சைத்துறை, பல்சீரமைப்புத்துறை, குழந்தைகள் பல்மருத்துவத்துறை, வாய்நோய் குறியியல் துறை, சமுதாய பல் பாதுகாப்புத்துறை, ஆய்வகம், தேர்வுக்கூடம், கருத்தரங்கு கூடம் போன்ற கட்டிடங்கள் ரூ. 64.09 கோடி மதிப்பீட்டில் அமையவிருக்கிறது. ஒட்டு மொத்தமாக 5 கட்டிடங்களுக்காக ரூ.256 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# மிரட்டல்களுக்கெல்லாம் தி.மு.க. அஞ்சாது!

## பிரதமருக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலடி!

சென்னை, மார்ச் 5 -

தி.மு.க.வை மிரட்டி பார்க்கும்போதுதான் அது உற்சாகமாக பணியாற்றத் தொடங்குகிறது என்று அமைச்சர்பி.கே. சேகர்பாபு கூறினார்.



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேயத் திருவிழா கொண்டிதோப்பில் 271 கட்டிடத் தொழிலாளர் களுக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாவட்ட பிரதிநிதி ஜி.மாசிலாமணி தலைமையில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் பி.டி. ஆர் பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:

தமிழ்நாட்டில் பெருவெள்ளத்தின் போது துன்பப்படுகின்ற மக்களின் கரத்தை காப்பாற்றுகின்றகரமாக நம்முடைய முதலமைச்சர்கரம் இருந்தது. ஒன்றிய அரசிடம் பலமுறை கூறியும் இதுவரை ஒரு ரூபாயைக் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்காக எந்த ஒரு நிவாரணமும் ஒன்றிய அரசு வழங்கவில்லை.

தமிழ்நாட்டுக்கு இந்த ஆண்டு மட்டும் பிரதமர் மோடி 7 முறை வந்து சென்றிருக்கிறார், எண்ணெயில் வடை சுட்டு பார்த்திருப்போம் ஆனால் வெறும் தண்ணீரில் வடை சுடுகின்ற பிரதமர் என்பதை இன்று நாட்டு மக்கள் நன்றாக புரிந்து வைத்துள்ளனர்.

7 முறை தமிழ்நாட்டிற்கு வருவதற்கு வழிதெரிந்த பிரதமருக்கு மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களை ஒரு முறை கூட சென்று சந்திக்கவில்லை.

பிரதமர் மோடி தமிழ் நாட்டில் மட்டுமல்ல தெலுங்கானாவில் சென்றாலும் கூட திமுகவைப் பற்றிதான் பேசுகிறார். வட மாநிலங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டாலும் தி.மு.க.வை பற்றி தான் பேசுகிறார், தமிழகத்திற்கு வந்தாலும் அவர் குறி வைத்து தாக்குவது தி.மு.க.வை மட்டுமே.

தி.மு.க.வின் நிலைப்பாடு என்னவென்றால் உறவுக்கு கைகொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம். தமிழகத்தில் இந்த முறைபாண்டிச்சேரி உட்பட 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் கடந்த 2019 ஆண்டை வாங்கியதை விட அதிக வாக்குகளை பெறுவோம் ஒரு இடம் கூட பாரதிய ஜனதாவிற்கு தமிழ்நாட்டில் இடம் இல்லை.

மிரட்டல் அச்சுறுத்தல்கள் எப்போதெல்லாம் வருகிறதோ அப்போதெல்லாம் தி.மு.க.உற்சாகமடைகிறது மேலும் விரைவாக பணிகளை ஆற்ற துவங்குகிறது.

பிரதமரே தொடர்ந்து தமிழ்நாட்டிற்குவாருங்கள். திமுக மீது பல்வேறு அவதூறுகளை அள்ளி வீசுங்கள். தொடர்ந்து பயமுறுத்துங்கள், மிரட்டி பாருங்கள், எப்படி அடிக்கடிக்க பந்து எழுமோ, எப்படி காய்ச்ச காய்ச்ச தங்கம் சொக்கத்தங்கம் ஆகுமோ, எப்படி தீட்டத்தீட்ட வைரம் ஒளி வீசுமோ அது போல் நீங்கள் மிரட்ட மிரட்ட தி.மு.க. இன்னும் வேகமாக களத்தில்நிற்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசினார்.

### டி.ஆர். பாலு எம்.பி.- அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! நாகவள்ளி பிரபாகரன் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் 271 மரக்கன்றுகள் நடும்விழா!

## சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் அமைச்சர் மதிவேந்தன் மரக்கன்றுகள் நடும்விழாவை துவக்கி வைக்கிறார்!

சென்னை,மார்ச்.7-

மார்ச் 1 மக்கள் முதல்வரின் மனித நேயத் திருவிழா சூரிய சுடர் 54 வது நிகழ்ச்சியாக மனதிற்குள் அன்பை நடுபவர்! மாநிலத்தின் நிழலாய் விரிபவர்!! 271 மரக்கன்றுகள் நடும் துவக்க விழா நாளை 08032023 வெள்ளிக்கிழமை காலை 8மணியளவில் அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் பார்க் ரோட்டில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளரும்88வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) உறுப்பினருமான ஜி.வி. நாகவள்ளி பிரபாகரன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

கழக பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழுத்தலைவருமான திரு டி. ஆர். பாலு எம்.பி, மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான திரு பி கே சேகர்பாபு அவர்களும், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே மூர்த்தி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி, டாக்டர் ஜி சாந்தகுமாரி எம்.சி, ஜெ.பாலமுருகன், வி.ரமேஷ் (எ )நீலகண்டன் எம். சி, கு. கிருஷ்ணமூர்த்தி, து. ஆயிரம், தா. பிரகாஷ் குமார், எம்.இ. சேகர் எம்.சி, நா. நெப்போலியன், இரா. டீக்கா, மு. நடராஜன், து. செல்வராஜ், ஆர். கதிரவன், கோ. சங்கர், ஆர். ஜெயராமன், எஸ். மதியழகன், ஆசை ஆரோக்கியம், எஸ். ஜெகநாதன், எஸ். மோகன்ராஜ், எஸ். பாண்டியன், எம். மணிகண்டன், ஆ. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்கள் விஜய் ராதாகிருஷ்ணன், ஜே ஜாவித் கான், மா, செந்தில், குமார் மற்றும் ஏ.வ. சாந்தகுமார், டி.எஸ். கே. சுரேஷ், ஜி. மகேஷ்குமார் பி.கே. பிரபு, ஜே. வெற்றி செல்வன் ஏ. மீனாட்சி, எம். தமிழ்செல்வி, ஆர். புனிதா, எம்.என். நாகராஜ், எம்.எஸ். செந்தில்நாதன், டி.செந்தில்குமார், யூ. நவநீதம், சோ. தேவன், கண். ராமலிங்கம், ரா. துரை, எ.பி. ரவி, மூ. மனோகரன், ஏ.ஆர். சுரேஷ், வினோத்குமார் ஜெயமுருகன் வ. கணேசன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வனத் துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் அவர்கள் 271 மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைத்து சிறப்பிக்கிறார். இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், பி.டி.சி. செல்வராஜ், பா ரங்கநாதன் கே. சந்துரு, கே.எஸ். ரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, மணி முடி, வே. உமா காந்த், கே. எஸ்.எம்.நாதன், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ஆர். வரதன், மாவட்ட கழக நிர்வாகிகள் தேவ ஜவகர், ஜி. மகாதேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, மண்டல குழு தலைவர்கள் கூ.பீ. ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ் குமார் எம்.சி, ஸ்ரீ ராமு எம்.சி, வெ.வாசு, ஐசிளப் முரளிதரன், ஏ. நாகராஜன் எம்.சி, சொ. வேலு எம். சி, எம். சாமிக்கண்ணு, எஸ். ராஜசேகர், எஸ். முரளி, கோ. மணி, எஸ். பன்னீர்செல்வம், டி.வி. செம்மொழி, எம் சி, பி.ஜே துளசிங்கம், பி. உதய சங்கர், எம். இப்ராஹிம் கனி, ஆ. நிர்மலா தேவி, இரா. கலைச்செல்வி மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தி. லோகேஷ், பா. ஜெகதீஷ், கா. வினோத், ஜி.ஜெ. பிரபு, எஸ். தனசேகர், ஆர். டி. சங்கர் நானா, வானவில் விஜய் நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், பி.விஜயகுமார், சுதா தீனதயாளன் எம்.சி, எம். ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, துரை கண்ணன், எம். பெரோஸ்கான், எம்.விநாயகம், கு. கிருஷ்ணமூர்த்தி, வா.அசோக் குமார், கா. பா.பிரதீப் குமார், எல். சம்பத் குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் எஸ். உமா எம்.சி, க. பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி, நா. உஷா எம்.சி.மற்றும் பிற அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் BLA 2, BLC முகவர்கள் உட்பட கழக முன்னணியினர், தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிகின்றனர். நன்றியுரை வட்ட செயலாளர் சி. சீனிவாசன்.

### ஆவடி மாநகராட்சி முழுவதும்

# 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 499 இடங்களில் சாலைப் பணிகள்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் மார்ச் 07;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சியில் 499 இடங்களில் ரூ. 50 கோடியில் சாலைப் பணிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்எல்ஏ அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். ஆவடி மாநகராட்சியில் 4 மண் டலங்களில் உள்ள 48 வார்டுக ளில் கடந்த ஆட்சி காலங்களில் பெய்த மழையால் சாலைகள் பல இடங்களில் சேதம் அடைந்துள்ளன. இதனால் வாகன ஓட்டிகள், பாதசாரிகள் தினமும் சிரமப்பட்டு சென்று வந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, திமுக ஆட்சி வந்ததுடன் மாநகராட்சி பகுதியில் உள்ள சேதமடைந்த சாலைகளை சீரமைக்கக் கோரி, ஆவடி சா.மு. நாசருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து அவர் தமிழ்நாடு அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று சாலைகளை சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, 15ஆவது மத்திய நிதிக் குழு மானியம் 2022 23 கீழ் படி 13 சாலை பணிகளுக்கு ரூ. 2.13 கோடியும், தமிழ்நாடு நகர்ப் புற சாலைகள் நிதி 202425 கீழ் 212 சாலைகளுக்கு ரூ.21.24 கோடியும்,

மாநில நிதி குழு 202425 கீழ் 256 சாலைகளுக்கு ரூ. 24.71 கோடியும், காற்றின் தரத்தை மேம்படுத்தும் நிதியிலிருந்து 18 சாலைகளுக்கு ரூ. 1.71 கோடியும் என 499 சாலை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த நிலையில், 4 மண்டலங்களிலும் மேற்கண்ட திட்டத்தின்கீழ், தார், சிமெண்ட் சாலைகள் அமைக் கும் பணியை முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ஆவடி சாமு. நாசர் எம்எல்ஏ அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில், மேயர் கு.உதயகுமார், துணை மேயர் எஸ்.சூரியகு மார், ஆணையர் ஷேக் அப்துல் ரகுமான், மண்டலக் குழுத் தலைவர்கள் ஜி. ராஜேந்திரன், அமுதா சேகர், என்.ஜோதிலட்சுமி, வி.அம்மு, மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதிச் செயலாளர்கள் பொன்.விஜயன், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொறியாளர் பி.வி.ர பி. விச்சந்திரன், உதவிப் பொறியா ளர் அ. பு.குமார், கவுன்சிலர்கள் சுகன்யா சதீஷ், செல்வி ராஜேந்திரன், வட்ட செயலாளர்கள் கு.சேகர், ரமேஷ் பாபு, நாகராஜ், இளங்கோ, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள் .



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, உள்ளாட்சித் துறை அமைச்சர் .கே.என்.நேரு உத்தரவின்படி, வடசென்னை வாழ் பொதுமக்களின் நெடுங்கால கோரிக்கையினை ஏற்று, இராயபுரம் சட்டமன்ற தொகுதி, 53 வது வார்டு, மூலக்கொத்தளம் சுடுகாட்டில் புதிதாக 1 கோடியே, 4 இலட்சம் மதிப்பீட்டில், புகையில்லா எரியூட்டு தகன மேடையினை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர் கௌரீஸ்வரன், மாமன்ற உறுப்பினர் வேளாங்கண்ணி, கழக நிர்வாகிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

### பா.ஜ.க.,வுக்கு ஆதரவாக செயல்படுவதற்கு கடும் கண்டனம்

# எஸ்.பி.ஐ. வங்கியைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு முழுவதும் எஸ்.பி.ஐ., கிளைகளை முற்றுகையிட்டு முழக்கம்!

சென்னை, மார்ச் 7-

தேர்தல் பத்திரங்கள் விவகாரத்தில் பா.ஜ.க., வின் ஊழலுக்கு துணைப் போகும் எஸ்.பி.ஐ., வங்கியைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள அந்த வங்கியின் கிளைகளை முற்றுகை யிட்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் பத்திரம் விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு ஆதரவாக செயல்படுவதாக பாரத ஸ்டேட் வங்கிக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன. இந்நிலையில், இவ் வங்கிக்கு எதிராக அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை அறிவித்து நடத்தி வருகின்றன. அந்தவகையில், எஸ். பி.ஐ., வங்கியைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ். பி.ஐ., மண்டல அலுவலகம் முன்பு அக்கட்சியினர் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராம கிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், அக்கட்சியினர் திரளானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகவும், பாரத ஸ்டேட் வங்கியைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.



கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில், ரூபாய் 2 கோடி 40 இலட்சம் மதிப்பீட்டில், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு 119, சி.ஐ.டி. காலனி பகுதியில் புதிய சாலையோர கழிவுநீர் உந்து அமைக்கப்படுகிறது. அதற்கான பணிகளை, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு நேற்று தொடங்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ஆர்.என்.துரை, வட்ட செயலாளர் லைனர் பிரபு, க.வே.மோகன், மாமன்ற உறுப்பினர் கமலா செழியன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழா 141 வது வட்டத்தில் கழகத்தின் முன்னோடி கே. பாபு ஏற்பாட்டில் இனிப்புகள் பொதுமக்களுக்கு 141 வது வட்டத்தின் மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் (தென்மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்) வழங்கினார். உடன் ஜே. ஜானகிராமன் (பொதுக்குழு உறுப்பினர்) பி. வெங்கடேசன், மகேஷ் மற்றும் கழகத்தின் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள

# கலைஞர் உலகம் அருங்காட்சியகம்!

## பொதுமக்கள் ஆர்வமுடன் நேற்று பார்வையிட்டனர்!



சென்னை, மார்ச் 7-

சென்னை மெரீனாவில் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அமைக்கப்பட்டுள்ள நினை விடத்தில், நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் உலகம் அருங்காட்சியகம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தை மார்ச் 6 முதல் பொதுமக்கள் பார்வையிட தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இந்த நிலையில் இணையம் மூலம் முன்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்ற பொதுமக்கள் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஆர்வமுடன் ரசித்தனர். உள்ளே சென்று திரும்பி வெளியே வர ஒன்றரை மணி நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

7D தொழில்நுட்பத்தில் சென்னை - மன்னை விரைவு வண்டி பயணம், கலைஞர் புகைப் படங்கள், கலை அறிஞர் கலைஞர் என்ற தலைப்பில் குறும்படம் என அருங்காட்சியகம் முழுவதும் நவீன தொழில்நுட்பங்களால் வடிவமைக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை காலை 9 மணி முதல் இரவு 8 மணிக்குள் பார்வையிட அனுமதி வழங்கப்படும் என்றும், பொது மக்கள் தங்களுக்கு வசதியான காட்சி நேரத்தைத் தேர்வு செய்து முன்கூட்டியே அனுமதிச் சீட்டினை கட்டணமில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என தமிழ் நாடு அரசு தெரிவித்துள்ளது.

ஒருவர் ஒரு அலைபேசி எண் மூலம் அதிகபட்சமாக 5 அனுமதிச் சீட்டுகள் வரை பெற்றுக் கொள்ள இயலும் என்றும் தமிழ் நாடு அரசு கூறியுள்ளது.

முதல்வர் தொடங்கி வைத்த ‘நீங்கள் நலமா’ திட்டம்–

# இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை!

## ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 7-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தின் மூலம் இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை என தினத்தந்தி நாளிதழ் தலையங்கத்தில் 6.3.2024 அன்று பாராட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

“நீங்கள் நலமா?” என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார்.


தலையங்கம்
தினத்தந்தி
6.3.2024
நீங்கள் நலமா?

தமிழ்நாடு அரசு பல திட்டங்களை மக்களுக்காக தீட்டி அறிவித்து வருகிறது. ஆனால், இந்த திட்டத்தின் பயன்களெல்லாம் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கும் போய் சேர்வதில்தான் அதன் வெற்றி இருக்கிறது. யாருக்காக இந்த திட்டங்கள் தீட்டப்படுகிறதோ, அவர்களுக்கு சிந்தாமல் சிதறாமல் போய் சேர்ந்தால்தான், அந்த திட்டம் போடப்பட்டதின் நோக்கம் நிறைவேறுவதாக இருக்கும்.

மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி, இந்த பொருள் குறித்து 1985ல் பேசியது இன்றளவும் வழிகாட்டியாக இருக்கிறது. “சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலனுக்காக அரசு ஒரு ரூபாய் செலவழித்தால், அது யாருக்கு போய் சேர வேண்டுமோ? அவர்களுக்கு 15 காசுதான் பலனாக கிடைக்கிறது” என்று பிரதமரே கூறியது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த கருத்து சுப்ரீம் கோர்ட்டிலும் பல ஆண்டுகளுக்கு பிறகு மேற்கோளாக ஒரு வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது நீதிபதி, “இந்த கருத்தை ராஜீவ்காந்தி கூறி 32 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நிலைமை மாறவில்லை என்பதுபோல தெரிகிறது” என்றார்.

அப்போது மட்டுமல்ல, இப்போதும் இந்தநிலை ஆங்காங்கு நடப்பது கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆதரவற்ற முதியோருக்கு தமிழ்நாடுஅரசு உதவித் தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கிவருகிறது. சில புல்லுருவிகள் இந்த தொகையையும் கையாடல் செய்ததாக சமீபத்தில் செய்தி வெளியாகியுள்ளது அதிர்ச்சியை அளிக்கிறது. முதியோர் வங்கிக் கணக்குக்கு போக வேண்டிய இந்த ஆயிரம் ரூபாயை வேறு ஒரு தனி நபர் கணக்குக்கு பரிமாற்றம் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுபோல, தமிழ்நாடுஅரசு பல நலத்திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றி வருகிறது. ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை அனுப்பப்படுகிறது. புதுமைப்பெண் திட்டத்தில் 4 லட்சத்து 81ஆயிரத்து 75 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 போய் சேர்கிறது. இதுபோல, பல உதவித்தொகைகள் அனுப்பப் படுகிறது. பல நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசின் பல திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது மக்களுடன் நேரடி தொடர்புகொண்டு நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளார்.

‘மக்களை தேடி மருத்துவம்’, ‘இல்லம் தேடி கல்வி’, ‘உங்கள் ஊரில் கலெக்டர்’ என்பது போல, மக்களுக்கான திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கு போய் சேர்கிறதா? என்பதை உறுதி செய்யும் வகையில், “நீங்கள் நலமா?” என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைக்கிறார். நீங்கள் நலமா? திட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட அனைத்து அமைச்சர்கள், தலைமை செயலாளர், அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், மாவட்ட கலெக்டர்கள் என அனைத்து அதிகாரிகளும் பொதுமக்களோடு, அவர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு “நீங்கள் நலமா?” என்று கேட்டு, அரசின் நலத்திட்டங்கள், அரசால் நிறைவேற்றப்படும் சேவைகள் பற்றியும், அது வந்து சேர்கிறதா? என்பது உள்பட கருத்துகளை கேட்கப்போகிறார்கள்.

இது ஒரு நல்ல திட்டம், வரவேற்கத் தகுந்த திட்டம், பாராட்டத் தக்கதிட்டம். இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை. முதல்அமைச்சரே பொதுமக்களிடம் நீங்கள் நலமா? திட்டத்தின் மூலம் நேரடியாக தொடர்பு கொள்வது, அரசு அதிகாரிகளையும் தொடர்புகொள்ள வைக்கும். எந்த திட்டத்திலும் முறைகேடு நடக்காமல், அனைத்து ஓட்டைகளையும் அடைக்க வைக்கவும், அனைத்து பலன்களும் மக்களுக்கு நேரடியாக போய் சேரவும் இது உதவியாக இருக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

பெரம்பூர் தெற்குப் பகுதியில்

# சாதனை விளக்கக் கூட்டங்கள்!

## பகுதிச் செயலாளர் ஜெயராமன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 7 -

சென்னை வடக்கு மாவட்ட பெரம்பூர் தெற்கு பகுதி திமுக சார்பில் கழக தலைவர் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் / தெரு முனை கூட்டம்

பேச்சாளர் நாள் & தொகுதி வருமாறு:

1. தமிழ் க. அமுதரசன் கழக மாணவர் அணி துணைச்செயலாளர் - 08.03.2024 ஜி.மாரிமுத்து 45வது வட்டசெயலாளர்

2. டான்அசோக்கழக பேச்சாளர் - 09.03.2024 ஆர்.எஸ்.மனோகரன் 44அ வட்டசெயலாளர்

3. ப. தாயகம் கவி எம்.எல்.ஏ. கழக துணை அமைப்பு செயலாளர் - 10.03.2024 கே.தினகரன் 45அ வட்டசெயலாளர்

4. பொள்ளாட்சி சித்திக் கழக செய்தி தொடர்பு துணைச்செயலாளர் - 11.03.2024 ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி 36வது வட்டச் செயலாளர்

மேற்கண்ட கூட்டங்களில்மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதிவீராசாமி, தேர்தல் பார்வை யாளர் வழக்கறிஞர் ஏ. சரவணன், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகி கள், பொதுகுழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பங்கேற்று சிறப்பிக்குமாறு பகுதிச் செயலாளர் க. ஜெயராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# துபாயில் முதல்வரின் 71வது பிறந்த நாள் விழா!

## அமீரக தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ்.மீரான் ஏற்பாடு!

துபாய், மார்ச் 7-

தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம் துபாய் “லேண்ட்மார்க் ஹோட்டல் பனியாஸ் ஸ்கொயர்” வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

அயலக தமிழர் வாரிய உறுப்பினரும்,அமீரக திமுக பொறுப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை ஏஜிஎம் பைரோஸ்கான் தொகுத்து வழங்கினார்.

கழக மூத்த முன்னோடி , அமீரக எழுத்தாளர் குழுமத்தின் தலைவர் ஆசீஃப் மீரான் தலைமை வகித்த இந்த கொண்டாட்டத்தில் அமீரக காயிதே மில்லத் பேரவையின் ஹமீது ரஹ்மான்,கவிஞர் சசிக்குமார், திராவிட இயக்க சிந்தனையாளர் பிலால் அலியார்,தமிழ்நாடு அரசின் பூங்குன்றனார் விருது பெற்ற எழுத்தாளர் ஜெஸிலா பானு,திரிகூடபுரம் முகமது முஸ்தபா. இர்ஷாத், பருத்தி இக்பால், இஞ்சினியர் பாலா,இளமுருகன், தாரிக், மணிவேல்,பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் அஹமது கபீர், வி கே புரம் பாலா,உதயாநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற தலைவர் பாலா, பாருக், கொரடாசேரி ஜெகபர் அலி,அன்வர், தென்காசி மாவட்ட அயலக அண் இஸ்மாயில், பாவை பொறியாளர் பஹீம், காரைக்கால் மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளர் செந்தில் பிரபு, மச்சேந்திரன், தமிழ் எப் எம் மகேந்திரன், கடையனல்லூர் உதுமான , அமீன், வல்லரசு உள்ளிட்ட ஏராளாமான் அமீரக திமுகவினர் கலந்து கொண்டனர். பின்னர் கேக் வெட்டி தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

நிறைவாக பிளாக் துளிப் செந்தில் நன்றி கூறினார்



தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாள் விழா 1-03-2024 அன்று துபாய் “லேண்ட்மார்க் ஹோட்டல் பனியாஸ் ஸ்கொயர்" வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அயலக தமிழர் வாரிய உறுப்பினரும்,அமீரக திமுக பொறுப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை ஏஜிஎம் பைரோஸ்கான் தொகுத்து வழங்கினார்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை பதவி நீக்க அவசியமில்லை!

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, மார்ச் 7-

சனாதன பேச்சு தொடர்பான வழக்கில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு ஆகியோரை பதவிநீக்கம் செய்ய அவசியமில்லை என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதன் மூலம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, ஆ.ராசா எம்.பி. க்கு எதிரான கோ-வாரண்டோ வழக்குகள் முடித்து வைக்கப்பட்டு உள்ளது.



அண்மையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்றார்.

இந்த மாநாட்டில் பேசிய உதயநிதி ஸ்டாலின், கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படித் தான் இந்த சனாதனம். சனாதனத்தை எதிர்ப்பதை விட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம். சனாதனம் என்றால் என்ன? சனாதனம் என்கிற பெயரே சமஸ்கிருதத்தில் இருந்து வந்ததுதான். சனாதனம் சமத்துவத்திற்கும் சமூக நீதிக்கும் எதிரானது.

சனாதனம் என்பதன் அர்த்தம் என்ன? நிலையானது, அதாவது மாற்ற முடியாதது. யாரும் கேள்வி கேட்க முடியாது என்பதுதான் சனாதனத்திற்குரிய அர்த்தம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும். எதுவுமே நிலையானது கிடையாது எல்லாவற்றுக்கும் நாம் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக உருவான இயக்கம்தான் இந்த கம்யூனிஸ்ட் இயக்கமும், திராவிட முன்னேற்ற கழகமும் என்று பேசினார்.

சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு சனாதனத்திற்கு எதிராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியது பெரும் சர்ச்சையை கிளப்பி இருந்தது. அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே. சேகர்பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்கு எதிராக கோ வாரண்டோ வழக்கு நிலுவையில்இருந்தது.

திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு திருவேற்காட்டை சேர்ந்த மகேஷ் கார்த்திகேயன் என்பவர் சென்னை உயர்மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன், சனாதான ஒழிப்பு மாநாட்டில் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டு பேசியதன் விளைவாகவே தற்போது திராவிட கொள்கைக்கு எதிராக கூட்டம் நடத்த அனுமதி கேட்டு வழக்கு தொடரக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இன்னொரு பக்கம் இதே விவகாரத்தில் கோ-வாரண்டோ வழக்கும் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர் பாபு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா ஆகியோருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டு.. நீதிபதி அனிதா சுமந்த் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்த வழக்கில் கடந்த மாதம் விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சனாதன பேச்சு தொடர்பான வழக்கில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே. சேகர்பாபுவை பதவிநீக்கம் செய்ய அவசியமில்லை என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதன் மூலம் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், பி.கே.சேகர்பாபு, எம்.பி. ஆ.ராசாவுக்கு எதிரான கோ வாரண்டோ வழக்குகள் முடித்துவைக்கப்பட்டு உள்ளன.

பஹ்ரைன் நாட்டில்,

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி - கழகத் தலைவருக்குப் புகழாரம்!

மனாமா (பஹ்ரைன்), மார்ச் 7-

மார்ச் 1, வெள்ளிக் கிழமை அன்று வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில் தலைநகர் மனாமாவில் உள்ள இந்தியன் கிளப்பில் மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் பொறுப்பாளர் முகமது ஹூசைன் மாலிம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுக தொண்டர்கள், தோழமை இயக்கத்தின் தோழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

### திராவிட மாடல் ஆட்சி நாயகர்!

முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களின் பொற்கால சாதனைகளை பற்றி பலரும் பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள்.

“ஏன் வேண்டும் திராவிட மாடல் ஆட்சி”? என்ற தலைப்பில் ஆலோசனைக் குழு தலைவர் கபீர் அகமது பேசுகையில், எல்லோருக்கும், எல்லாமும் கிடைத்திட இந்த திராவிட மாடல் ஆட்சி கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் தமிழ் நாட்டில் நிரந்திரமாக அமைய வேண்டும் என்று கூறினார்.

“மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின்” என்னும் தலைப்பில் துணைத் தலைவர் கருணாநிதி சண்முகம் பேசுகையில், நாட்டில் எழை எளிய மக்கள் பயன் பெரும் வகையில் புதிய பல திட்டங்களை திமுக அரசு தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். “தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி “ என்ற தலைப்பில் பேசிய உறுப்பினர் சேர்க்கைச் செயலாளர் ஆபீத் அலி. “ஒட்டு மொத்த இந்தியாவின் வளர்ச்சியை விட தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சி மிக முன்னேறிய நிலையில் உள்ளது” என்று எடுத்துக் கூறி பேசினார்.

தலைமை உரை நிகழ்த்திய பொறுப்பாளர் முகமது ஹூசைன் மாலிம். 2024 நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றி பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். மேலும் சமூக வலைத் தளத்தில் தி.மு.க. தொண்டர்கள் தொடர்ந்து தி.மு.க ஆட்சியின் சாதனைகளை தொடர்ந்து பதிவு செய்வதுடன்.

வெளிநாடுகளில் வாழும் தொண்டர்கள், தாயகத்தில் வாழும் தங்களின் குடும்பத்தினர்களையும், நண்பர்களையும் தொடர்பு கொண்டு தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க கேட்டு கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி பேசினார்.

வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின், சவூதி அரேபியாவின் துணைப் பொறுப்பாளர் சந்தோஷ் கலந்து கொண்டு, திராவிட மாடல் ஆட்சி மகளிர்களுக்கு மிக பயனுள்ள பல திட்டங்களை தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். குடந்தை ஆரிப் பேசுகையில், “சமூக நீதியை நிலை நாட்டுவதில் முதல்வர் அவர்களின் இந்த திராவிட மாடல் மிகவும் உறுதியாக உள்ளது” என்றார்.

தக்கலை சாம் பேசும்போது, குடும்ப பெண்களுக்கான உரிமைத் தொகை வழங்குவது மூலம், பெண்களின் சுய மரியாதை காக்கப் படுகிறது என்பது எடுத்துக் கூறினார்.

தமிழரசன், சேகர், சோழகர் திருமேனி, அசரி துறை ஆகியோர் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார்கள். மேலும். இந்தியப் பள்ளியின் ஆட்சி மன்றக் குழுச் செயலாளர் ராஜ பாண்டியன், முத்து தீவு தமிழ் சங்கத்தின் செயலாளர் முகமது பைசல். த.மு.மு.க சார்பில் யூசுப் ராஜகிரி. முஸ்லிம் லீக் சார்பில் பேராசிரியர் சுலைமான். ஆகியோரும் கலந்து கொண்டு கழகத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

தொழிலாளர் நலத் துறை செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில் வரவேற்க துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்க, சமூக சேவைச் செயலாளர் மன்னை பிரபா நன்றி கூறினார்.

மயிலை கிழக்குப் பகுதி திமுக சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா!

# வட்டந்தோறும் - கழகக் கொடியேற்றி இனிப்பு - உணவு!

## பகுதிச் செயலாளர் எஸ்.முரளி வழங்கினார்!

சென்னை, மார்ச் 7-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்குப் பகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா 01.03.2024 அன்று வட்டம் தோறும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி கலந்து கொண்டு கொடியேற்றி , இனிப்பு உணவு வழங்கினார்.

124 வது வட்டம் வாழைத்தோப்பு பள்ளி அருகில். A.தாஸ் தலைமையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

124 அ. வட்டத்தில். கிழக்கு மாடவீதியில் மா.பா.அன்பு தலைமயில் அறுசுவை உணவு எஸ்.சரவணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

சித்திரை குளம் அருகில் மா.பா.அன்பு தலைமையில் ஆதி. ஜெகநாதன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது

வி.சி கார்டனில் வழக்கறிஞர் அணி சார்பில் எஸ்.முரளி தலைமையில் பகுதி கழக செயலாளர் பா.முரளி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது

வழக்கறிஞர் விஸ்வநாதன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மா.பா.அன்பு தலைமையில் உணவு வழங்கப்பட்டது.

125 வது வட்டம் கைலாசபுரத்தில் பகுதிச செயலாளர் எஸ்.முரளி தலைமையில் அ.தவனேசன் முன்னிலையில் கொடி ஏற்றி அறுசுவை உணவை பகுதி கழக செயலாளர் எஸ் முரளி வழங்கினார்.

125 அ வட்டம் மயிலை மாங்கொல்லை வெற்றி வேல் தலைமையில் உணவு வழங்கப்பட்டது.

126 வது வட்டம் சிருங்கேரி மடம் சாலையில் கோ.கண்ணன் தலைமையில் அறுசுவை உணவு, 171 வது வட்டம் சீனிவாச புரத்தில் பா.பொன்னுசாமி தலைமயில் இனிப்பு வழங்கப்பட்டது.

171 அ வட்டம் இளைஞர் படிப்பகத்தில் துரை பார்த்திபன் தலைமையில் இனிப்பு வழங்கப்பட்டது.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த அனைத்து வட்டங்களில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் முதல்வர் பிறந்த நாள்!

## மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்த் தலைமையில் மரக்கன்றுகள் நடப்பட்டன!

சென்னை, மார்ச் 7 -

இந்தியா போற்றும் ஒப்பற்ற தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சுற்றுச்சூழலை பாதுகாக்க வருடம் முழுவதும் மரம் நடும் நிகழ்ச்சி முகலிவாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது இந்தநிகழ்ச்சியை காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.ஆர். ஆனந்தன் தலைமையில் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் 12 வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன், வடக்குப் பகுதிச் செயலாளரகள் பி. குணாளன், ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், கே. ஆர். ஜெகதீஸ்வரன், அ. வேலவன், மாமன்ற உறுப்பினர் ஜெ பூங்கொடி, சுற்றுச்சூழல் மாவட்ட நிர்வாகிகள் பா. பிரசாத், உமாசங்கர், , டேனியல் சந்துரு, ராஜன் பெருமாள், காஞ்சி வடக்கு மாவட்ட இடங்களில் பொதுமக்கள் கட்சி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் தன்னார்வ அமைப்புகள் சமுக ஆர்வலர்கள் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் ஆகிய சுப நிர்வாகிகளில் அவர்கள் தொலைபேசி மூலம் சுற்றுச்சூழல் அணியை அணுகினால் இலவசமாக மரம் பாதுகாப்பு வேலி அமைத்து தர முடிவு செய்யப்பட்டுள்ளது. என்பதை மாவட்ட சுற்றுச்சூழல் அமைப்பாளர் கே.ஆர். ஆனந்தன் ஏற்பாட்டில் பொதுமக்கள் கூறும் இடத்திற்கு சென்று மரம் நடப்படும் இதை இந்த வருடம் முழுவதும் நடத்துவது என்று சுற்றுச்சூழல் அணி தீர்மானம் நிறைவேற்றி உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள் சுற்றுச்சூழல் மாவட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் மாணவ மாணவியர்கள் ஆகிய அனைவரும் கலந்து கொண்டனர்.

காஞ்சி வடக்கு மாவட்டத் துணை அமைப்பாளர் சுற்றுச்சூழல் அணி சி. வாசிம் ராஜா, முகலி ம. மணிகண்டன் ஆகியோர் நன்றி கூறினர்.

# ‘நீங்கள் நலமா’ திட்டம்: பொதுமக்களிடம் அமைச்சர்கள் கருத்துக் கேட்கும் காட்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று (06.03.2024), நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் காணொலிக் காட்சி வாயிலாக தொடர்பு கொண்டு கருத்துக்களை கேட்டறிந்தார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று (06.03.2024) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அறையிலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துக்களை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



நேற்று (06.03.2024) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



தமிழ்நாடு மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் உள்ள மின்னகத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ‘நீங்கள் நலமா’ திட்டத்தின் கீழ் பயனாளிகளை தொடர்பு கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் வாயிலாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் மின் சேவைகள் குறித்து நேற்று (06.03.2024) கருத்துக்களை கேட்டறிந்தார். உடன் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு நேற்று (06.03.2024), கூட்டுறவுத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற தூத்துக்குடி, காஞ்சிபுரம், சேலம், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் திருப்பத்தூரிலுள்ள முகாம் அலுவலகத்திலிருந்து தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறிந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று (06.03.2024) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் அவர்கள் நேற்று (06.03.2024) தொடங்கி வைத்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தை முன்னிட்டு பயனாளிகளைத் தொடர்பு கொண்டு துறைரீதியான நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களை கேட்டறியும் திட்டமாகும். அதன் தொடர்ச்சியாக அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று. சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களை தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்து அவர்கள் தேவை குறித்து கேட்டறிந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் நேற்று (06.03.2024), சென்னை முகாம் அலுவலகத்திலிருந்து அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து பொதுமக்களிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துகளை கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீங்கள் நலமா’ திட்டத்தினை தொடங்கி வைத்ததை முன்னிட்டு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் பயன்பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கடலூர், ஈரோடு, நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தொலைபேசி வாயிலாக நேரடியாக தொடர்பு கொண்டு நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார்.



# இடம் பொருள் கலைஞர்

60

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தென்னை நல வாரியம்...**







# தென்னை நல வாரியம்!

## விவசாயிகளின் கண்ணீர் துடைத்த உதவி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கோட்டையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், அவரது உதவியாளராக இருந்த சண்முகநாதன் அவர்களின் அறையில் கலைஞரின் புகைப்படங்கள் மாட்டப்பட்டிருக்கும்.

அதில் ஒரு படம், தென்னை மரத்தில் கலைஞர் லேசாகச் சாய்ந்து நிற்பது போன்ற ஒரு வரவேற்புப் படம் இருந்தது. அந்தப் படத்துக்குக் கீழே, ஔவையாரின் மூதுரைப் பாடல் ஒன்று இடம்பெற்றிருக்கும். அந்தப் பாடல் இது:

***“நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா நின்று தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்”.***

அதாவது, நற்குணமுடைய ஒருவருக்கு நாம் ஓர் உதவி செய்தால், அந்த உதவிக்குப் பதில் உதவியை அவன் எப்பொழுது நமக்குச் செய்வான் என்று ஐயுற வேண்டாம். ஏனெனில், எப்படி ஒரு தென்னை மரமானது, தன் அடிப்பகுதியால் நிலத்திலிருந்து உறிஞ்சிய நீரை, நுனிப் பகுதியால் சுவையுள்ள இளநீராக்கித் தானே தருகிறதோ, அவ்வாறே, அந்த மனிதரும் தகுந்த நேரத்தில் தானாக முன்வந்து நமக்குப் பதில் உதவியைக் கட்டாயம் செய்திடுவார் என்பதுதான் இந்தப் பாடலின் பொருள்.

‘பிறர் நமக்குச் செய்யும் உதவிக்கு நன்றி தெரிவிப்பது நமது கடமை. ஆனால், பிறருக்கு நாம் செய்த உதவிக்கு நன்றி எதிர்பார்க்கக் கூடாது’ என்ற தந்தை பெரியாரின் வழி வந்தவராயிற்றே கலைஞர். அதனால், அவர் எந்தப் பிரதிபலனும் இல்லாமல் தென்னை விவசாயிகளுக்குச் செய்த மாபெரும் உதவி, தென்னை நலவாரியம்.

### தென்னையில் சாதிக்கும் தமிழ்நாடு

‘பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, தென்னையைப் பெத்தா இளநீரு’ என்பது ஒரு பாடல் வரி. பெற்றெடுத்த பிள்ளைகள் கூடக் கைவிட்ட காலத்தில், பெறாமல் வளர்த்த தென்னை, தாகத்துக்காவது இளநீர் தரும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. ஆனால், அதே தென்னையை, கன்றாக நடும்போது அதற்குத் ‘தென்னம்பிள்ளை’ என்று அழைக்கும் நம் மக்களின் அன்பை எப்படி மெச்சுவது?

தென்னிந்தியாவில் தென்னைக்கு மிக முக்கிய இடமுண்டு. இந்தத் தென்னை வளர்ப்பில் கேரளத்துக்கு அடுத்த இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இங்கு சுமார் 4.4 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில், தென்னை சாகுபடி நடக்கிறது. 2022-ஆம் ஆண்டின் ஒன்றிய அரசுத் தரவுகள் படி, தமிழ்நாட்டில் ஒரு ஹெக்டேருக்கு 11,526 தேங்காய்கள் வீதம் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அது தேசிய சராசரியான ஒரு ஹெக்டேருக்கு 9,123 தேங்காய்கள் என்பதைவிட அதிகம்.



நீலகிரி மாவட்டம் தவிர்த்து, ஏறத்தாழ தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் காணப்படும் தென்னையின் அனைத்துப் பாகங்களும் பயன் தரக்கூடியதாக இருப்பதால், அதனைக் ‘கற்பக விருட்சம்’ என்றும், ‘ஆயுள் காலப் பயிர்’ என்றும் அழைக்கிறார்கள். கவனமாகப் பராமரித்து வந்தால் சுமார் நூறு ஆண்டுகள் வரை கூட பலனளிக்கும் இந்தப் பணப் பயிர்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தென்னைக்கு நலவாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பது தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. அந்தக் கோரிக்கை தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் மன்றாடியார் அவர்களது தலைமையில், கலைஞரிடம் எடுத்துச் செல்லப்பட்டது. அவர்களின் கோரிக்கையில் இருந்த நியாயங்களைப் புரிந்துகொண்ட கலைஞர், அதனை நிறைவேற்றும் விதமாக, 2010-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 அன்று ‘தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம்’ அமைத்தார். அந்த வாரியத்துக்கு ராஜ்குமார் மன்றாடியாரையே தலைவராகவும் நியமித்தார்.

### தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்

2010-இல் தென்னை நலவாரியம் தொடங்கும் முன்பே, 2000 ஆண்டு ஆகஸ்ட் 3 அன்று ‘தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்’ என்ற ஓர் அமைப்பை கலைஞர் ஏற்படுத்தினார். தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோயிலிருந்து காலத்தே காப்பாற்றுதல், தென்னைச் சாகுபடியை மேம்படுத்துதல், தென்னைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய நலன், தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு இந்தக் குழுமம் செயல்பட்டது.

### ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய்

தமிழ்நாடு முழுவதும் உள்ள தென்னை விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, நோய்ப் பாதுகாப்பு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து வகையான தேவைகளுக்கும் பயிற்சி, வழிகாட்டுதல் என வாரியம் செயல்பட்டது.

அந்த நேரத்தில், தேங்காய் எண்ணெயின் பயன்பாடுகள் பற்றியும், பாமாயில் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் கார்ப்பரேட் கம்பெனிகள் தேங்காய் எண்ணெய் பற்றித் தவறாகப் பரப்பியிருந்த தகவல்களையும் ஆதாரப்பூர்வமாக மறுத்து, அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் எழுதிய புத்தகத்தை ராஜ்குமார் மன்றாடியார் அவர்கள் கலைஞரிடம் கொடுக்க, அதை உடனே படித்து முடித்து விட்டு தென்னை வாரியத் தலைவர், விவசாயத் துறை அமைச்சர், விவசாயத்துறை மற்றும் எண்ணெய் வித்துத் துறைச் செயலாளர் ஆகியோருடன் ஆலோசித்துவிட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாகத் தேங்காய் எண்ணெய் விநியோகிக்கச் சொல்லி உத்தரவிட்டார் என்று தி.மு.க. சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தனது **‘நான் கண்ட கலைஞர்’** என்கிற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

“மேலும், சத்துணவுக் கூடங்களில் சமைப்பதற்கு, சுத்தமான தேங்காய் எண்ணெய் பயன்படுத்தவும் உத்தரவு பிறப்பித்தார்கள். குழந்தைகளுக்குக் கூடுதல் சத்தான ஆரோக்கியமான உணவுக்கும் வழி வகுத்தார். கலைஞர் அவர்களின் இந்த முடிவால், தென்னை விவசாயிகளுக்கும் கூடுதல் வருவாய் கிடைத்தது” என்கிறார் கார்த்திகேய சிவசேனாபதி.

### பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகம்

தென்னை நல வாரியம் அமைத்த கையோடு, 2011-ஆம் ஆண்டு பிப்ரவரி 27 அன்று தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் 8 கோடி ரூபாய் மதிப்பில் தென்னை வணிக வளாகம் அமைக்கப்பட்டு, கலைஞர் அவர்களால் காணொலி மூலம் திறந்து வைக்கப்பட்டது. தென்னையை மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்ற, இந்த வணிக வளாகம் உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அடுத்து வந்த அரசு, அந்த வளாகத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் சீரழித்தது.

அந்த வணிக வளாகத்தின் திறப்பு விழாவில், கலைஞர் இப்படிச் சொன்னார்: “தமிழ்ப் பெருமக்கள், தமிழகத்திலே எத்துணைச் சிறப்பாக ஒவ்வொரு நாளும் தமிழகத்தின் எதிர்கால எழிலை, எதிர்கால ஏற்றத்தை, எழுச்சியை நினைத்தவாறு இந்த அரசு நடைபெறுகிறது என்பதை எண்ணிப் பார்த்து, தங்களுடைய ஆதரவைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கேட்கின்ற ஆதரவு கட்சியின் பெயரால் அல்ல... ஆட்சியின் பெயரால்... தமிழ்ச் சமுதாயத்தின் பெயரால்..!”

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச சக்திகளைத் தோற்கடித்து, ‘நாற்பதும் நமதே’ என்று வெற்றி முழக்கம் செய்வதுதான் கலைஞருக்கு நாம் செலுத்தும் நன்றியாக இருக்கும்.

**...வலம் வருவோம்**

### தெற்கு வாழ்கிறது, வழிகாட்டுகிறது!

ஒரு காலத்தில் ‘வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’ என்றார் அண்ணா. ஆனால், இன்றைக்கோ “இந்தியாவின் எதிர்காலத்தைப் பார்க்க, தெற்கே செல்லுங்கள்” என்ற தலைப்பில் ‘கவர் ஸ்டோரி’ தீட்டியிருக்கிறது ‘தி எகனாமிஸ்ட்’ எனும் சர்வதேச இதழ். இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் தென் மாநிலங்கள் 20 சதவிகிதம் மட்டுமே பங்கு வகிக்கின்றன. ஆனால், இந்தியாவின் வளர்ந்த மற்றும் நகரமயமான மாநிலங்களாக இவை இருக்கின்றன. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலரும் தெற்கு நோக்கியே பறக்க விரும்புகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் ஒட்டுமொத்த அந்நிய முதலீடுகளில் 35 சதவிகிதத்தை ஈர்த்திருக்கின்றன. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தென் மாநிலங்கள் மட்டுமே 31 சதவிகிதப் பங்கைக் கொண்டிருக்கின்றன. சிறப்பான கல்வி, அரசு நிர்வாக வசதிகளையும் இந்த மாநிலங்கள் கொண்டுள்ளன.

இந்தியாவின் மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 46 சதவிகிதம் தென் மாநிலங்களுக்குச் சொந்தமானது. புத்தாக்கத் தொழில் நிறுவனங்களில் (ஸ்டார்ட் அப்) ‘யுனிகார்ன்’ அங்கீகாரத்தை எட்டிய நிறுவனங்களில் 46 சதவிகிதத்தை தென் மாநிலங்களில் இருந்து இயங்குபவை. தகவல் தொழில்நுட்ப மென்பொருள் ஏற்றுமதிச் சேவையில் 66 சதவிகிதம் தென் மாநிலங்கள் கொண்டிருக்கின்றன. உலகளாவிய தணிக்கையாளர்கள், வழக்கறிஞர்கள், வடிவமைப்பாளர்கள், கட்டடக் கலைஞர்கள் மற்றும் பிற வல்லுநர்கள் தென்னிந்தியாவில்தான் 79 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள் என்று தெற்கின் புகழை அடுக்கியிருக்கிறது அந்த இதழ்.

நமது முதலமைச்சர் கூறியதைப் போல ‘தெற்கு வாழ்கிறது, வடக்கையும் வாழ வைக்கிறது, வழிகாட்டுகிறது’!

### ஃப்ளாஷ்பேக்



அருணா ராமகிருஷ்ணன்



**நல்ல நேரம்!**

1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 அன்று சென்னை பெரியார் திடலில் எனது பெற்றோர் ராமகிருஷ்ணன்- உஷா ஆகியோருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் முன்னிலையில், சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. திராவிட உணர்வுடன் கழகப் பணியாற்றிய என் தந்தை, நாளிதழில் கட்சித் தொண்டர்களுக்கு அழைப்பு விடுக்க, ஆன்மிக நம்பிக்கை கொண்ட பெண் வீட்டார் சுபமுகூர்த்த நேரம் குறிப்பிட்டு, திருமண அழைப்பிதழை தலைவர் கலைஞரிடம் வழங்கினர். திருமணம் முடிந்த பிறகு வாழ்த்துரை வழங்குவதாக இருந்த கலைஞர் அவர்கள், தனது உரையை முன்னரே தொடங்கி முடிக்க, அழைப்பிதழில் குறிப்பிட்ட நல்ல நேரம் கடந்துபோனது. பின்பு மாலை எடுத்து மணமக்களுக்குக் கொடுத்து “இருமனம் அன்போடு சங்கமிக்கும் திருமண பந்தம் துவங்கும் நேரம் அது நல்ல நேரமே” என்று மணமக்களை வாழ்த்தி இருக்கிறார்.

**–அருணா ராமகிருஷ்ணன், கொளத்தூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**திட்டங்கள் உதயம்!**

1969-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி முதல், தனது ஒவ்வொரு பிறந்த நாளிலும், கழக ஆட்சிகளில் மக்கள் நலப்பணித் திட்டங்கள் அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் கலைஞர். வீர தீர செயல்களுக்குத் தங்கப்பதக்கம், அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், கருணை அடிப்படையிலான வேலை, கை ரிக்‌ஷா ஒழிப்பு, கண்ணொளித் திட்டம், விதவை மறுமணத் திட்டம், தொழுநோய் - பிச்சைக்காரர் நலவாழ்வு, காவல் ஆணையங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட பல திட்டங்கள் அவர் பிறந்தநாளின்போது உதயமானவை.

### திராவிடத்தால் வாழ்கிறோம்

410

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131